THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

பக்கங்கள் -28
வார சஞ்சிகை
ஏப்ரல் 10 - ஏப்ரல் 16, 2013
April 10 - April 16, 2013
30.00



## கரையை உடைக்கும் மஞ்சள் அலைகள்.

## தீர்வில்லாத மீள் குடியமர்வும் காணிப்பிரச்சினையும்!



## பொறுப்புக் கூறுவதற்கான உந்துதல்



உபஹார இன்டர்நெட்
அரச சேவைக்காக

இந்த புதுவருட காலத்தில் அரச சேவையிலுள்ள மொபிடெல் உபஹார பாவனையாளர்களான உங்களுக்கு

5GB தரவுப் பொதி டொங்கல் இலவசம்
மாதாந்தம் ரூ.299/- மட்டுமே

Sri Lanka Telecom Mobitel

1717




Hero
சித்திரைப் புதுவருடத்திற்கு
ஹீரோ உந்துருளியுடன்
டைட்டன்
கைக்கடிகாரம்
இலவசம்
HF-DAWN
PUBLIC'S NEW TRANSPORT
• 100cc
ரூ.159,990
HF. Deluxe
The Deluxe Bike for the Progressive man
• 100cc
ரூ.189,990
Splendor PRO
Trusted by millions
• 100cc
ரூ.192,990
ரூ.203,500
SPLENDOR NXG
• 100cc
ரூ.206,990
Passion PRO
style unlimited
• 100cc
ரூ.211,990
ரூ.218,990
GLAMOUR
SIMPLY MAGNETIC
• 125cc
ரூ.238,500
ரூ.249,990
SIMPLY SUPER
Splendor
• 125cc
ரூ.220,990
Achiever
Solid like you
• 150cc
ரூ.252,990
• 150cc
ரூ.288,000
ரூ.297,990
Hunk
BECAUSE MUSCLES MATTER
• 150cc
ரூ.289,990
ரூ.299,990
BEYOND THE SAID AND THE DONE
KARIZMA ZMR
• 225cc
ரூ.412,990
100cc உந்துருளிகளுக்கு 2 வருடங்கள் அல்லது 30,000 கி.மீ வரை உத்தரவாதம்.
125cc, 150cc, 225cc உந்துருளிகளுக்கு 3 வருடங்கள் அல்லது 40,000 கி.மீ வரை உத்தரவாதம்.
இச்சலுகை ஏப்ரல் 30 ஆம் திகதி வரை மாத்திரமே.
இச்சலுகை ப்ளஷர் ஸ்கூட்டர்களுக்கு ஒவ்வாது.
R.G.ட்ரேடர்ஸ் அபான்ஸின் அங்கீகாரம் பெற்ற முகவர்
யாழ்ப்பாணம் - இல: 285, 287 ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2226185 • யாழ்ப்பாணம் -ப்லஷர் காட்சியறை இல: 291, ஸ்டேன்லி வீதி, யாழ்ப்பாணம்: 021 2227667 • நெல்லியடி - இல: 84, பருத்தித்துறை வீதி, நெல்லியடி: 021 2262585 சாவகச்சேரி - இல: 5A, கண்டி வீதி, சாவகச்சேரி: 0212270185
நாவட்குளி - இல:50, கண்டி வீதி, நாவட்குளி சந்தி, நாவட்குளி சுன்னாகம் - 12, 14, KKS வீதி, சுன்னாகம்: 021 2241985
கிளிநொச்சி - கரடிபோக்கு சந்தி, A9 வீதி, கிளிநொச்சி: 021 2280185 • பளை - இல: A9 வீதி, பளை: 0777 340056
Abans

# கரையை உடைக்கும் மஞ்சள் அலைகள்.



**சந்திரசேகர ஆசாத்**

இவை இலங்கைப் படையினருக்கும் விடுதலைப் புலியினருக்கும் இடையே இடம்பெற்ற இறுதிப்போரின் கடைசி நாட்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் விமானத் தாக்குதல் களினாலும், எறிகணை வீச்சுக்களாலும் கொல்லப்பட்டும், படுகொலைசெய்யப்பட்டும், உயிருக்குப் போராடிக் கொண்டும் இருந்தனர்.

போர் வலயத்திற்கு வெளியே உள்ள தமிழ் மக்கள் தங்கள் உறவுகளின் கதியை அறியத் தவித்துக் கொண்டிருந்தனர். ஓரளவு குறைந்தபட்சமாவது தகவல்களைப் பெற அவர்கள் பீ.பீ.சியின் தமிழோசை யையே நம்பியிருந்தனர்.

தமிழோசையின் ஒலிபரப்பாளர் இலங்கை இராணுவப் பேச்சாளரிடம் பெருந்தொகையான மக்களின் இழப்புக்கள் பற்றிக் கேள்வி எழுப்புவார். அதற்கு இராணுவப் பேச்சாளர் தமது படையினர் ஒழுக்கமும், கட்டுப்பாடும் மிக்கவர்கள் எனவும், கனரக ஆயுதங்களையோ, விமானத் தாக்குதல்களையோ அவர்கள் மேற்கொள் வதில்லை எனவும் அடித்துக் கூறிவிடுவார். தமிழோசை ஒலிபரப்பாளர் உண்மைகளை வெளிக்கொண்டு வரும் வகையில் மேலும் மேலும் கேள்விகளை எழுப்பும் போது இராணுவப் பேச்சாளர் புலிகளால் தாக்கப்பட்டே மக்கள் கொல்லப்படுகிறார்கள் எனக் கூறிவிடுவார்.

இன்றும் கூட 'சனல்-04' வெளியிட்ட ஆவணப்படங்கள், ஏனைய மனிதஉரிமை நிறுவனங்களின் குற்றச்சாட்டுக்கள் என்பன முன்வைக்கப்படும் போது அது தேச விரோத சக்திகளாலும், புலம்பெயர் தமிழர்களாலும், வெளிநாட்டு சதிகாரர்களாலும் புனையப்பட்டவை எனச் சொல்லி விடுவதுண்டு.

இலங்கையின் பாதுகாப்புத் தரப்பைப் பொறுத்தவரையில் மற்றவர்கள் தாங்கள் சொல்வதை நம்புகிறார்களா இல்லையா என என்றுமே அக்கறைப்படுவதில்லை. தொடர்ந்தும் பொய்களைச் சண்டித்தனப் பாணியில் வெளியிடுவதையே தங்கள் வழிமுறையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர் என்பது உலகறிந்த உண்மை. இவற்றின் காரணமாகவே இலங்கை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையில் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருப்பதும்,. சர்வதேச அளவில் அவமானங்களைச் சுமக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அதே வழிமுறையை இப்போது பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்பான பொதுபலசேன கையில் எடுத்துள்ளது. தங்கள் வார்த்தைகளைக் கட்டாயமாக எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பாணியில் மறுதலிப்புக்களை வெளியிட்டு வருகிறது.

இதில் ஆச்சரியப்பட வேண்டிய தேவை எதுவுமில்லை. ஏனெனில், ஏற்கனவே பாதுகாப்புச் செயலருக்கும் இந்த அமைப்புக்களுக்கும் இடையேயான நெருக்கமான உறவு வெளிப்பட்டுள்ளது.

ஒரு முறை பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடம் அல்ல எனவும், எவரும் இந்த நாட்டின் எந்தப் பகுதிக்கும் உரிமை கொண்டாட முடியாது எனவும் தெரிவித்திருந்தார். அதே கருத்தைக் கண்டியில் வைத்து பொதுபலசேன மேலும் வலுப்படுத்தி வெளியிட்டுள்ளது. அதாவது இலங்கை ஒரு சிங்கள பௌத்த தேசம் எனவும் அதற்கேற்ற வகையில் ஏனைய இனங்களின் நடைமுறை அமைய வேண்டும் எனவும் கூறியிருந்தது. அதற்கமைய அவர்கள் முஸ்லிம்களின் ஹலால் உணவுமுறைக்கெதிராகவும், முஸ்லிம் பெண்களின் பாரம்பரியமான 'ஹபாயா' ஆடைகளுக்கு எதிராகவும் போராட்டங்கள் நடத்தியமையை நாம் அறிவோம்.

மன்னம்பிட்டிய தபாலகத்தில் கடமையாற்றும் இரு முஸ்லிம் பெண்களின் ஆடைகளைக் களைய மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் முயன்ற போது அவர்கள் தபாலகத்துக்குள் தப்பியோடி விட்டனர். இச்சம்பவங் களுக்கெதிராக வன்மையாகக் குரல்கொடுக்கத் தவறிய முஸ்லிம் அரசியல் தலைமைகள் அப்பெண்களின் பாதுகாப்பு என்ற பெயரில் அவர்களை முஸ்லிம் பகுதியான ஓட்டமாவடிக்கு இடமாற்றம் செய்ய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ஆனால், முஸ்லிம் பெண்களின் ஆடைகளைக் களைய முற்பட்டவர்கள் கண்டுபிடிக்கப் படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை. இவ்வாறே எம்பிலிப்பிட்டியவில் ஹலால் உணவு விற்பனை செய்த இரு முஸ்லிம்களின் வியாபார நிலையங்கள் அடித்து நொருக்கப்பட்டன. பட்டப்பகலில் பகிரங்கமாக நடந்த போதும் எவரும் கைது செய்யப்படவில்லை.

இப்படியாக பொதுபலசேனவின் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு எனவும், ஏனைய இனங்களின் நடைமுறைகள் அதற்கமைவாகவே இருக்க வேண்டும் எனவும் வெளியிடப்பட்ட கொள்கைகளுக்கு அமையப் பல வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன.

அவற்றிற்குத் தார்மீக அங்கீகாரத்தைப் பிரகடனம் செய்யும் வகையில் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பொதுபலசேனவின் காரியாலயத்தைத் திறந்து வைத்துள்ளார்.

இப்படியான ஒரு சூழ்நிலையில் பொரஸ்பமுவ பகுதியில் உள்ள ஒரு முஸ்லிம் ஆடை வர்த்தக நிலையத்தின் களஞ்சியசாலையும், வாகனங்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. இதில் பலர் காயப்படுத்தப் பட்டதுடன் ஏராளமான பொருட்களும் சேதப்படுத்தப்பட்டன. சம்பவத்தைப் படம்பிடித்த ஊடகவியலாளர்களும் சம்பவ இடத்தில் பொலிசார் நின்றிருந்த போதும் அதனைத் தடுக்க அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. பின்பு அதிரடிப்படையினர் வந்த பின்பே நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. உடனடியாக எவரும் கைது செய்யப்படவில்லை. பின்பு சிலர் கைது செய்யப்பட்டனர். இறுதியாக இரு பிக்குகள் பொலிசில் சரணடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தமக்கு எவ்வித சம்பந்தமும் இல்லையெனவும், இது தேசவிரோத சக்திகளினதும், அந்நிய நாடுகளின் சூழ்ச்சிக்காரரினதும் சதியெனவும் பொதுபலசேன தெரிவித்துள்ளது. இது புலம்பெயர் தமிழர் களையும், அரச சார்பற்ற நிறுவனங்களையும் குற்றம் சாட்டத் தவறவில்லை.

அதாவது இராணுவ, பொலிஸ் ஊடகப்பேச்சாளர்கள் பாணியில் மற்றவர்கள் நம்புகிறார்களா இல்லையா என்பது பற்றிய கவலையேயின்றி அது கருத்து வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் இடம்பெறுவதற்கு முன்பு கண்டியில் வைத்து பொதுபலசேனவின் பொதுச்செயலாளர் கொழும்பு புறநகர்ப் பகுதியில் முஸ்லிம் நிறுவனம் ஒன்றில் சிங்களப் பெண்கள் வேலைக்கமர்த்தப்பட்டு துன்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்திருந்தார். எனினும் அது தொடர்பாக சிங்கள மக்கள் வன்முறைகளில் இறங்க வேண்டாம் என 'மணியண்ணை அடியாதை'' என்ற பாணியில் கேட்டிருந்தார்.

அடுத்தடுத்த நாளில் மேற்படி ஆடை விற்பனை நிலையத்தின் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. நான்கு பிக்குகள் தலைமையிலேயே இந்த வன்முறைகள் இடம்பெற்றதாகச் செய்தியாளர்களும், கண்கண்ட சாட்சிகளும் தெரிவித்திருந்தனர். அது மட்டுமன்றித் தாக்குதல்களை நடாத்தியவர்கள் அதிரடிப் படையினர் வந்ததும் அருகில் உள்ள விகாரைக்குள் புகுந்து கொண்டனர்.

உடனடியாகவே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இது தொடர்பாக விசாரிக்க அமைச்சரவையைக் கூட்டும்படி ஜனாதிபதியிடம் கோரியிருந்தார். ஜனாதிபதியோ இது தொடர்பாக அரசாங்கக் கட்சிக் குழுக் கூட்டத்தில் கதைக்கும்படி கூறியிருந்தார். ஆனாலும், அமைச்சரவை கூட்டப்பட வேண்டும் என நீதி அமைச்சர் வலியுறுத்தினார்.

அதேவேளையில், அமைச்சர் ரிசாட் பதியுதீன் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பதவி விலகத் தயாரெனவும், வீதியில் இறங்கிப் போராடப் போவதாகவும் சவால் விட்டார்.

அதையடுத்து மேற்படி சம்பவம் தொடர்பாக ஆறு பேர் கைதுசெய்யப்பட்டனர். பொதுபலசேன இச்சம்பவத்திற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையெனவும் அறிவித்தது.

இப்போது நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆட்கடத்தலைத் தடுப்பது தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா சென்று விட்டார். அமைச்சர் ரிசாட் பதியுதீன் இலங்கைத் தேயிலையை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பாக சீனப்பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துகிறார்.

இனி பொரஸ்பமுவ சம்பவம் முஸ்லிம் தலைவர்களைப் பொறுத்தவரை ஆறின கஞ்சிதான். வழமைபோல் இன நல்லிணக்கத்தைக் காப்பாற்ற முஸ்லிம்கள் அமைதி காக்கவேண்டியது தான். ஆனால், பொதுபலசேன தன் மறுப்பறிக்கையில் தெரிவித்த சில கருத்துக்கள் முஸ்லிம்கள் மட்டுமன்றித் தமிழர்களும் கவனத்தில் கொள்ளவேண்டியவை ஆகும்.

அங்கு நடைபெற்ற வன்முறைகள், புலம்பெயர் தமிழர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் சூழ்ச்சிகள் எனவும் நாட்டில் இன மோதலை ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் சதியெனவும், பிக்குகள் அதில் ஈடுபடவில்லையெனவும் பிக்குகள் போல் வேஷம் இட்ட சிலரே அதில் ஈடுபட்டனர் எனவும் அந்த மறுப்பறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அப்படியானால் இச்சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டவர்கள் தேசவிரோத சக்திகளின் ஏற்பாட்டில்தான் வன்முறையில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரிக்கப்படுவார்களா? சரணடைந்த இரு பிக்குகளும் பிக்குகள் போல் வேஷமளித்தவர்கள் என்றால் அவர்கள் மீது எப்படியான நடவடிக்கை எடுக்கப்படும்?

பள்ளிவாசல்களை இடிப்பதில் முன்னின்று செயற்பட்ட விகாராதிபதிகள், பிக்குகள், பிக்குகள் போல் வேஷமளித்த தேச விரோதிகள் நாட்டில் நிலவுவதாகக் கூறப்படும் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் குழப்பும் வகையில் செயற்படும் இவர்களில் யாராவது பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்களா?

அதேவேளையில் தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி வடமாகாண சபைத் தேர்தல் நடாத்தப்படக் கூடாது எனவும், அது தமிழ் ஈழம் கொடுப்பதற்கு சமமாகிவிடும் எனவும் சித்திரைப் புத்தாண்டின் பின் வடமாகாணசபைத்தேர்தல் நடாத்தப்படுவதற்கு சிங்கள மக்களை அணிதிரட்டிப் போராடப் போவதாகவும் தெரிவித்துள்ளது.

ஜனநாயக வழிமுறையான தேர்தலை நடத்த வேண்டாம் எனப் போர்க் கொடி தூக்கும் இந்த வன்முறையாளர்கள் கைது செய்யப்படுவார்களா? ஜனாதிபதி சொல்வார் அது அவர்களின் கருத்துச் சுதந்திரம் என. பாதுகாப்புச் செயலரோ அவர்களின் அடாவடித்தனங்களுக்கு ஆதரவு வழங்குவார்.

1958 ஆம் ஆண்டு இனக்கலவரத்தைத் தலைமை ஏற்று நடத்திய இந்த மஞ்சள் அலை காலத்திற்குக் காலம் ஓங்கியடித்து கரையை உடைத்து, பேரழிவுகளை ஏற்படுத்தி வருகிறது. சில சமயங்களில் இது ஓய்ந்து கிடப்பது போல் தோற்றமளித்தாலும் அது புயலுக்கு முன்னான அமைதியென்பது தான் வரலாறு.

ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, தேசப்பற்றுள்ள பிக்குகள் முன்னணி, சிங்கள ராவய என இந்த மஞ்சள் அலை வெவ்வேறு வடிவங்களில் தோற்றமளித்த போதிலும் இதன் நோக்கம் சிங்கள பௌத்த மேலாதிக்க சர்வாதிகாரம் என்பது தான். அடிமைப்படுத்துவது முடியாவிட்டால் அழிப்பது தான் இவர்களின் ஒரே வழிமுறை.

இந்த மஞ்சள் அலைகள் கரையை உடைத்துப் பேரழிவுகளை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்குள்ள ஒரே வழி தமிழ் முஸ்லிம் ஐக்கியம் ஒன்றுமட்டுமே. ஆனால், சில முஸ்லிம் அரசியல்வாதிகள் பிடிவாதமாக இதை உணர மறுத்து அரசைத் திருப்திப்படுத்தும் வகையில் தமிழ் முஸ்லிம் உறவைச் சீர்குலைக்க முயன்று வருகின்றனர்.

மஞ்சள் அலைகள் இவர்களைக்கூட விட்டு வைத்துப் போவதில்லை என்பதை இவர்கள் உணர அதிக நாட்கள் எடுக்கப்போவதில்லை என்பதன் அறிகுறிகள் இப்போதே தெரிய ஆரம்பித்து விட்டன.

# 'அம்மா காத்திருக்கக் கூடும்'

## நூல் மீதான ஒரு பார்வை

அக்கரைப் பச்சையை எதிர்பார்த்து, இக்கரை மீது காத்திருப்பவர்களின் மீது, அக்கறை கொண்டு ஆக்கப் பட்ட ஒரு வித்தியாசமான படையல் முல்லைத் திவ்வியனின் 'அம்மா காத்திருக்கக் கூடும்.' அட்டை யிலுள்ளவாறே இது ஒரு க(வி)தைத் தொகுதி. கவிதை என்றால் அதில் 'கவி' யும் இருக்கும், 'கதை' யும் இருக்கும், 'விதை'யும் இருக்கத்தானே செய்யும். இங்கும் இவர் எடுத்துக் கொண்ட (குறுங்) கதைகளிலும், கவிதைகளிலும் ஒரே கரு/விதை இருப்பதும் உற்று நோக்கத் தக்கது. ஒரே கருவைக் கதை யாகவும், கவிதையாகவும் தந்துள்ளமையைப் பரக்கக் காணமுடிகிறது.

'தோழிக்கு ஓர் ஆத்மாவின் கடிதம்' ஒரு சோகத்தை மனதில் இழையோட விட்டாலும் தற்கால நிலைமையை ஒரு ஆத்மாவின் பார்வையில் முன்வைக்கின்றது. நடந்தவை யெல்லாம் கனவாய்ப்போய், மீண்டும் மரம் துளிர்க்காதா என்ற ஏக்கம் பலருக்கும் உள்ளது போல அவருக்கும்... ஆனாலும், தன் ஆதங்கத் தைக் கவிதையாய் வடித்து ஆறுதல் பெறுகின்றார். அந்தக் கவிதையைப் படிக்கும் வாசகர்களுக் கும் ஒரு ஆறுதலைத் தொற்றிக் கொள்ளச் செய்கின்றார்.

படிக்க அவாக் கொண்ட ஏழைப் பிஞ்சின் ஏக்கம், கவிதை படிப்போரின் மனதைப் பிழிந் தெடுக்கும். ஆனாலும், ஏக்கங்கள் ஏக்கங்களாகவே போய்விடுவன வாக, ஒரு விடிவிற்கு வழிகாட்டலின்றிக் கவிதைகள் முற்றுப் பெறுவது ஒரு மாற்றத் தைக் கொண்டு வராது. ஆனாலும் 'அந்தக் குருவிகளைப் பார்' கவிதை தங்கள் முயற்சியாலும், ஒன்றுபட்ட எழுச்சியாலும் மீண்டும் வசந்தம் வீசுவதனையும் சுட்ட மறுக்கவில்லை.




'உயர்ந்த உறவு' கவிதையில் மொட்டை மரமாய் நின்றாலும் கற்பகதரு - பறவைகளுக்கு இருப்பிடமாவதன் ஊடாக உயர்ந்து நிற்பதனைக் காட்டுகின்றார்.

இயலாமை இருப்பினும் ஒரு நம்பிக்கை ஒளிக்கீற்றை ஆங்காங்கே பரவ விடுவதன் மூலம் நம்பிக்கைகளையும் தருகின்ற கவிதைகளைப் படைத்துள்ளார்.

அகதியாய் நாடு விட்டு நாடு போனாலும், 'நமது ஊர் மாதிரி வருமா?' என்ற ஏதோ ஓர் சோகத்தையும் இத்தொகுப்பு சொல்லி நிற்கின்றது.

இளைஞர்களது உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் காதல் தவிப்புக் கவிதைகளும் கலந்து ஒரு வித்தியாசமான படையலாக ஒரு புது அனுபவத்தை இவரது இத்தொகுப்பில் காணலாம்.

**நீ.செ.செல்வதாசன்**

# பின்நவீனத்துவம் இன்று தமிழ்ச் சூழலில் இறந்துவிட்டதா?

உண்மையில் பின்நவீனத்துவம் மரணம் அடைந்துவிட்டதா? ஆமாம் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. இருக்கும் ஒரு பொருள் இல்லா மல் போவது தான் மரணம் என்ற குறுகிய பார்வையில் பார்க்காமல், மரணம் என்பதை மாறுதல் என்று விரிந்த பார்வையுடன் பார்க்கும் போது பின்நவீனத்துவம் மரணம் அடைந்துவிட்ட உண்மையை நாம் புரிந்துகொள்ள முடியும்.

பஞ்ச பூதங்கள் ஓரிடத்தில் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒன்று சேரும்போது அதை டைனோசர் என்றோ மனிதன் என்றோ அழைக்கின்றோம். அவை தனித்தனியே பிரிந்து செல்லும் நிகழ்ச் சியை மரணம் என்கின்றோம். மீண்டும் அவை ஒன்று சேரும்போது அது பிறப்பு என்று அழைக் கப்படுகிறது. ஆக, பஞ்ச பூதங்கள் ஒன்றாகச் சேர்ந்த போது டைனோசர் உருவானது. பஞ்ச பூதங்கள் பிரிந்துபோன போது டைனோசர் மரண மடைந்தது. அப்போது பிரிந்த பஞ்ச பூதங்கள் மீண்டும் ஒன்று சேர்ந்த போது மனிதன் தோன் றினான். எனவே, டைனோசர் பஞ்ச பூதங்களாகப் பிரிந்த போது அதிலிருந்து பிரிந்து வந்த கால்ஷியம் அணுக்கள் என் எலும்பில் இருக்கின்றன. இதர அணுக்கள் மனுஷ்ய புத்திரன், ஜெயமோகன் போன்றோரின் உடல்களில் இருக்கின்றன. இது டைனோசரின் மரணமா அல்லது மாற்றமா?

தொண்ணூறுகளில் பின்நவீனத்துவம் தமிழுக்கு அறிமுகமானது. காப்ரியல் கார்சிகா மார்க்வெஸ், ஜார்ஜ் லூயிஸ் போர்ஹே, இதாலோ கால்வினோ, டொனாலட் பார்தல்லாமே போன்ற அயல்நாட்டுப் பின்நவீன எழுத்தாளர்களின் கதைகள் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு, பின்நவீன புனைகதைகள் தமிழுக்குப் பரீட்சயமாயின. அந்தப் பாதிப்பில் தமிழிலும் எழுத்தாளர்கள் அது போல எழுத முயற்சி செய்தார்கள். சில்வியா, தி. கண்ணன், ரமேஷ் பிரேம், சாரு நிவேதிகா போன்றோர் மையம் நீக்கிய, நேரற்ற எழுத்தில் பின்நவீனச் சிறுகதைகளை எழுதி ஒரு தொடக்கத்தை நிகழ்த்தினார்கள்.



அந்தத் தொடக்கம் ஜெய மோகன், எஸ். ராமகிருஸ்ணன், எம்.ஜி. சுரேஷ் போன்றோரால் அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பது முக்கியமானது. சில்வியா போன்றோரால் எழுதப்பட்ட பின்நவீனக் கதைகள் மரணமடைந்து, ஜெயமோகன், எஸ். ராமகிருஸ்ணன் போன்றவர்களால் இன்னொன்றாகப் பிறப்பெடுத் திருக்கிறது. விஷ்ணுபுரம், உபபாண்டவம், நெடுங்குருதி போன்றவை நவீன பிரதிகள் அல்ல. அவை பின்நவீனத்துவக் கூறுகள் உள்ள பிரதிகள். அவை இந்துவாவைக் கேள்விக்குள்ளாக்கவில்லை எனவே, அப்படிப் பின்நவீனம் பிரதிகள் ஆகும் என்று சட்டைக் கொலரைப் பிடித்துக் கேட்பது அழகியல் ஃபாசிஸம் ஆகும்.

மையத்தைத் தகர்ப்பது பின்நவீனத்துவம் எனில், ஒரு பின்நவீனக் கதை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முரட்டுப் பிடிவாதம் பிடிப்பதும் ஒரு புதிய மையத்தைக் கட்டமைக்கும் முயற்சி அல்லவா? எனவே, பின்நவீனக் கூறுகளைக் கொண்டுள்ள கதைகளை நாம் பின்நவீனக் கதைகளாக வரித்துக் கொள்வதில் தவறில்லை. சுந்தர ராமசாமியுடன் நவீன இலக்கியம் ஒரு முடிவுக்கு வந்தது. ஜெயமோகன், எஸ். ராம கிருஷ்ணன், ரமேஷ் பிரேம் போன்றோரால் தமிழ்ப் பின்நவீன எழுத்து முன்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறது. தலித்தியம், பெண்ணியம், மூன்றாவது பாலினம் போன்றவை பின்நவீனத்துவம் நமக்கு அளித்த கொடைகள். இன்றைய திகதியில் அவை உச்சநிலையில் இருக்கின்றன. பின்நவீனத்துவம் இறந்துவிட்டது என்பதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், தலித்தியமும், பெண்ணியமும் கூட சேர்ந்து உடன்கட்டை ஏறிவிட்டன என்று கொள்ளலாமா?

**எம். ஜி. சுரேஷ்**

# பொறுப்புக் கூறுவதற்கான உந்துதல்.

இறுதிப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான அழுத்தங்கள் தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில் சிறீலங்கா அரசாங்கம் தனது போர் வெற்றியின் நான்காவது நினைவினைக் கொண்டாடுவதில் மும்முரமாக ஆயத்தமாகி வருகின்றது.

இவ்வாறு பொறுப்புக் கூறும் கடமையினைச் சரிவர நிறைவேற்றாது சிறீலங்கா அரசாங்கம் ஒரு போதுமே முரண்பாடுகளிலிருந்து முழுமையாக மீண்டெழவே முடியாது என்பதை எதிர்த்தரப்பு தமிழ் கட்சிகளும் அத்துடன் மனிதஉரிமைக் குழுக்களும் குறிப்பிட்டு வருகின்றன.

கடந்த காலக் கலவரங்களினால் பெருமளவில் மிக மோசமாகப் பாதிப்படைந்தவர்களாகத் தமிழர்களே இருப்பதால் அவர்கள் நீதிக்காகவும், நியாயத்திற்காகவும் தொடர்ந்து ஓயாது உந்துதலை வழங்கிக் கொண்டே இருப்பார்கள் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்து வருகின்றது.

யுத்தத்தின் போதும், அதன் பின்னரும் நுற்றுக்கணக்கானோர் குறிப்பாகத் தமிழ் மக்கள் காணாமற்போயுள்ளனர். யுத்தத்தின் பின்னர் பலர் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர். ஆனால், இன்றோ அவர்களின் இருப்பிடங்கள் எதுவும் தெரியவில்லை.

சரணடைந்தவர்களை இராணுவத்தினர் நுணுகி ஆராய்ந்து அவர்களில் இருந்து எல்.ரீ.ரீயினரால் பயிற்சியளிக்கப்பட்டவர்களைப் பிரித்தெடுத்துப் புறம்பாக்கினர். இப்பொழுது அவர்களிற் பலரைக் காணவில்லை. எவ்வாறு காணாமற் போயினர்? காணாமற் போனோரின் பெற்றோர்களே இதற்கான பதிலை கேட்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் சண்டேலீடருக்குக் கூறியுள்ளார். அத்துடன் அவர் ஆளுந்தரப்பிலுள்ள சிலர் யுத்த காலப் பகுதியில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்கும் பொழுதுகளில் 5000 ற்கும் 7000 ற்கும் இடையில் எனக் குறிப்பிடுவதையும், மற்றும் ஏனைய சிலர் 40000 தொடக்கம் 70000 வரையிலான மக்கள் கொல்லப்பட்டனர் என்று குறிப்பிடுவதற்குமான எண்ணிக்கையில் உள்ள முரண்பாடுகள் குறித்தும் மீள நினைவுபடுத்தினார்.

பல பொதுமக்கள் அரசாங்கத்திற்கும் மற்றும் இராணுவத்தினருக்கும் எதிராக காணாமற்போனவர்கள் குறித்தும் அத்துடன் அவர்கள் பற்றிய தகவல்களைக் கோரியும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாக வவுனியா பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா அண்மையில் செய்தியாளர்களுக்குக் கூறியிருந்தார். அது மட்டுமல்லாது அவை உண்மையாக இருப்பினும் காணாமற்போனவர் களெனக் கருதப்படுபவர்கள் எங்குள்ளனர் என்பதை இராணுவத்தினர் அறிந்திராத வகையில் இப்படியான ஆர்ப்பாட்டங்கள் பயனற்றவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறீலங்காவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமைகள் குறித்த முறைகேடான நடைமுறைகளை விசாரிப்பதற்கு எதுவிதத்திலும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறிமுறைக்கான உந்துதலை தமிழ்தேசியக் கூட்டமைப்பு வழங்கும் எனவும் பிரேமச்சந்திரன் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

ஓர் இராணுவத் தீர்ப்பாயத்தினால் காணாமற் போனவர்களென எவருமேயில்லையெனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், உண்மையில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்கு ஓர் சர்வதேச சுயாதீன விசாரணையே எமக்குத் தேவை. இராணுவ விசாரணைகளிலேயே அரசாங்கம் நம்பகத்தன்மை கொண்டிராதமையால் அரசாங்கம் இந்த விடயத்தை ஏற்புடையதாகக் கையாள்வதற்கு தகைமை அற்றது என்பது நிரூபிதமாகிவிட்டது. எவரும் அரசாங்கத்திடமிருந்து நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என அவர் மேலும் கூறினார்.

இவ்வாறாகப் பொறுப்புக் கூறுவதற்கான உந்துதல்களை சிறீலங்கா அரசாங்கத்திற்குக் கொடுத்து வருபவர்களின் மத்தியில் மனித உரிமைகள் கண்காணிப்பக அமைப்பும் ஒன்றாக உள்ளது. இவ்வமைப்பு சிறீலங்காவில் இடம்பெற்ற யுத்தக் குற்றமீறல்களைக் கூறும் ஓர் புதிய அறிக்கையினையும் அத்துடன் காணொளி நாடாவினையும் வெளியிட்டுள்ளது.

பெரும்பாலும் போர்க்குற்ற மீறல்கள் மற்றும் மனிதஉரிமை மீறல்களுக்கும் பொறுப்பானவர்களாக பாதுகாப்புப் படைத்தரப்பையே சுட்டிக்காட்டும் இவ்வறிக்கையினையும், அத்துடன் காணொளிநாடாவையும் எதுவிதத்திலும் ஏற்றுக்கொள்ள மறுப்பதிலேயே அவசரம் காட்டி வருகிறது அரசாங்கம்.

அரசாங்கம் இக்குற்றச் சாட்டுக்களைக் கடுமையாக எடுத்துக் கொண்டு அதனுடைய பாதுகாப்புப் படையினருக்கு ஓர் வலுவான செய்தியை வழங்கும் எனத் தாங்கள் நம்பிக்கை கொண்டிருந்ததாக இவ்வமைப்பின் தெற்காசியப் பணிப்பாளரான மீனாட்சி கங்குலி விசனம் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் இவ்வமைப்பின் அறிக்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் எல்.ரீ.ரீயினர் மற்றும் ஏனையோர் மீது அவர்கள் இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த வேளையில் இடம்பெற்ற ஓர் எண்ணிக்கையிலான பாலியல் துன்புறுத்தல் உட்படப் பல முறைகேடான செயல்கள் குறித்து விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவற்றிற்கான மருத்துவ அறிக்கைகள் துணையாக இருக்கின்ற போதிலும் அந்த உண்மையைப் புறக்கணிக்கும் விதத்தில் அவை யாவும் அரசியல் தஞ்சம் கோருவதற்காகச் சோடிக்கப்பட்ட கதைகள் என இந்தியாவுக்கான இலங்கையின் உயர் ஸ்தானிகர் கூறுவது அரசாங்கத்தின் முன்னேற்றப்பாட்டுடனான ஊக்கத்தைக் கெடுக்கும் ஓர் செயலாக இருப்பதாக கங்குலி சண்டேலீடருக்குத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரும் இக்குற்றச் சாட்டுக்களை ஏற்க மறுத்து அவ்விதமாக ஏதும் இருப்பின் அது குறித்து விசாரிப்பதற்குப் பொலிசாருக்கு முறைப்பாடு செய்திருத்தல் வேண்டும் எனக் கூறியுள்ளனர். இராணுவத்தினரின் இக் கூற்றும் உண்மையில் ஏமாற்றத்தை அளிப்பதற்காகவே உள்ளது. ஏனெனில், தற்போதைய சூழலில் சிறீலங்காவில் பொலிஸ், இராணுவத்தின் கீழேயே இயங்குகின்றது. இராணுவத்திற்கெதிரான முறைப்பாடுகளைப் பொலிசார் ஏற்றுக் கொள்வதென்பதோ அல்லது அவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்துவதென்பதோ நிகழ்வதற்கான வாய்ப்புகள் எதுவும் இல்லையெனக் கங்குலி தெரிவித்தார்.

ஊடக அமைச்சரான கெஹெலிய ரம்புக்வெல மனிதஉரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் முன் குறிப்பிட்ட அறிக்கையொன்றின் பிரதி தன்வசம் உள்ளதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதுடன், இவ்விதமாகப் பாதிக்கப்பட்டவர் 75 பேர்கள் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் பெயர்கள் மற்றும் ஏனைய விபரங்களைத் தரும்படி கோரிய போது அவ்விதம் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் இப்பவும் சிறீலங்காவில் வாழ்ந்து வருவதால் விபரங்களைத் தருவதற்கு அமைப்பு மறுத்துவிட்டதாகவும் கூறியுள்ளார்.

மேலும், வெகு அண்மையில் பிரதி அமைச்சரான கருணா என்றழைக்கப்படும் வினாயகமூர்த்தி முரளிதரன், அவர் மனதில் தோன்றியபடி எல்.ரீ.ரீயினருடன் தொடர்புடையவர்களான கூட்டமைப்பினரையும் யுத்தக் குற்றங்களுக்காக விசாரணைக் குட்படுத்தப்படல் வேண்டுமென அழைப்பு விடுத்திருந்தார்.

ஆயினும் இக் கருணாவே 2004ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் எல்.ரீ.ரீயின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனான உறவை முறித்துக் கொண்டு செல்லும் வரைக்கும் எல்.ரீ.ரீயின் இரண்டாம் நிலைக் கட்டளைத்தளபதியாகவும் கிழக்கு மாகாணத்தில் அவர்களின் படையணிகளுக்குத் தலைவராகவும் இருந்து செயற்பட்டவர். அவர் செய்த அட்டூழியங்களை மூடி மறைத்து விட முடியாது எனவும் அமைப்பின் ஆசியப் பணிப்பாளரான பிரட் அடம்ஸ் இவ்வறிக்கையில் கூறியுள்ளார்.

மேலும், அவ்வறிக்கையில் 2009 மே மாதத்தில் கருணாவின் கட்டளையின் கீழிருந்த எல்.ரீ.ரீ படையணிகள் மிக மோசமான குற்றச் செயல்களில் நேரடியாகவே ஈடுபட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1990, யூன் மாதத்தில் 400 தொடக்கம் 600 வரையிலான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கருணாவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த எல்ரீரீ படையினருடன் சரணடைந்தனர். அவர்களின் கண்களைக் கட்டியும், வாய்களுக்குள் துணியை அடைத்தும் தாக்குதல் நடத்தினர். பின்பு அவர்கள் மத்தியில் இருந்த சிங்கள மற்றும் முஸ்லிம் பொலிசாரைக் கொலை செய்தனர். இக் கொலைகள் குறித்து முன்பொரு தடவை பீ.பீ .சிக்கு அளித்த நேர்காணலின் போது கருணாவே ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால், சம்பவ இடத்தில் அச்சமயத்தில் தான் பிரசன்னமாகியிருக்கவில்லையென்றும் கூறியுள்ளார். அவர் அச்சமயத்தில் அங்கு நேரில் சமூகமாகியிருக்காத போதிலும் சட்டபூர்வமான கட்டளையிடும் பொறுப்புக் கொள்கையின் அடிப்படையில் அவரே அப் படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்.

அடுத்து மற்றொரு விடயமாக 1990 யூலையில் கிழக்கில் உள்ள மட்டக்களப்பிற்கு பயணத்தை மேற்கொண்டிருந்த முஸ்லிம் மக்களை தடுத்து நிறுத்தி அவர்களில் பெண்களும், சிறுவர்களும் ஆக 75 பேர்களைக் கொலை செய்தது. அதை விட 1990 ஆகஸ்ட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு வெவ்வேறு சம்பவங்களின் போது 200ற்கும் அதிகமான பொதுமக்களைக் கருணாவின் படையணிகள் கொன்று குவித்தன.

அத்துடன் கருணாவின் படையணியினர் தமிழ் மக்களின் வீடு வீடாகச் சென்று குடும்பத்திற்கு ஒருவரை இயக்கத்திற்கு வழங்கும்படி கூறி நெருக்குதல்களைக் கொடுத்தனர் எனவும் அதனை எதிர்த்தவர்களுக்கு அச்சுறுத்தல்களையும் நெருக்கடிகளையும் கொடுத்ததுடன் நின்று விடாது பாடசாலைக்குச் செல்லும் வேளையிலும், இரவு வேளைகளில் வீடுகளில் இருந்தும் இளம் ஆண்களையும், பெண்களையும் கடத்திச் சென்றுள்ளனர் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்.ரீ.ரீயை விட்டு வெளியேறிய கருணா பின்பு அரச பாதுகாப்புப் படைகளுடன் அவர்களின் குற்றச் செயல்களில் உடனிருந்து தனது பங்களிப்பினை வழங்கியுள்ளார்.

இது மனிதஉரிமைகள் அமைப்பினால் 2007ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையிலும் கருணாவின் இதுபோன்ற குற்றச்செயல்கள் விபரமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவ்வேளையில் கருணா அரசுடனான இரகசிய உடன்பாட்டின் பேரில் சிறீலங்காவில் படைத்தரப்பில் போர் வீரர்களாக பயன்படுத்துவதற்காக கிழக்கு மாவட்டங்களில் பல சிறுவர்களைக் கடத்தியதாகக் கூறப்பட்டிருந்தது.

கருணா அரசுடன் இணைந்து கடைசியில் கிழக்கினை எல்.ரீ.ரீயினரின் இறுக்கமான பிடியில் இருந்து விடுவிப்பதற்கு ஒத்தாசை புரிந்தவர். அதன் பின்பு கருணா அரசியலில் பிரவேசித்தார். 2008 அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். தற்போது அவர் ஆளுந்தரப்பின் ஓர் அங்கமாகவும் மீள் குடியேற்ற அமைச்சுக்கான பிரதி அமைச்சராகவும் இருக்கின்றார்.

எப்படியிருப்பினும் அவரால் நிகழ்த்தப்பட்ட மோசமான அட்டூழியங்களை மூடிமறைத்து சௌபாக்கியங்களை அனுபவிக்கும் கருணா தன்னை ஓர் தன்னலமற்றவரென வெளிக்காட்டும் விதத்தில் ஓர் அரசியல் கட்சிக்கெதிராக விசாரணைகளைத் தொடங்குமாறு தெரிவித்திருப்பது அவருக்கான எதிர்ப்புக்களை மௌனிக்கவைப்பதற்கே ஆகும் என அமைப்பின் பணிப்பாளர் பிரெட் அடம்ஸ் அறிக்கையில் அழுத்ததமாகத் தெரிவித்துள்ளார்.

***'சண்டேலீடர்' பத்திரிகையில் ஈஸ்வரன ரட்ணம் எழுதியது.***

**— ■ தமிழில் ஜஸ்ரின்**



சுடர் ஒளி

10, ஏப்ரல் - 16 ஏப்ரல், 2013

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 –5
E-mail: editorial@sudaroli.com

## வன்முறைக்குழுக்களை முதலில் அகற்றுங்கள்!

இன்று நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பெரும்பாலான. வன்முறைகள் அனைத்தும் அரசுடன் தொடர்புபட்டத் தரப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது மிக வெளிப்படையான விடயமாகிவிட்டது. இவ்வன்முறைத் தாக்குதலாளிகள் பாதுகாப்புத்தரப்பினரால் கண்டும் காணாமல் விடப்படுவது மட்டுமல்லாமல் பொதுமக்களால் பிடித்து கையளிக்கப் படுகின்றவர்கள் பாதுகாப்பாக தப்பவைக்கவும் படுகின்றனர்.

தமிழ் பிரதேசங்களில் பொதமக்களால் மேற்கொள்ளப்படும் ஜனநாயகரீதியிலான போராட்டங்கள் வன்முறைக் கும்பல்களால் தாக்குதலுக்குள்ளாகின்ற சம்பவங்கள் தொடர் கின்றன. காணாமல்போனவர்களின் உறவினர்கள் மேற்கொள்ளும் போராட்டங்கள், காணி அபகரிப்பு கெதிரான போராட்டங்கள் என்பன மட்டுமல்லாது, தமிழ்தேசியக்கூட்டமைப்பினரின் காரியாலயங்கள், அவர்கள் நடத்தும் கூட்டங்கள் என்பனவும் வன்முறையைப் பாவித்து தாக்குதல் நடத்தப்படு கின்றன.

இவற்றிற்கப்பால், யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் தமிழ் பத்திரிகைகள் மீதும் தாக்குதல்கள் நடைபெறுகின்றன குறிப்பாக உதயன் பத்திரிகை மீது தொடர்ச்சியான தாக்குதல்களை இந்த வன்முறையாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

போர் முடிவுற்றபின், போரின் பின்னான மீள்குடியேற்றம், அபிவிருத்தி, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வுத்திட்டங்கள், தமிழ்மக்களுக்கான அரசியல்தீர்வு பற்றிய செய்திகள் என்பனவே தமிழ் பத்திரிகைகளை அலங்கரித்திருக்க வேண்டும.

ஆனால், நிலைமை அவ்வாறு இல்லை. தமிழ் மக்களின் பூர்வீக நிலங்க்ள் மேலும் அபகரிக்கப்படு கின்றமை, அத்துமீறிய குடியேற்றங்கள், தமிழர் பிரதேசங்கள் மீது தொடரும் இராணுவமயமாக்கல், தமிழர்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுகின்றமை, காணாமலாக்கப்படுகின்றமை, நியாயம் கேட்பவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றமை ஆகிய சம்பவங்கள் பற்றியே ஊடகங்கள் செய்திகளையும் கருத்துக்களையும வெளியிட வேண்டிய துர்ப்பாக்கிய களநிலவரம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

நியாயம் கேட்கும் தரப்பை மட்டுமன்றி மக்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் ஊடகங்கள் மீதும் வெறித்தனமான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையிலேயே உதயன் பத்திரிகையின் கிளிநொச்சிக் கிளை மீதும் கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலால் அப்பாவிப் பணியாளர்கள் படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தாக்குலின் நோக்கம் உதயன் பத்திரிகையின் செயற்பாடுகளை முடக்குவதாகும். அதன் விநியோகப் பணிகளை தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே அண்மையக்காலமாக அப்பத்தரிகை விநியோகப் பணியாளர்கள் மீது துரத்தித் துரத்தித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பதிய பத்திரிகைகளை குடாநாட்டில் பிரசுரமாக்கி தமிழ்தேசியக்கருத்துக்களை வெளியிடும் பத்திரிகைகளை முடக்கலாம் என சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவை தோல்வியடையவே இப்போது இவ்வாறான வன்முறைத் தாக்குதல்கள் மூலமாக பத்திரிகையை முடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவே ஊகிக்க முடிகின்றது.

நடைபெற்ற தாக்குதல் குறித்து பாரபட்சமின்றி விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் கூறுகின்றது. இது நடைபெறும் என்றோ, குற்றவாளிகள் சட்டத்தின் முன்னிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்களென்றோ எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறான செயல்களுக்கு படைப்புலனாயவாளர்கள் அல்லது அவர்களின் ஆதரவுடன் செயற்படும் குழுக்களே காரணம் என்கின்ற சந்தேகம் வலுத்துள்ள நிலையில், அவ்வாறான குழுக்களை அகற்றும் நடவடிக்கையைத்தான் அரசாங்கம் முதலில் மேற்கொள்ள வேண்டும்.



# தீர்வில்லாத மீள் குடியமர்வும் காணிப்பிரச்சினையும்

வடக்கிலும், கிழக்கிலும் முப்படையினராலும் கையகப்படுத்தப்பட்ட பொதுமக்களின் பூர்வீகக் காணிகள் இனிமேல் ஒருபோதுமே உரியவர்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதில்லை என்பது உறுதியாகி வருவது தெளிவாகத் தெரிகின்றது. அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மும்முரமாக அரசு மேற்கொண்டு வருவது தெரிய வந்துள்ளது.

அத்தகைய நடவடிக்கைகளில் ஒன்றாகக் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் காணி தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே திறந்து வைக்கப்பட்டது என அரசாங்கத் தரப்பினால் பகிரங்கமாகக் கருத்துரைக்கப்பட்ட போதிலும், இவ்வலுவலகத் திறப்பு விழாவில் முன்வைக்கப்பட்ட கருத்துகளை முட்டிமோத விடுகையில் அங்கு என்னதான் சூட்சுமங்கள் எல்லாம் தலைவிரித்தாடப் போகின்றன என சிந்திக்காமலும் இருக்க முடியவில்லை.

காணி அமைச்சின் அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்ட காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் காணிகள் சுவீகரிக்கப்படும் என்பதனை வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். இதற்கு முன்பாகக் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி யாழ்.மாவட்டத்திற்கு வருகை தந்திருந்த மேற்படி காணி அமைச்சர் கலந்து கொண்ட யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வைத்து சீருடையினருக்குத் தேவையான காணிகளைப் பெறுவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி தேவையற்றது எனவும் தெரிவித்து படையினர் கோரும், கோரிய அரச திணைக்களங்ளுக்குச் சொந்தமான காணிகளை வழங்குவதில் எதுவித ஆட்சேபனையும் இல்லையென்ற அனுமதிக் கடிதத்தினை வழங்குமாறு பிரதேச செயலாளர்களுக்குத் தெரிவித்தமையானது எதிர் காலத்தில் நடக்கப் போகும் அடாவடிகளுக்குக் கட்டியம் கூறுவதாகவே அமைந்துவிட்டது.

அதனைத் தொடர்ந்து படைத்தரப்பினர் காணிகளை வழங்குவதில் ஆட்சேபனை எதுவும் இல்லையென்று தனிச் சிங்களத்தில் எழுதப்பட்ட கடிதங்களைக் கொடுத்து பிரதேச செயலாளர்களைக் கையெழுத்திடுமாறு கேட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது வேறுவழியின்றிப் பிரதேச செயலாளர்களும் ஒப்பமிடுவதாகவும் கூறப்படுகின்றது.

அந்தவகையில் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குச் சொந்தமான 42 பரப்புக் காணி மாதகல் காட்டுப்புலம் ஆதார வைத்தியசாலையின் பின்னால் உள்ளது. இந்தத் காணியில் கடந்த மாதம் 13 ஆம் திகதியிலிருந்து நிரந்தரப் படை முகாம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை பிரதேச சபையின் அனுமதி பெறாமல் அங்கு நிலை கொண்டுள்ள 51 ஆவது படைப்பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேபோன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/156 முள்ளானை கிராம சேவையாளர் பிரிவிலும் உள்ள 7 பரப்புக் காணியை உரிமையாளரிடம் இருந்து முறையாக காணி சுவீகரிப்பு ஏற்பாடுகள் எதனையும் மேற்கொள்ளப்படாமலேயே அதனைக் கையகப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

இதன் மத்தியில் காணி ஆணையாளர் நாயகத்தினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற முரண்பாடுகளின் பின்பு அரச காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் துரித வேலைத்திட்டம் என்ற பெயரில் 2013 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றறிக்கை தொடர்பில் அரச ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்தும் செயலமர்வுகளை வட மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் முன்னெடுத்து வருகின்றது. இதன் போது கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வடமாகாணத்தில் முப்படையினராலும் கையகப்படுத்தப்பட்டு அவர்கள் வசமுள்ள காணிகள் எதுவும் இனி ஒருபோதும் உரியவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை என்பது உறுதியாகிவிட்டது.

மேலும், முப்படையினரதும் மற்றும் அரச திணைக்களங்களினதும் பாவனைக்காகவும் காணிகள் கையகப்படுத்தப்பட்டால் அல்லது வேறு யாராவது காணிகளில் நிந்தரமாகக் குடியிருந்தால் அந்தக் காணிகளின் உரிமையாளர்கள் தமது காணிகளை இழந்திருப்பார்கள்.

இவ்வாறு இழக்கப்பட்ட காணிகளை மீளப்பெற்றுக் கொள்வது சாத்தியமற்றதாயின் குறித்த பிரதேசத்திலேயே மாற்றுக் காணிகளை இனங்கண்டு, காணிக்கச்சேரி வைக்கப்பட்டு அதனுடாக உரியவர்களுக்குக் காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வடமாகாண காணி ஆணையாளர் திணைக்கள வட்டாரங்கள் மூலமாகத் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் மௌனம் சாதிப்பது அவர்களும் சீருடயினருக்குக் காணி வழங்கும் நடவடிக்கைக்குத் துணை போகின்றனரா என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.



மேலும், சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவற்குழியில் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான 61 ஏக்கர் காணி உள்ளது. இதில் 30 ஏக்கர் காணியில் வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 31 ஏக்கர் காணியில் சிங்களக் குடும்பங்கள் அடாத்தாகக் குடியமர்த்தப்பட்டுள்ளன. அதற்கருகில் 125 சொந்தக் காணிகள் இல்லாத தமிழ்க் குடும்பங்கள் குடியமர்ந்துள்ளனர். இந்தக் காணி தமிழ்க் குடும்பங் களுக்கே சட்டரீதியாக வழங்கப் படல் வேண்டும். ஆனால், அக் காணியைத் தமிழ்க் குடும்பங்கள் தமக்கே வழங்குமாறு தொடர்ந்தும் கோரி வருகின்ற போதிலும், இதுவரையில் காணிகளைப் பகிர்ந்தளிக்கப்படாது இழுத்தடிக் கப்பட்டு வந்த நிலையில் கடந்த மாதத்தில் அக்காணியில் 2 ஏக்கர் காணி விசேட அதிரடிப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

வலி. வடக்கில் தமது பூர்வீக நிலங்களில், வீடுகளில் பல தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்த பல்லாயிரக்கணக்கான காங்கேசன்துறை, தெல்லிப்பழை, தையிட்டி, ஊறணி, மயிலிட்டி மற்றும் பலாலி போன்ற ஊர்களைச் சேர்ந்த தமிழ்க் குடும்பங்கள் நாட்டில் அந்நேரம் நிலவிய பாதுகாப்பற்ற சூழ்நிலையின் காரணமாக இடப்பெயர்வுக்கு நிர்ப்பந்திக்கப் பட்டு கடந்த 23 வருடங்களாக சிலர் யாழ்.குடா நாட்டிற்குள்ளும். பெருமளவானோர் கிளாலிக்கடல் மூலமாக வன்னிக்கும் இடம்பெயர்ந்து ஏதிலிகளாக மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நலன்புரி நிலையங்கள், உற்றார் உறவினர், நண்பர்களின் இல்லங் களிலும் வாழ்ந்து பின்னர் இறுதிப் போரின்போது அடிக்கடி இடப் பெயர்வுகளையும், உயிரிழப்புக் களையும் உடமைச் சேதங் களையும் எதிர் கொண்டு இறுதியாகச் செட்டிகுளம் திறந்தவெளி முகாம் வரைக்கும் சென்று கடைசியில் 2010 ஆம் ஆண்டளவில் தமது சொந்த மண்ணில் சென்று குடியமர்ந்து வாழலாம் என்ற ஆசையில் யாழ். குடா நாட்டிற்கு வந்தனர்.

ஆனால், அந்தோ பரிதாபம்! மேற்குறிப்பிட்ட வலி. வடக்குக் கிராமங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 496 குடும்பங்களைச் சேர்ந்த 23 ஆயிரத்து 514 பேர் இன்னமும் அரசினால் மீளக்குடி யேற்றத்திற்கு அனுமதிக்கப்படாத உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறப்படும் நிலப்பரப்புக்குரியவர்கள் இன்றும் ஏக்கப் பெருமூச்சுடனும் நிரந்தர இருப்பிடமின்றியும் வாழ்வாதாரத்திற்கான வழியேதுமின்றியும் அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

என்றோ ஒருநாள் எதுவிதத் திலும் தமது சொந்த வாழ்விடங் களுக்குச் சென்று மீள் குடியமர லாம் என்று எதிர்பார்த்திருக்கும் வலி. வடக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களைச் சற்றேனும் பொருட்படுத்தாத வகையில்

**என்றோ ஒருநாள் எதுவிதத்திலும் தமது சொந்த வாழ்விடங்களுக்குச் சென்று மீள் குடியமரலாம் என்று எதிர்பார்த்திருக்கும் வலி. வடக்கு மக்களின் எதிர் பார்ப்புக்களைச் சற்றேனும் பொருட்படுத்தாத வகையில் அரசாங்கத்தின் தகவல்களும், நடவடிக்கைகளும் அமைகின்றன. அம்மக்களின் நிலங்கள் நிரந்தரமாகவே கையகப்படுத்தப்படப் போகின்றதென்பது புரிந்து விட்டது. இது போரின் பின்பான நிலையில் வேட்டுகள் இன்றி மக்களை வேட்டையாடும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு ஒப்பானதாகும்.**

அரசாங்கத்தின் தகவல்களும், நடவடிக் கைகளும் அமைகின்றன. அம்மக் களின் நிலங்கள் நிரந்தரமாகவே கையகப்படுத்தப்படப் போகின்றதென்பது புரிந்து விட்டது. இது போரின் பின்பான நிலையில் வேட்டுகள் இன்றி மக்களை வேட்டையாடும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு ஒப்பானதாகும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்கிளாய் முகத்துவாரப் பகுதியில் உள்ள கர்நாட்டுக்கேணியில் இல்மனைட் தொழிற்சாலை அமைப்பதற்காகத் தமிழ் மக்களின் 37 ஏக்கர் நிலத்தைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. அத்துடன் அதே பிரதேசத்தில் தமிழ் மக்களின் காணிகள் பல்வேறு தரப்பினராலும் அபகரிக்கப்பட்டும் வருகின்றன.

மறு புறத்தில் முள்ளியவளைப் பகுதியிலுள்ள 540 ஏக்கர் தேக்கம் காட்டை அழித்து அந்தப் பகுதியில் 1,445 முஸ்லிம் குடும்பங்களை புதிதாகக் குடியேற்றும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருவதாகவும்தெரியவருகின்றது

முள்ளியவளை 6 ஆவது மைல்கல் அருகேயுள்ள இத்தேக்கம் காட்டுப் பகுதி இன்னமும் வனபரிபாலன திணைக்களத்தினால்பிரதேசசெயலகத்திடம் ஒப்படைக்கப்படவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. இம் முஸ்லிம் மகக்ளைக் குடியேற்றும் நடவடிக் கையில் சிறுபான்மையின அமைச்சர் ஒருவகீர முழுமூச்சாக நடவடிக்கை எடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது.

அதேவேளையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு குறித்த தேக்கங் காட்டுப் பகுதியை நில அளவை செய்வதற்கு நில அளவையாளர்கள் சென்றதையறிந்து அங்கு திரண்ட காணகள் அற்ற 80 தமிழ்க் குடும்பங்கள் தமக்குக் காணிகளை முதலில் வழங்கிவிட்டு பின்னால் முஸ்லிம்களுக்கு வழங்குங்கள் அதில் தமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை என விடாப் பிடியாக நின்றதையடுத்து நில அளவை செய்ய வந்த அதிகாரிகள் திரும்பிச் சென்று விட்டனர் என்றும் தெரியவந்துள்ளது.

இதற்கிடையில் வன்னியைச் சேர்ந்தவரும் சேருவல பிரதேசசபை உறுப்பினருமான கதிர்காமு லோகேஸ்வரன் என்பவரால் முல்லைத்தீவு மாவட்டத் தில் தமிழ் மக்களின் நிலப்பரப்பு அபகரிக்கப்பட்டு அக்காணிகளில் வேறு இடங்களில் இருந்து வரும் சிங்களவர் மற்றும் ஏனையவர்களைக் குடியமர்த்த எடுக்கப்படும் நடவடிக்கை யானது உடனடியாகத் தடுத்து நிறுத்தும் படி கேட்டு கொழும்பு உயர் நீதி மன்றத்தில் கடந்த மார்ச் 28 ஆம் திகதி பொதுநல வழக்கு மனு ஒன்றினைத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம் மனுவில் 1984 ஆம் ஆண்டின் பின்னர் கொக்கிளாய் கர்நாட்டுக்கேணி, கொக்குத் தொடுவாய் ஆகிய தமிழ் மக்களின் பூர்வீகப் பகுதிகள் இராணுவத்தினரால் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப் பட்டு இன்றுவரை அவர்களின் பிடிக்குள்ளேயே உள்ளன. இந்தக் காணிகள் அரசியல் சட்டத்திற்கு முரணாகச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை

— நீலன்



மீளத் தமிழ் மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மக்கள் புறந்தள்ளப்பட்டு சிங்கள மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் எனவும் அத்துடன் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட வெலிஓயாவில் உள்ள தமிழ் கிராமங்களுக்கு கிரிக்காபெக, ஜனகபுர, சிங்கபுர போன்ற சிங்களப் பெயர்கள் சூட்டப்பட்டு தமிழ் மக்களது வயல் நிலங்கள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. இந்த நிலை மாற்றப்படல் வேண்டும் எனவும். அதேவேளையில் இந்தப் பொதுநல வழக்கு சிங்கள மக்களுக்கோ அன்றி முஸ்லிம் மக்களுக்கோ எதிரானது அல்ல தமிழ் மக்களது பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக் கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற் கான முயற்சியே எனவும் தமிழ்மக் களுக்கென உறுதி வழங்கப்பட்ட காணிகளில் வேறு இடங்களில் இருந்து வருபவர்கள் குடியமர்த்தப்படுவது நிறுத்தப்பட்டு அந்த மக்களே தமது சொந்த நிலங்களில் வாழும் உரிமையை நிலை நிறுத்துவதற்காகவே இப்பொதுநல வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள் ளதாகத் தெரிய வருகின்றது.

இதே விதமாகக் கிழக்கிலும் கடந்த காலப் போரில் 1984 ஆம் ஆண்டு புல்மோட்டைப் பிரதேசத்திற்குட்பட்ட மண்கிண்டிமலை, தேத்தாவாடித்தீவு, வீரந்தீவு, பொன்மலைக்குடா ஆகிய கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற மக்கள் மீண்டும் அங்கு அந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். எனினும் குறித்த மக்களுக்குச் சொந்தமான காணிகள் தமக்குச் சொந்தமானவை என்று கடற்படையினர் தெரிவித்ததையடுத்து அந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

அதேபோன்று மூதூர்ப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமங்களை படுகாடு, முதலைமடு ஆகியவற்றிலுள்ள தமிழ் மக்களின் விவசாயக் காணிகளை சிங்கள மக்கள் அடாத்தாகப் பிடித்து விவசாயம் செய்து வருகின்றனர். இதன் நிமிர்த்தம் அக்கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் விவசாயம் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது குறித்து கடந்த மாத இறுதியில் கங்குவேலிக்கு மக்கள் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டு வருகை தந்திருந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் அக்கிராமத்து மக்கள் திரண்டு வந்து முறையிட்டனர் என்று செய்திகள் மூலம் தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் நாம் வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் பிரச்சினைகளை நோக்குவோம். வலிவடக்கில் அமைந்துள்ள பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறைமுகம் ஆகியவற்றின் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டே மக்களின் மீள் குடியேற்றத்தைத் தாமதப்படுத்துவதாக சில சமயங்களில் தெரிவிக்கப்பட்டது.

அடிப்படையில் இன்றைய நிலையில் இது பொருத்தமற்ற பொய்யாகவே பார்க்க முடிகின்றது. காரணம் இன்று ஆயுத மோதல்கள் நடைபெறவில்லை. ஆகவே, நாட்டின் தென்பகுதியில் உயர் பாதுகாப்பு வலயங்களாக சட்டரீதியாக அறிவிக்கப்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியைச் சூழவுள்ள ஏனைய பகுதிகள் சகலவற்றிலும் சிவிலியன்கள் குடியிருக்கின்றார்கள். அதுபோன்று வடக்கிலும் நிலைமைகள் வடிவமைக்கப்படலாம். இன்றுள்ள நவீன இராணுவத் தளவாட வசதிகளுக்கிடையிலான பாரிய நிலங்களில் மக்களின் நடமாட்டத்தினைத் தடுத்துத் தான் பாதுகாப்பினைக் கண்காணிக்க வேண்டும் என்ற அவசியம் நடைமுறையில் கிடையவே கிடையாது. இவ்வாறான நிலையில் மக்களின் நலன்களைப் புறந்தள்ளிவிட்டு வலி. வடக்கில் ஆயிரக்கணக்கான குடும்பங்களை விரட்டி விட்டுத்தான் அபிவிருத்தியினை மேற்கொள்ள வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம்?

இவ்வாறான நியாயமற்ற நில ஆக்கிரமிப்புகளும், காணிப்பிரச்சினைகளும் மக்களை இன நல்லுறவையோ போரின் பின்பான இயல்பு வாழ்க்கையினையோ நோக்கி அழைத்துச் செல்லாது. முற்றாக மக்களை விரக்தியினுள்ளேயே தள்ளும் அத்துடன் முரண்பாடுகள் மிக்க சூழலுக்கே மக்களை நிச்சயம் தள்ளும்.

***

சிறுகதை

# விழுதுகள்

அனுஷா

அன்றைய நாளிதழ்களையும், சில கவிதைப் புத்தகங்களையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு நித்தி முற்றத்து மாமர நிழலில் அமர்ந்து கொண்டாள். இதமான தென்றல் மேனியைத் தொட்டுக் கவிதை சொல்லிச் சென்ற உணர்வு நித்திக்கு. இதனோடு தனிமையும் ஆழமான மௌனமும் நித்திக்குப் பிடித்தமானது என்பதால் அந்தப் பொழுது ஏனோ நித்திக்கு வரமாகவே இருந்தது. நாளிதழ்களைப் புரட்டிய நித்தி வழமை போல கவிதைப் பக்கங்களையே புரட்டினாள். இந்த நேரத்தில் தான் வெளியால் வந்த நிஷா "நித்தி நான் சுரேஷோட கொஞ்சம் வெளியால் போயிற்று வாறன். உனக்குப் புத்தகம் தானே உலகம் இப்படியே இரு" என்று ஒரு கேலிப்பார்வை பார்த்துவிட்டுப் பதிலுக்காகக் காத்திராமலே நிஷா வேகமாக வாசலைத் தாண்டினாள். கவிதைக்குள் இருந்து மீண்டு கொண்ட நித்தி வாயடைத்து மௌனித்தாள்.

நித்தியும், நிஷாவும் சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். இன்று பல்கலைக்கழக கல்வியையும் ஒன்றாகவே மேற்கொள்கின்றனர். நித்தி கலைப்பீட மாணவி. நிஷா மருத்துவபீட மாணவி. பல்கலைக்கழகத்திற்கு அண்மையிலோர் வீட்டில் தங்கியிருந்து தான் தமது உயர்கல்வியைத் தொடர்கின்றனர். இருவரும் நல்ல நண்பிகளாக இருந்த போதும் நிஷா அதிகம் ஆடம்பரத்தை விரும்புபவள். வைத்தியர் எனும் பெருமிதமும் கூட. ஆனால், நித்தி அவ்வாறல்ல, மிகவும் அமைதியானவள். கலை தான் நித்தியின் உலகம். எப்போதுமே படிக்கும் நேரங்களைத் தவிர கவிதை வாசிப்பது, எழுதுவது என்றிருப்பாள். வானொலி, பத்திரிகைகளுக்கும் பிரதிகள் அனுப்புவாள். இதனை நிஷா கேலி செய்ததுண்டு. "ஏட்டுச் சுரக்காய் போல் உனக்கு வாழ்க்கை கவிதை தான்." என்பாள் பதிலுக்கு நித்தி புன்னகைப்பாள்.

நித்திக்கு, நிஷாவின் நடைமுறைகள் பிடிப்பதில்லை. பலமுறை கண்டித்த போதும் "நித்தி நான் வைத்தியர், சரி பிழை எனக்குத் தெரியும். நீ கவிதை எழுது" என்பாள். அதன் பின்பு நித்தி எதுவுமே பேசுவதில்லை. நிஷாவின் அப்பா ஒரு கூலித்தொழிலாளி, கூலி வேலை செய்தே அவளைப் படிக்க வைக்கிறார். இதனை நிஷா உணர்வதேயில்லை. வைத்தியத் துறையில் படித்தாலும் ஆண் நண்பர்களோடு தான் அதிகம் பழகுவாள். நட்பு தவறல்ல, எல்லை மீறிய நட்பை யார் தான் ஏற்பார்கள். நித்தியறிய இதுவரை நிஷா ஒரு பத்து ஆண்களைக் காதலித்திருப்பாள். இன்று சுரேஸ், நிஷா காதலை ஒரு வியாபாரமாகவே கருதுகிறாள்.

"நித்தி பிடிச்சாக் காதலிக்கலாம், ஏன் சேர்ந்தும் வாழலாம், ஒத்துவராவிட்டால் என்ன பிரிய வேண்டியது தான்" சாதாரணமாகச் சொல்வாள். நித்தி இலட்சியவாதி, காதலைப் பூஜிப்பவள், காதலைப் புனிதமாய் எழுத்துக்களில் விதைப்பவள். இதற்காக நிஷாவோடு பல சண்டைகள் கூட இட்டிருக்கிறாள்.

இப்போது நித்தியின் எண்ணங்கள் நிஷாவைச் சுற்றியே வட்டமிட்டன. நிஷாவைப் போல பெண்களால் தான் சீதை போன்று வாழ்பவர்களும் சமூகத்தில் தூற்றப்படுவதை உணர்ந்து வருந்தினாள். பொழுதோ மதியத்தைக் கடந்து மாலை ஆறு மணியையும் கடந்தது. இரவு உணவை நிஷாவுக்கும் சேர்த்துத் தயார் செய்த நித்தி உரிய கடமைகளைச் செய்து விட்டு படிக்க நினைத்தாலும் நிஷா இன்னும் வந்து சேரவில்லையே என்ற ஏக்கம். நிஷாவின் கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்திய போதும் துண்டித்துக் கொண்டாள். இரவு ஒன்பது மணியிருக்கும் "நித்தி... நித்தி.... நான் நிஷா கதவைத்திற" என்றாள். பதற்றமான குரலில் நித்தி கதவினைத் திறந்ததும் வாடிய



முகத்துடனும் ஒரு ஏக்கத்துடனும் அமர்ந்தாள். "என்னாச்சு நிஷா ஒரு மாதிரியா இருக்கிற" என்றதும், நீண்ட மௌனத்தின் பின் "இன்றோடு சுரேஸிட காதல் முடிஞ்சுது நித்தி சுரேஸிற்கு திருமணம். எழுபத்தைந்து லட்சம் சீதனமாம், முடியல்ல பிரிய நினைக்கத் தெரியல்ல அழுதிட்டன்" என்றவள் பெருமூச்சு விட்டாள். பின்பு "சரி போனால் போகட்டும்" என்றாள் சாதாரணமாய்.

"என்ன நிஷா சாதாரணமாய் சொல்லுறாய்" என்றதும் "அப்ப சுரேஸையே நினைச்சிட்டு இருந்தால் போதுமா?" என்றாள்.

நித்தியின் கோபம் எல்லை தாண்டியது. " நிஷா நீயொரு பெண் தானே ஒன்றில்லாட்டா இன்னொன்றா எப்படி முடியுது... நிஷா...." விரத்தியாய் பேசினாள். "உனக்கு காதலைப் பற்றி என்ன தெரியும். கற்பனையில் காதலை எழுதினால் வலி புரியுமா?" என்றாள் நிஷா. நித்தியின் பொறுமை உடைந்தது. ஒரு நாளும் இல்லாமல் விம்மினாள். நிஷாவிற்கு எதுவுமே புரியவில்லை. நித்தியின் அழுகையைக் கூட நிஷாவால் தடுக்க முடியாமல் போனது "யாருக்கு, எனக்குக் காதலின் வலி புரியாதா? என்னைப் பார்த்துச் சொல்லு நிஷா" என்றதும் நித்தியின் முகத்தை நிஷா நோக்கிய போது கண்கள் சிவந்து முகம் நெருப்பாய் வீசியது.

சிறிது நேரத்துள் தனது கடந்தாண்டு டயறிகள், கவிதைக் கொப்பிகள் முழுவதையும் நிஷாவின் அருகே போட்டாள். அதற்குள் பல நிழற்படங்கள், அழகான ஒரு இளைஞன் "நித்தி யாரிது....? யார் சொல்லு இவ்வளவு அழகா! நீயும் காதலிச்சியா" என்று பல வினாக்களைத் தொடுத்தாள் அதிர்ச்சியாய் நிஷா.

உதிரும் கண்ணீரோடு நித்தி தன் கலைக் காதலை மொழிபெயர்த்தாள். "நிஷா பத்து வருஷத்துக்கு முன்னால் அறிமுகமானவர் தான் தருண். இரண்டு பேருமே வானொலிக்குப் பிரதிகள் எழுதுவம். இப்படியே உருவான நட்பு முகம் காணாமலே காதல் முகவரி பெற்றது. தருண் ஒரு கவிஞன் பத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதியிருக்கிறார். இதில் இருக்கிற புத்தகம் எல்லாமே தருண்ட தான். எனக்கு ஒரு ஆசிரியர் போல நான் கலையுலகில் முன்னேறக் காரணமே தருண் தான். மனப்பொருத்தம் இருந்த போதும் மணப்பொருத்தம் இல்லாததால் எங்கட வீட்டிலையும், தருண்ட வீட்டிலையும் வேற வேற இடத்தில் வரன் பார்க்கிறாங்க. ஆனால், இனி நான் யாரையும் மனசில நினைக்கிறதேயில்லை. வாழும் வரை எழுதியே இந்த உலகத்தில் வாழணும். சமூகத்தின் தடம்புரள்வுகளை எழுதணுமென்று வாழுறன்." என்ற நித்தி தொடர்ந்து பேச முடியாமல் அழுதாள். ஏன் நிஷாவும் ஒரு பெண் தானே. நிஷா வின் கண்களும் பனித்தன. "நித்தி காணாமலே நேசிச்சியா? எப்படி?" என்றாள். தளர்ந்த குரலில் "நிஷா கரம் சேர்த்து பேசி மகிழ்ந்தா மட்டும் காதலில்ல மனசில ஆழமா நினைக்கிறதும் காதல் தான்" என்றாள்.


"என்னை மன்னிச்சிடு நித்தி. இதுவரை எழுதினவங்க சும்மா கற்பனையில் தான் எழுதுறாங்க. காதலைப் பற்றி என்ன தெரியுமென்று நினைச்சன். இப்ப புரியுது எழுத்தாளர்கள் சமூகத்திட விழுதுகள். சமூகம் விழிப்புணர்வு பெற உன்னைப் போன்றவர்கள் பூஜிக்கப்பட வேண்டியவர்கள்" என்று நிஷா பலமுறை மன்னிப்பு வேண்டினாள் "இனிமேல் நான் கண்டவங்க கூட பழக மாட்டன். நித்தி காதலின் புனிதத்தை புரிய வைச்சிட்டாய். தருணை நான் காணணும் சேர்த்து வைக்கணும்.... உங்க காதலை" என்றதும் நித்தி விரக்தியான புன்னகையோடு "நிஷா அது உன்னால முடியாது. கடவுளே நம்ம காதலை விரும்பல்லையே... தருண் இலட்சியவாதி. தருண் கிடைக்காட்டிலும் தருண்ட எழுத்துக்களை எப்பவும் நேசிப்பன்" என்றாள் நித்தி உறுதியோடு. கலைஞர் களின் எழுத்துக்கள் மட்டுமல்ல காதல் கூட எல்லை மீறாததைக் கண்டு கொண்ட நிஷா வாழ்வின் வரையறை களைத் தாண்டி இதுவரை காதலைப் பொழுது போக்காக நினைத்ததை எண்ணி வருந்தினாள்.

மீண்டும் நிஷா "நித்தி உயிர் காக்கிற மருத்துவத் துறையில் நான் இருந்தாலும் சமூகத்தை நெறிப்படுத்துற கலையுலகில் எழுதி மனிதத்தை விதைக்கிறதோட மட்டுமல்லாமல் வித்தியாசமான ஒரு காதலை எனக்குத் தெய்வீகமாகப் புரிய வைச்சிட்டாய்" என்றவாறு நித்தியின் இரு கரங்களையும் நிஷா பற்றிக் கொண்டாள். "என்னோட காதல் சேராட்டிலும் இதால காதலிட ஆழத்தை நீ புரிஞ்சதே போதும். என்னோட அடுத்த சிறுகதைக்கு உன்னுடைய மாற்றம் தான் 'கரு' நிஷா" என்றதும், "உன்னைப் போல விழுது தான் எங்கட சமூகத்தை எழுத்துக்களால் தாங்கணும்" என்றாள் நன்றியோடு "நிஷா யார் எது சொன்னாலும் ஆழமான நித்தியின் கலை யுலகக் காதலின் வலியை ஒத்தணமிட எந்த எழுத்தாளனாலும் முடியாது" என்றாள் நித்தி.




## புதுமணம் வீசட்டும்!

நேற்றிருந்த பொழுதுகள்
நேற்றைய காற்றாய் கலைந்திட
இன்றைய பொழுதும்
இடரோடு தொடர்ந்திட
புலர்ந்திடும் புதுவருடம்
புதுமணம் வீசட்டும்
மனிதர்கள் மனிதங்களோடு
மனங்கள் மனச்சாட்சியோடு
மாற்றங்கள் காணட்டும்
வலிகள் வசந்தங்களாய்
வறுமைகள் செழுமைகளாகட்டும்
கண்ணீர் கவிதைகளாய்
கசப்புக்கள் சகிப்புக்களாய் மாறட்டும்!
பகைமைகள் தூரமாய்
சுமைகள் பக்கமாய்
பொதுநலம் சாரலாய் வீசட்டும்
அன்பொன்றே வேதமாய்
அழகியல் மாற்றமாய்
அலத்தை புதுவருடம் ஆளட்டும்!



க.ஆனுசா
வற்றாப்பளை.

## சங்கே முழங்கு



விட்டகுறை
வீதி மாறிப் போய்விட்டது
தொட்ட குறை
தொகுதி மாறி போய்விட்டது!
இங்கே
கொக்கரித்த கோழிகள்
அங்கே கேட்கும்
கர்ச்சனைகளால்
அடங்கிப் போய்விட்டனவோ...?

அன்று நடந்த
அவலங்களைக் கண்டும்
அழுத குரல்களின்
அகோரம் கேட்டும்
புண்பட்ட இதயம்
பொங்கி எழவில்லை, என்செய்வது...?
பொல்லாத அடக்குமுறையால்
பேனா முனைகள்
பல ஒடித்து வீசப்பட்டன!

'ழ' கரம் கேட்டால்
துடித்து எழுந்தவர்கள்
'பழம்' கேட்டு
பசித்தவர்களை
பாதாள உலகத்துக்கே
பயணம் அனுப்பி
வைத்ததெல்லம்
கண்ணால் கண்ட
உண்மை!

சிரிப்பு வருகிறது
செய்யவில்லை ஒன்றும்
என்று சிந்துபாடும்
ஜெகதளப் பிரதாபகர்களைப்
பார்த்து!

போராடும் குணம்
வேரோடு சாய்ந்ததென்று
ஊரும் உலகமும்
ஊமையாக நின்றபோது,

தெருத் தெருவாய்
தெரிகிறது ஒளிக்கீற்று
ஊர் ஊராய் ஒலிக்கிறது
இனப்பற்று!

நீறு பூத்த நெருப்பாய்
நேற்றிருந்த நம்பிக்கை
மீண்டும் இங்கே
மீட்சியுறும் வேளையிலே,
சர்வமும் கிடைக்குமென்று
சங்கே முழங்கு.... என்ற
சாத்வீகக் கவி வரிகள்தான்
நெஞ்சில் மோதுகிறது!

நா.ஜெயபாலன்

## குடும்பக் கலைப்பு



மரங்களை வெட்டுமுன்னே
கிளைகளை
ஒருதடவை பாருங்கள்
குருவிகளின்
கூடுகள் இருக்கலாம்
வெட்டுவது
மரங்களை மட்டுமல்ல
சில குடும்பங்களையும் தான்.

யோ.புரட்சி.

## வாழ்வின் தொடக்கம்





அன்னையே!........
என் வாழ்வின் தொடக்கமாய்
என்னைப் பிரசவித்து
ஏடு தொடக்கியது மட்டுமன்றி
எழுதவும் தொடக்கினாய்.
பாடுபட்டு என்னைப்
படிக்கவும் தொடக்கிவைத்தாய்.
கவி எழுத – நான்
கருப் பொருள் தேடியபோது
கருப் பொருளாய் நீ வந்து – என்
கவியையும் தொடக்கி வைத்தாய்.
நீ தொடக்கிய படிப்பை முடித்து விட்டு
தொழிலையேனும் நானாகத் தொடங்கி
உன் துன்பம் போக்க எண்ணியிருந்தேன்
என் தொழிலை நான் தொடங்கமுன்
உன் முடிவை காலன் தொட்டுவிட்டான்
என்ன செய்ய? இனி நான்.

ஜனகா -நீக்கிலாஸ்
உருத்திரபுரம்.

## ஷாஜகானின் காதலி...

அன்று ஷாஜகான்
கொண்ட காதலி
நீயா அதனால் தான்
இன்று விண்மீன்களை
கூட விலைக்கு
வாங்க கேட்கிறாயா
என்னிடம்.
முடியுமா சொல்
இந்த ஏழைக் காதலனால்....



ப்ரியா
கொக்குவில் மேற்கு.



# ராசி பலன்

**10.04.2013 - 16.04.2013**




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

திட்டமிட்ட பணியைக் குறித்த காலத்தில் நிறைவேற்ற நல்லவர்களின் ஆலோசனை, உதவி கிடைக்கும். புத்திரரை வழி நடத்துவதில், நிதான அணுகுமுறை நல்லது. எதிரி உங்களிடம் மறைமுக உதவி பெற விரும்புவார். பணியாளர்களுக்குக் கூடுதல் வேலைவாய்ப்பு, திருப்திகர சம்பளம் கிடைக்கும். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து தேர்ச்சி விகிதம் சீராக்குவர்.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

அன்பை பிரதானப்படுத்தி செயல்படுவீர்கள். முன்னர் அவமதித்தவர் அன்புடன் பழகுகிற சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணை உங்கள் கருத்துக்களை ஏற்று, தாராள பணவசதி பெற்று மகிழ்ச்சிகரமாகக் குடும்பப் பணி மேற்கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையில் புதியசாதனை உருவாகும். மாணவர்கள் படிப்பில் சிறந்த நல்ல தேர்ச்சி விகிதம் பெறுவர்.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

உங்கள் எண்ணத்திலும், செயலிலும் முரண்பாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் செழிக்க அதிக முயற்சி, உழைப்பு உதவும். பெண்கள், கணவர் வழி உறவினர்களின் மாறுபட்ட எண்ணங்களைப் பற்றி, அதிருப்தியுடன் பேச வேண்டாம். மாணவர்கள் கூடுதல் பயிற்சியினால் மட்டுமே திட்டமிட்ட தேர்ச்சி விகிதம் பெற இயலும்.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

நண்பர், உறவினர்களிடம் முன்னர் எதார்த்தமாகக் கேட்ட உதவி, எதிர்பாராமல் வந்து சேரும். மனதில் தெய்வீக சிந்தனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனத்தில், அதிக உழைப்பினால் திருப்திகரமான பணவரவு பெறுவீர்கள். மாணவர்களின் படிப்புக்கான பணவசதி, தாராள அளவில் கிடைக்கும்.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

கடந்த நாட்களில் திகைப்பு ஏற்படுத்திய பணியை இலகுவாக நிறைவேற்றுவீர்கள். சமூகத்தில் நற்பெயரும், அந்தஸ்தும் ஏற்படும். தொழில், வியாபாரம் நண்பரின் உதவியால் வளர்ச்சி பெறும். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலன் சிறக்க, கணவருக்கு நல்ல ஆலோசனை சொல்வர். மாணவர் சாகச விளையாட்டுகளைத் தவிர்ப்பது நல்லது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

உறவினர்களுக்கு எதிராக செயல்படுபவரிடம் விலகுவதால் மட்டுமே, உறவினர்களிடம் நற்பெயர் பெற இயலும். குடும்பப் பெண்கள் பிறந்த வீட்டுப் பெருமையைப் பேசுவதில் நிதானம் வேண்டும். மாணவர்கள், ஆசிரியரின் கண்டிப்புக்கு உட்படாத அளவில் நன்னடத்தை, குணம் பாதுகாக்க வேண்டும்.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கவனக்குறைவால் உருவான தவறு மனதில் பதற்றம் ஏற்படுத்தலாம். இல்லறத்துணையின் உங்கள் மீதான நல்ல எண்ணம் மாறாத வகை யில் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். குடும்பப் பெண்கள், கணவரின் சம்மதமின்றி எவருக்கும், எவ்வித பொறுப்பும் ஏற்க வேண்டாம். மாணவர்கள், புதியவர்களை நண்பராகத் தேர்வு செய்வதில் கூடுதல் கவனம் வேண்டும்.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உங்களின் நீண்ட கால லட்சியக் கனவை நிறைவேற்ற உரிய வாய்ப்பு வரும். புத்திரர் உங்கள் சொல் கேட்டு நடந்து நற்பெயர் பெறுவர். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். மாணவர்கள் படித்து கூடுதல் தேர்ச்சி பெறுவர்.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

மனப்பூர்வமாக பணிபுரிந்து தாராள பணவரவும், மகிழ்ச்சி நிறைந்த அனுபவமும் பெறுவீர்கள். இல்லறத்துணை உறவினர்களை மனமுவந்து உபசரிப்பர். தொழில், வியாபாரத்தில் முயற்சியுடன் உழைத்து பணவரவும், நல்ல பயன்களும் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை அதிகரிக்கும். மாணவர்கள், கூடுதல் பயிற்சியினால் தர தேர்ச்சியை சீராக்குவர்.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

மனதில் கலை உணர்வு அதிகரிக்கும். செயல்களை பொறுமை, நேர்த்தியுடன் நிறைவேற்றுவீர்கள். இல்லறத்துணை கூடுதல் பரிவு, பாசத்துடன் நடந்து கொள்வர். பணியாளர்கள், சுறுசுறுப்பாக செயல்புரிந்து இலக்கு நிறைவேற்றுவர். மாணவர்கள் புரிதல் திறன் வளர்த்து, சிறந்த தர தேர்ச்சி பெறுவர்.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

உங்கள் மனம் புகழ்ச்சியை விரும்பும். சிலரது எதார்த்த பேச்சை உள் அர்த்தத்துடன் கருதுகிற சூழ்நிலை இருக்கும். இல்லறத் துணை முக்கிய தருணங்களில், உங்களின் கவுரவம் வளரத் தகுந்த ஆலோசனை சொல்லி வழி நடத்துவார். தொழில், வியாபாரத்தில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். மாணவர்கள், சகமாண வர்களின் அன்பான உதவியினால் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

மனவிரக்தியை பெரிதுபடுத்தாமல் பழைய நிகழ்வுகளின் நன்மைகளை உணர்ந்து, செயல்படுவது நற்பலன் பெற உதவும். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை உங்களின் கருத்துக் களுக்கு முக்கியத்துவம் தருவார். பெண்கள் ஆர்வமுடன் குடும்பப் பணிகளை மேற்கொள்வர். மாணவர்கள் வெளிவட்டார பழக்கம் குறைப்பதால் படிப்பில் கவனம் வளரும்.

# இங்கேயே சொர்க்கமிருக்கு!



தவஞானி முத்கலரின் குடிலுக்கு வந்தார் துர்வாசர்.

முத்கலர் துர்வாசரிடம் "சுவாமி! தாங்கள் உணவருந்தி விட்டுத் தான் செல்ல வேண்டும்" , என்று வேண்டிக் கொண்டார்.

துர்வாசரோ "எனக்கு உணவிட உம்மால் முடியுமா?" என்று ஏளனம் செய்தார்.

துர்வாசரை வற்புறுத்தி முத்கலர் சம்மதிக்க வைத்தார். நதிக்கரை சென்று அனுஷ்டானம் முடித்து விட்டு வந்த துர்வாசர், முத்கலரின் மனைவி சுவையாகச் செய்த உணவைச் சாப்பிட்டார். ஆசி கூட அளிக்காமல் புறப்பட்டார். இதை முத்கலர் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

மீண்டும் ஒருநாள் துர்வாசர் வந்தார். இப்போதும் சாப்பிட்டு விட்டு, சொல்லாமலே கிளம்பினார். இப்படித் தொடர்ந்து ஆறுமுறை நடந்தது. ஒவ்வொரு முறையும் முத்கலர் அமைதியாகவே நடந்து கொண்டார்.

ஏழாவது முறை வந்தார் துர்வாசர்.

"முத்கலரே! உம்மைச் சோதிக்க ஆறுமுறை வந்தேன். ஆனால், ஒவ்வொரு முறையும் நானே தோற்றுப்போனேன். உங்களின் சாந்த குணத்தைப் பாராட்டுகிறேன். நீங்கள் சிரமப்பட்டது போதும். தேவலோகம் சென்று மகிழ்ச்சியாக வாழுங்கள்!" என அழைத்தார். அப்போது குடில் வாசலில் தேவதூதர் இருவர் பொன்ரதம் ஒன்றில் வந்திறங்கினர். ஆனால், முத்கலர் அதில் ஏறவில்லை.

"துர்வாசரே! சொர்க்கத்தில் சுகபோகங்களை அனுபவிக்க முடியுமே தவிர, பிறருக்கு சேவை செய்ய முடியாது. ஆனால், கர்மபூமியான பூலோகத்தில் நம்மால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்து மகிழ்ச்சியாக வாழ முடியும். சேவை செய்யும் இடம் தான் உண்மையான சொர்க்கம்" என்றார். துர்வாசர் மௌனமாகி விட்டார்.

# குழந்தைகளிடம் கற்றுக்கொள்ளுங்கள்

- இறைவனை மனக்கண்ணில் காணும் போது என்னிடமுள்ள தீமைகள் யாவும் நெஞ்சத்திலிருந்து விலகி விடுகின்றன.
- எப்போதும் மனதை எளிமையாகவும், தூய்மையாகவும், அமைதியாகவும் வைத்திருக்க விரும்புங்கள். நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால், நம் மனப்போக்கினை ஆளக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- மனிதனுக்கு நேய உணர்வு அவசியம். எப்படித் தன்னிடம் உள்ள பழுத்த பழங்களை மரம் பிறருக்காகக் கொடுக்கிறதோ, அதுபோல ஒவ்வொருவரும் தன்னிடம் உள்ளதை பிறருக்குக் கொடுக்கும் குணமுடையவர்களாக இருக்க வேண்டும்.
- குழந்தைகளைப் போன்று இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். குழந்தைகள் பயன் இல்லாத விளையாட்டுப் பொருள்களை வைத்துக் கொண்டு உள்ளம் மகிழ்ச்சி கொள்கின்றனர். மகிழ்ச்சி என்பது பொருள் சார்ந்தது அல்ல. மனம் சார்ந்ததே.
- சிரத்தை இல்லாமல் வழிபாடு செய்வதால் பயன் ஏதும் இருக்காது. தெய்வம் நம்முன்னே உறைந்து இருக்கிறது என்ற எண்ணமுடன் வழிபட வேண்டும்.

- ரவீந்திரநாத் தாகூர் -

# இறைவனிடம் தப்ப முடியுமா!



**பு**லி ஒன்றுக்கு கடும் பசி. காட்டாறு ஒன்றின் கரையில் நின்ற அது, ஆற்றில் தண்ணீர் குறைவாக வந்ததால், நடுப்பகுதியில் ஒரு மணல் திட்டில் மேய்ந்து கொண்டிருந்த எருமை ஒன்றைப் பிடிக்கச் சென்றது. புலி வருவதைப் பார்த்த எருமை வேகமாகச் சென்று ஒரு புதர்ப் பகுதியில் மறைந்து கொண்டது. எருமையைக் காணாத புலி, அது வெளியே வரட்டுமே என காத்திருந்தது.

எருமை வருவதாகக் காணோம். ஒரு பாறையில் படுத்திருந்தது. அப்போது, ஆற்றில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. புலியால் எங்கும் செல்ல முடியவில்லை. திடீரெனக் கண்ணைப் பொத்தியது. இன்று எப்படியும் பட்டினி தான்! இதையே இறைவனை நினைக்கும் விரதமாகக் கருதிக்கொண்டால் என்ன! அது கண்மூடி தியானத்தில் ஆழ்ந்தது.

புலியின் சந்தர்ப்பவாதத்தைத் தோலுரிக்க இறைவன் வந்து விட்டார். காணாமல் போன எருமையின் வடிவில்! வெள்ளத்தில் அந்த எருமை மா...மா.. என கதறியபடியே தத்தளித்து வந்தது. சப்தம் கேட்டு புலி கண்களைத் திறந்தது. "ஆகா! தேடி வந்தது கிடைத்து விட்டது" என்று. பாறையில் இருந்தபடியே எருமையின் கழுத்தைக் கவ்வி இழுத்தது. அங்கே இறைவன் பிரசன்னமானார்.

"புலியே! நீ ஒரு சந்தர்ப்பவாதி. உணவு கிடைக்காவிட்டால் விரதம் இருப்பது போல் நடிக்கிறாய். உணவைக் கண்டதும் விரதத்தை கைவிட்டு விடுகிறாய். நீ சரியான சந்தர்ப்பவாதி. அடுத்த பிறவியில், புலியையும் விடக் கேவலமான ஜந்தாகப் பிறப்பாய்" எனச் சாபமிட்டு மறைந்தார்.

சந்தர்ப்பத்துக்குத் தகுந்தாற்போல் மாறுபவன் இறைவனின் தண்டனைக்கு ஆளாவான். அவனது பிறவியின் நிலை தாழ்ந்து கொண்டே போகும்.

# சிங்க வேட்டை

தமிழில் ஜெகன்



உண்மைச் சம்பவம்

அமெரிக்காவின் நியூயோர்க்கில் வால்ஸ்ரீட்டில் உள்ள பத்திரிகை நிறுவனமொன்றில் செய்தியாளராகப் பணியாற்றி வருபவன் பீட்டர். அவனுக்கு வேட்டையாடுவதில் இருந்த ஆர்வம் அவனை ஒரு தலைசிறந்த வேட்டைக்காரனாக மாற்றியிருந்தது.

சாம்பியா நகரத்தைச் சுற்றியுள்ள காடுகளில் வேட்டையாடுவதற்கென லைசென்ஸ் பெற்றுக் கொண்டுள்ள பீட்டர். ஒவ்வொரு வருடமும் அந்தச் சீசனில் வேட்டையாடுவதற்கென்றே அங்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அந்த வகையில் அவன் அங்கு வருகை தருவதால் அந்த நகரத்தில் இருந்த பலரோடு மிகவும் பரிச்சயமாகியிருந்தான். அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் கூட அவனுக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். அந்த வருடமும் பீட்டர் வேட்டைக்காக அங்கு சென்று தங்கியிருந்தான்.

இம்முறை அவன் சென்று தங்கியிருந்தது சாம்பியா நகரிற்கு அருகாவுள்ள சபுன்கா என்ற ஆபிரிக்கக் கிராமம். இக்கிராமம் அடர்ந்த காட்டுப் பகுதியிலுள்ளது. பீட்டர் தனது வேட்டைகளை முடித்துக்கொண்டு இன்னும் ஓரிரு நாட்களில் நாடு திரும்புவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

இந்நிலையில் சபுன்கா என்ற அந்தக் காடடர்ந்த கிராமம் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்த நேரம் பிறை நிலா மெல்லிய வெளிச்சத்தை வீசிக் கொண்டிருந்தது. அந்நேரத்தில் பிரமாண்டமான சிங்கம் ஒன்று மிகமெதுவாக அக்கிராமத்தை நோக்கி நகர்ந்தது.

மனித வாடையும், ஆபிரிக்க நாட்டுப்புற மதுவின் நாற்றமும், தீய்ந்து போன உணவின் ஒருவித மணமும் கலந்து சிங்கத்தின் மூக்கை அந்த வேளையில் நிறைக்கச் செய்தது.

வெளிச்சத்திற்காகவும், துஷ்ட மிருகங்களிடமிருந்து பாதுகாப்புத்தேடவும் அக்கிராமவாசிகளினால் தீமூட்டப்பட்ட தீக்குவியல்கள் அணைந்து அவற்றில் இருந்து எழும் மெல்லிய புகைமண்டலம் அந்தக் கிராமத்தையே வியாபித்திருந்தது.

கிராமத்தவர்கள் எல்லோரும் கண்ட கண்ட இடங்களில் மதுபோதையில் விழுந்து படுத்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்கள்.

மனித இரத்தத்தை அடிக்கடி ருசி பார்த்திருந்த அந்தப் பிரமாண்டமான சிங்கம் சிறிதும் சத்தம் எழுப்பாமல் நகர்ந்து, இரண்டு சிறிய குடில்களுக்கிடையே ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த மூன்று பேரை அணுகியது. ஒவ்வொருவராக முகர்ந்து பார்த்து விட்டு மூன்றாவதாகப் படுத்திருந்த ஒருவனை அணுகியது. அவன் தான் தனது அன்றைய இரை என்று தீர்மானித்ததைப் போல அவனருகே சற்றுத் தயங்கி நின்றது.

திடீரெனத் தன் வாயைத் திறந்து ஈட்டி போன்ற தன் இரண்டு கோரைப் பற்களால் அவனது முன்நெற்றியை இரு பக்கத்திலும் பற்றியது. இரண்டு பெரிய உருக்கு ஆணிகள் போன்று அவனது தலையில் இறங்கிய அந்தப் பற்கள் அவனது மூளையை ஊடுருவிச் சென்றன. அக்கணத்தில் ஒரு சிறிய முனகலுடன் அவன் உயிர் அடங்கியது.

அவனது தலையை அப்படியே கௌவி உடலையும் இழுத்துக் கொண்டு அந்த இராட்சத சிங்கம் தன் குகையை நோக்கி நகர்ந்தது.... கிட்டத்தட்ட மூன்று மைல் தூரம் அடர்ந்த காட்டுக்குள் இருந்த அதன் வசிப்பிடமான குகைக்கு அது மிக எளிதாக வந்து சேர்ந்தது.

விடியும் வரை அந்த மனித உடலை ருசித்து உண்ட பின்னர் மீதமிருந்த எலும்புகளுக்கு மேலால் அநாயாசமாகக் கடந்து பக்கத்திலிருந்த காட்டாற்றில் தாகத்தைத் தணித்துக் கொள்ளச் சென்றது.

இது போன்ற சம்பவங்கள் அந்த ஆபிரிக்கக்குக்கிராமத்தில் அடிக்கடி நடப்பவைதான். எத்தனையோ முயற்சிகள் எடுத்தும் நரபலி எடுக்கும் அந்த ஆட்கொல்லி சிங்கத்தை வேட்டையாட அக்கிராமவாசிகளால் முடியவில்லை. மாலை நேரம் வந்து இரவாகியதும் விடியும் வரையும் அக்கிராமம் பூராவும் இனம் தெரியாத அச்சத்தில் உறைந்துவிடும்.

ஏற்கனவே முடிவு செய்தபடி நாடு திரும்பத் தயாராகிக் கொண்டிருந்த பீட்டரின் அறையிலிருந்த ரேடியோக் கருவி விடாமல் அலறியது.

அந்த நகரத்தின் பொலிஸ் கமிஷனர் பேசினார். "தயவு செய்து உங்களைத் தொந்தரவு செய்வதற்காக மன்னிக்கவும். சபுன்கா கிராமத்தில் ஒரு பயங்கரமான சிங்கம் அடிக்கடி நுழைந்து அங்குள்ள மனிதர்களைப் பலியெடுத்து வருகிறது. என்ன முயன்றும் அதைக் கொல்ல முடியவில்லை. கிராமத்தவர் அனைவருமே திரண்டு பொலிசாரையும், நகர மேயரையும் குறை கூறுகின்றனர். இது இப்படியே போனால் பெரிய அரசியல் பிரச்சினையாக மாறக் கூடும். தயவு செய்து நீங்கள் எப்படியாவது அந்தச் சிங்கத்தைக் கண்டு பிடித்துக் கொன்று உதவ வேண்டும்."

அவரது வேண்டுகோளைப் பீட்டரால் மறுக்க முடிய வில்லை. ஒவ்வொரு வருடமும் சாம்பியா நகரத்துக்கு வரும் பீட்டருக்குத் தங்குமிடம் தொடக்கம் ஆக வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதுடன், அவனது வேட்டையாடுவதற்கான லைசென்சையும் சிரமமில்லாமல் புதுப்பிக்க ஒழுங்கு களையும் செய்து கொடுப்பவர் பொலிஸ் கமிஷனர்.

ஆகவே, அந்த மிருகத்தை எப்படியும் வேட்டையாட வேண்டும் என்ற முடிவுடன் தன் பயணத்தைத் தள்ளி வைத்தான் பீட்டர். அவனது வேட்டைப் பயணங்களில் உதவியாளனாக விளங்கும் சாம்பிய நகரவாசியான சாலியா என்பவனை வரும்படி தகவலைக் கொடுத்து விட்டுத் தனது வேட்டைத் துப்பாக்கியை எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டான். தகவல் கிடைத்ததும் சாலியா தனது ஆயுதமான மிகக் கூரியதும், நீண்டதுமான ஒரு ஈட்டியுடன் வந்து சேர்ந்தான்.

இருவருமாக ஒரு ஜீப் வண்டியில் சபுன்கா கிராமத்தை அடைந்தார்கள். அக்கிராமவாசிகளின் தலைவன் அவர்களை வரவேற்று, அங்கே நடப்பவை பற்றிச் சோகத்துடன் விபரித்தான். ஒவ்வொரு இரவும் ஒரு பயங்கரமான இரவாகவே கழிகின்றதென்றும் தாங்கள் எவ்வளவு விழிப்பாக இருந்தாலும் அயர்ந்து விடும் நேரத்தில் எப்படியோ அந்த விபரீதம் நடந்து விடுகின்றதென்றும் கூறினான். முதல் நாளைய இரவோடு அதுவரையில் பத்துப்பேர் சிங்கத்திற்கு இரையாகிவிட்டனரென்றும் அவன் கூறிய போது அவன் உள்ளத்துச் சோகமும், பயமும் அவனது வார்த்தைகளில் தெரிந்தது.

முதல் நாளைய சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட வேண்டுமென்று கூறிய பீட்டர், சாலியாவுடன் அந்த இடத்தை அடைந்தான். அவ்விடத்தில் இரத்தம் தோய்ந்த நிலையில் ஒரு போர்வை கிடந்தது.

சிங்கம் வந்த பாதை, பதுங்கியிருந்த இடம், இரையை இழுத்துக் கொண்டு சென்ற பாதை, நர மாமிசத்தை வைத்து உண்ட இடம் முதலியவற்றை ஓரளவு கண்டுபிடித்தால் தான் அந்தச் சிங்கத்தை வேட்டையாடச் சுலபமாக இருக்கும். ஆனால், அது மிகவும் ஆபத்து நிறைந்த ஒரு வேலை. சிங்கம் இரையை உண்டுவிட்டு அங்கேயே இருக்கலாம். அல்லது இன்னும் அடர்ந்த காட்டுப் பகுதிக்குச் சென்றிருக்கலாம். ஆனாலும், அது இரையை இழுத்துக் கொண்டு சென்ற பாதையைக் கண்டுபிடிப்பது மிக அவசியம். அடுத்தடுத்துப் பத்து பேரைக் கொன்று தின்று ருசி கண்டுவிட்ட அக்கொடிய சிங்கம் அக்கிராமத்தில் இருந்து வெகு தொலைவிற்குச் சென்றுவிட மாட்டாது என்பதையும், கிராமத்தைச் சுற்றிவரவுள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் எங்காகிலும் ஓர் மறைவிடத்தில் தான் இருக்க வேண்டுமென்பதையும் பீட்டர் நன்கு உணர்ந்து கொண்டிருந்தான்.

ஆபிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்து அங்குள்ள காடுகளில் நுழைந்து திரும்பும் அனுபவம் நிறையவே பெற்றவன் சாலியா. பீட்டர் சாலியாவையும் அழைத்துக்கொண்டு செயலில் இறங்கினான். கிராமத்தவர் சிலர் அவர்களுக்குத் துணையாக வருவதற்கு முன் வந்த போதிலும், அதிக ஆட்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது வெற்றியை அளிக்காது என்பதால் பீட்டர் அவர்களைத் தடுத்து நிறுத்தி விட்டு சாலியாவை மட்டும் தன்னுடன் அழைத்துக்கொண்டு காட்டில் இறங்கினான்.

சிங்கத்தின் காலடித்தடங்களையும், கொன்ற மனிதனின் உடலை இழுத்துக் கொண்டு மிகவும் ஜாக்கிரதையாக அடிமேல் அடிவைத்து முன்னேறினார்கள்.

காட்டில் பறவைகளின் ஒலியும், நரி மற்றும் ஓநாய்களின் கத்தல்களும் காதுகளை நிறைத்தன. அவர்கள் சென்ற வழிகளில் யானைகள் மற்றும் கரடிகள் நடமாடியதற்கான தடயங்களும் நிறையவே காணப்பட்டன. இடையிடையே கொடிய விஷப்பாம்புகளையும் கண்ணுற நேரிட்டது. இவர்களைக் கண்டு மான்கள் பயத்தினால் விரைந்தோடி மறைந்தன.

மிக நீண்ட நேரம் சென்ற பின் மனித எச்சங்கள் கிடந்த இடத்தை அடைந்தார்கள். அங்கே தான் சிங்கம் தனது இரையை உண்டு விட்டுச் சென்றிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டனர். அதே போன்று அந்த இடத்திற்கு அருகில் தான் அந்த மிருகம் சென்றிருக்க வேண்டும் என்பதையும் ஊகித்துக் கொண்டனர். ஆனால், இரைக்காக இன்னொரு வேட்டைக்கு அது உடனடியாகத் தயாராகாது என்று அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும், தற்பாதுகாப்புக்காக அது நிச்சயமாக பயங்கரமாகத் தாக்கக்கூடிய சாத்தியம் என்பதையும் அறிந்திருந்தனர்.

எப்படியிருப்பினும் இரவில் ஒரு பிரமாண்டமான சிங்கத்தை எந்த ஆயுதம் தாங்கிய மனிதனாலும் எதிர்கொள்ள முடியாது. ஆட்கொல்லி மிருகங்கள் எந்த நேரத்தில் எத்திசையால் வரும் என்பதையும் எதிர்பார்க்க முடியாது. துளியும் எதிர்பார்க்காத சந்தர்ப்பத்திலேயே அவை தாக்கும்.

ஆகவே, மீண்டும் கிராமத்திற்கே போய்ப் பதுங்கியிருப்பதென்று பீட்டரும், சாலியாவும் தமக்குள் தீர்மானித்துக் கொண்டு மீண்டும் கிராமத்தை அடைந்தார்கள்.

(மிகுதி அடுத்தவாரம்.)



# சிறுவர் உலகம்

விஜயநகர் விழாக் கோலம் பூண்டிருந்தது! அரச உற்சவம்! அதில் கலந்துகொள்ள அண்டை நாட்டு அரசன் விஜயவர்தனர் வந்தார். விழா முடிந்த பிறகும் சில தினங்கள் விஜயநகரில் தங்கினார்.

## தங்க மஞ்சள் குருவி!



ஒருநாள் அரசர் அவரிடம், "அரசே நான் கேள்விப்பட்டேன் தங்கள் அவைப் புலவர் தெனாலிராமன் மிகவும் சாதுரியசாலியாமே! அவரிடம் சொல்லி, எனக்குக் காலையில் தங்கமஞ்சள் நிறத்திலும், நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும், இரவில் ஏழு வர்ணங்களிலுமாக உருமாறும் அற்புதக் குருவி ஒன்றைக் கொண்டு வந்து தரச் சொல்லுங்களேன்..." என்றார்.

மேலும், "அது சில சமயம் மூன்று காலாலும், சில சமயம் இரட்டைக் காலாலும், பிறகு ஏழு இறக்கை கொண்டு வானில் பறக்கவும் வேண்டும்" என்றார்.

அரசர் உடனே தெனாலியை அழைத்து, "விரைவில் அத்தகைய குருவியைக் கொண்டு வா..." என்று உத்தரவிட்டார்.

அதைக் கேட்டுத் தெனாலிராமனுக்குத் தலை சுற்றியது. அத்தகைய பறவை பற்றி அவர் ஒரு போதும் கேள்விப்பட்டது கூட இல்லை.

ஆனால், சிரித்தவாறே, "சரி.... அரசே! நாளைக்கு நான் அத்தகைய பறவையோடு வருகிறேன்" என்றார்.

மறுநாள் தெனாலி, சபைக்குத் தாமதமாக வந்தார். அவர் நிலைமை மிக மோசமாக இருந்தது. கிழிந்த உடைகள், அதில் புற்களும், முட்களும், மண்ணும் ஒட்டியிருந்தன. கையில் குருவி எதுவும் இல்லாத ஒரு பறவைக் கூண்டு.

அவர் அரசரிடம், "என்ன சொல்வேன் அரசே! அதிசயமான கதை நடந்து விட்டது. அந்தக் குருவி கையில் கிடைத்து விட்டது. நானும் அதைக் கூண்டில் அடைத்து விட்டேன். அதை இங்கு எடுத்து வரும்போது, அது தனது மாயமான ஏழு இறக்கைகளை விரித்துப் பறந்து சென்று விட்டது. காட்டில் அதைத் துரத்திக் கொண்டு வெகுதூரம் சென்று விட்டேன். அது மீண்டும் என் கையில் சிக்கவில்லை. தொடர்ந்து, சற்று தூரத்தில் பறந்து சென்றவாறே அது என்னிடம் சொல்லிற்று, அரசரிடம் போய்ச் சொல்... காலையாகிற போதோ அல்லது இரவாகிறபோதோ அல்லது நடுப்பகல் ஆகிறபோதோ, வெளிச்சமோ இருட்டோ இல்லாத போது, நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து, திரும்ப வந்து விடுகிறேன்... என்றது" என்றார்.


அதைக் கேட்டதும் அரசருக்கு மட்டுமல்ல, அண்டை நாட்டு மன்னர் விஜயவர்தனருக்கும் தலை சுற்றியது.

அப்படிப்பட்ட சமயம் எங்கு உண்டாகும்? காலை ஆகாமல், நடுப்பகல் ஆகாமல், இரவு ஆகாமல் வெளிச்சம், இருட்டு ஆகும் சமயம் எது என்று அனைவரும் வியப்படைந்தனர்.


அதைக் கேட்டு விஜயவர்தனர், அரசர் இருவரும் சிரித்து விட்டனர்.

விஜயவர்தனர் சொன்னார், "தெனாலியின் சாதுரியம் பற்றி இதற்கு முன்பு கேள்விப்பட்டுள்ளேனே தவிர, இப்போது தான் நேரில் பார்த்தேன்..." என்று புகழ்ந்தார்.

கொடுக்கப்பட்டுள்ள கணக்குகளைக் கூட்டுங்கள்.




'E' என்ற எழுத்தில் தொடங்கும் பெயரைக் கொண்ட படத்திற்குக் கலர் கொடுங்கள்.



## கும்பகர்ணன்




தொடரும்....




# அத்தியாவசியமான மனிதராகுங்கள்!

பல்வேறு அம்சங்களில் நீங்கள் பயன்படுபவராக இருந்தால் நீங்கள் அதிக எண்ணிக்கையில் வெற்றி களைப் பெறுவீர்கள்!

மிக முக்கியமான பல அம்சங்களில் நீங்கள் பயன்படுபவராக இருந்தால், அதிக அளவிலான மக்களுக்கு நீங்கள் சேவை செய்பவராக இருந்தால் - பெரும் பெரும் வெற்றிகளைப் பெறுவதற்கான தகுதி உங்களுக்குக் கிடைக்கும். அதிக அளவு வெற்றிகளையும் நீங்கள் அடைவீர்கள். சீக்கிரம் செல்வந் தராகி விடுவீர்கள்.

இது மிக எளிமையானது. ஆக, வெற்றி என்பதை சிக்கல் நிறைந் ததாகவோ கடினமானதாகவோ கருதுவது அர்த்தமற்றது. அது அப்படியல்ல. பயன்பட வாழ்வது என்பது எவ்வளவு எளிதானதோ அதே போல் வெற்றியும் எளிதானதே. அதிக அளவிலான வகையில் பயன் கிடைக்குமாறு நீங்கள் செயற்பட்டால் அதிக அளவில் வெற்றி பெற்ற மனிதராக நீங்கள் விளங்குவீர்கள்.

பிறகு நீங்கள் அத்தியாவசி யமான - புறக்கணிக்க முடியாத மனிதராக ஆகிவிடுவீர்கள். தானி யங்கி இயந்திரங்களும், கம்யூட்டர் முறைகளும் இப்போது அதிகளவு புழக்கத்தில் வந்துவிட்டன. நிலைமைகள் அதிவேகமாக மாறி வருகின்றன. இத்தகைய காலகட் டத்தில் அத்தியாவசியமான மனிதராக நீங்கள் விளங்குவது மிகவும் முக்கியமாகும்.

கம்யூட்டர்களோ- தானியங்கி இயந்திரங்களோ அளிக்கமுடியாத ஒரு சேவையை - பயன் தரும் சேவையை - நீங்கள் நேரடியாகத் தனிப்பட்ட முறையில் அளிக்கின் றவராகத் திகழ வேண்டும்.

தானியங்கி இயந்திரங்களும், கம்யூட்டர்களும் கொடுக்க முடியாத சில சேவைகள்- சில பணிகள் உள்ளன. அவை வருமாறு;-

01. மனிதர்களுக்குப் பதிலாக மேலாண்மை நிர்வாகத்தைக் கம்யூட்டர்களோ தானியங்கி இயந்திரங்களோ நடத்த முடியாது. ஏன் என்றால் கம்யூட்டர்கள் எதைக் கணிக்க வேண்டும்- தானியங்கி இயந்திரங்கள் எதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிர்ண யிப்பது மேலாண்மை நிர்வாகம் தான். கம்யூட்டர்கள் எதைக் கணித்து அனுப்ப வேண்டும். எதைச் செய்ய வேண்டும். என்று அதற்கான இலக்குகளைத், திட்டங்கள் வகுத்து, உத்தரவு போடுவது மேலாண்மை நிர்வாகம் தான்.

02. விஷயங்களை மேம்பாடு செய்ய யோசனை வழங்குவது மனிதர்களே! ஒரு கம்யூட்டரானது புதிய யோசனைகளை, எண்ணங்களை உருவாக்க முடியாது. இந்த முக்கியமான உண்மையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உண்மையை ஒரு நிமிடம் கூட நீங்கள் மறந்து விடக்கூடாது. நீங்கள் நிர்வாகத்துறையில் புகுந்து விடுகிறவரையிலும் அல்லது புகுந்துவிட்ட பிறகும் உங்களுடைய வேலைக்கான பாதுகாப்பு இந்த அம்சத்தில் தான் இருக்கிறது.

ஆக, நீங்கள் பிரத்தியட்சமான- செயல்படுத்தக்கூடிய- பயன்தரக்கூடிய இலாபகரமான யோசனைகளை மேம்பாட்டுக்காக- அபிவிருத்திக்காக- வளர்ச்சிக்காக வழங்கி வருகிறவராக இருந்தால் - உங்கள் இடத்தை ஒரு கம்யூட்டரால் பறித்துவிட முடியாது. ஏன் என்றால் கம்யூட்டரால் எண்ணங்கள் யோசனைகளை உற்பத்தி செய்ய முடியாது. ஆனால், உருப்படியான யோசனைகளை உங்களால் வழங்க முடியும்.

மேம்பாட்டுக்கான புதிய யோசனைகள், புதிய திட்டங்கள் இவற்றைத் தொடர்ந்து ஏற்றுக்கொண்டு செயல்படுவதைப் பொறுத்துத்தான் தொழில், வர்த்தகம் இவை தொடர்ந்து நடக்கும். எல்லாத்துறைகளுக்கும் இது பொருந்தும்.

குறிப்பிட்ட ஒரு யோசனை சாத்தியமானதா, செயல்படுத்தக் கூடியதா என்பதை நிர்ணயிப்பதற்கு, கம்யூட்டர்கள் உதவி செய்யலாம். குறிப்பிட்ட யோசனையால் விளையக்கூடிய இலாபங்களை கம்யூட்டர்கள் மதிப்பிட முடியும். ஆனால், உங்களைப் போன்ற மனிதர்கள் தான் யோசனைகளை முதன் முதலாக சிருஷ்டி செய்ய முடியும்.

03.மக்களோடு தொடர்பு கொள்வது- மக்களுக்காகச் செயல்படுவது. எதிர்காலத்தில் 81 சதவீத வேலைகள் மக்களுக்கு நேரிடையாகப் பயன்படும் துறைகளில்தான் இருக்கும் என்பதை நீங்கள் கற்றுக் கொண்டீர்கள் அல்லவா? மக்களோடு மக்களாக மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்கின்ற ஒரு சேவையை- மக்களுக்குத் தேவைப்படுகின்ற ஒரு பணியை- நீங்கள் செய்பவராக இருந்தால். மக்களுக்குத் தேவைப்படுகிற, மக்களோடு நேரடியாகத் தொடர்பு கொள்கிற ஒரு துறையில் நீங்கள் பயிற்சி பெற்றிருந்தால்- மக்களோடு உங்கள் உறவு நீடிக்கும். அந்தத் துறையில் உங்கள் இடத்தை ஒரு கம்யூட்டரால் நிரப்ப முடியாது. உங்கள் இடத்தை ஒரு கம்யூட்டரால் பறிக்க முடியாது. ஆக வருங்காலத்தில் மக்களுக்காக, மக்களுடன் உறவுகொள்ளும் தன்மை உடையதாகவே 81 சதவீத வேலை வாய்ப்புக்கள் இருக்கும்.

பெரும் பெரும் தொழில் நிறுவனங்கள் என்ன செய்கின்றன? இலாபத்தை அதிகரிக்கவும், உற்பத்திச் செலவைக் குறைக்கவும், திறமையைக் கூடுதலாக்கி உற்பத்தி, விற்பனை செயல் திட்டங்களுக்காக- யோசனைகளுக்காகக் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவு செய்கின்றன.

ஆராய்ச்சிக்காக மொத்தம் செலவிடப்படுகிற தொகையில் பிரமாண்ட தொழில்களுக்கு இந்த ஆராய்ச்சிகள் அவசியம். ஆகவே பெருந் தொழில்கள் கோடிக் கணக்கில் நிதி ஒதுக்கி செலவு செய்கின்றன. ஆனால், பணம் செலவு செய்வதால் மட்டும் புதிய உருப்படியான யோசனைகள் கிடைத்து விடாது. மனிதர்களால் தான் புதிய உருப்படியான யோசனைகளை உருவாக்க முடியும்.

ஆக, முன்னேற்றத்துக்கான, வளர்ச்சிக்கான யோசனைகளில் 70 சதவீத யோசனைகள்- செயல்முறைகள் -இவை மனிதர்களிடமிருந்தே - 'உங்களைப் போன்ற மனிதர்களிடமிருந்தே' உருவாகின்றன. கோடிக்கணக்கில் செலவிட்டு அமைக்கப்படும் ஆய்வு நிலையங்களில் பணியாற்றும் தொழில் முறை ஆராச்சியாளர்களிடமிருந்து அல்ல.

எனவே, தான் பெரிய தொழில்கள், வளர்ச்சிக்கான யோசனைகளைத் தங்களிடம் பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஊழியர்களிடமிருந்தும், கம்பெனிக்கு வெளியில் இருப்பவர்களிடமிருந்தும் பெறுவதில் ஆர்வம் காட்டுகின்றன.

வளர்ச்சிக்கான யோசனைகளைப் பற்றிச் சிந்திப்பதன் மூலமாக மட்டும் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான நபர்கள் பதவி உயர்வு பெறுகிறார்கள். ரொக்க போனஸ் பெறுகிறார்கள். இவ்வாறானவர்கள் உங்களைப் போன்ற சாதாரண மனிதர்களே தவிர கண்டுபிடிப்பாளர்களோ, ஆராய்ச்சியாளர்களோ அல்ல.

எந்த ஒரு விஷயத்தையும் அபிவிருத்தி செய்யலாம். எந்த ஒரு விஷயத்தையும் அபிவிருத்தி செய்வதற்கு யாராக இருந்தாலும் சரி வழி கண்டு பிடிக்கலாம்.

வளர்ச்சிக்கு ஒரு உருப்படியான யோசனையைக் கண்டுபிடிப்பதற்கு நீங்கள் மாபெரும் அறிஞராக இருக்க வேண்டிய அவசியம் கிடையாது. உங்களிடம் புதைந்து கிடக்கிற சிருஷ்டி மனோபாவத்தை - கற்பனையைத் திறமையுடன் பயன் படுத்த வேண்டும். அவ்வளவு தான்.

உங்களிடம் புதைந்து கிடக்கிற கற்பனை ஆற்றலை, ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்த ஒரு வழிமுறை இருக்கிறது. அப்படி நீங்கள் பயன்படுத்தினால் இயல்பான முறையில் தாமாகவே புதிய எண்ணச்சுடர்கள் தோன்றும்.





## நரை முக்கியமில்லை கதை தான் முக்கியம்

‘பீசா’, ‘நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்’ ஆகிய படங்களை அடுத்து விஜயசேதுபதியின் நடிப்பில் வெளியாகவுள்ள படம், ‘சூது கவ்வும்’ இதில், 40 வயதைக் கடந்த வேடத்தில் நடித்துள்ளார் விஜயசேதுபதி. அவரது தலையிலும், மீசையிலும் ஆங்காங்கே நரைமுடி தென்படுகிற வேடம். இதுபற்றி அவர் கூறும் போது, “என்னைப் பொறுத்தவரை, கதைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறேன். இளமையாகத்தான் நடிப்பேன் என்று சொல்லாமல், கதை, என்னை எத்தனை வயதுக்காரனாக நடிக்கச் சொல்கிறதோ, அதற்கேற்ப என்னை முழுதாக மாற்றிக் கொண்டு நடிக்கத் தயாராகியிருக்கிறேன். அது, 40 வயதோ, 60 வயதோ எதுவாக இருந்தாலும் தயங்காமல் நடிப்பேன்” என்கிறார், விஜயசேதுபதி.

மொ

## மனோவின் மகன் மக



## ‘கஜினி பார்ட்-2’ எடுக்க தயாரிப்பாளர் ஏ.சந்திரசேகரன் முடிவு

சூர்யா நடித்த ‘கஜினி’ படத்தின் 2-ம் பாகம் எடுக்க உள்ளதாக பட அதிபர் சந்திரசேகரன் தகவல் தெரிவித்துள்ளார். சூர்யா, அசின், நயன்தாரா இணைந்து நடித்த ‘கஜினி’ படத்தினை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சேலம் ஏ.சந்திரசேகரன் தயாரித்தார். இதன் இரண்டாம் பாகத்தை ‘கஜினி பார்ட்-2’ என்ற பெயரில் எடுப்பதற்காகத் தயாரிப்பாளர் சேலம் ஏ.சந்திரசேகரன் முயற்சி மேற்கொண்டு வருகிறார். இந்தப் படத்தில் சூர்யா மீண்டும் நடிக்க வேண்டும் என்று தயாரிப்பாளர் கேயார் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து தயாரிப்பாளர் கேயார் கூறும்போது, “சினிமா உலகில் மனிதநேயம் குறைந்து வருகிறது. கஷ்டப்படுகிற தயாரிப்பாளர்களுக்குக் கைகொடுக்க ஆள் இல்லை. சூர்யா ‘கஜினி-2’ படத்தில் நடித்து சேலம் சந்திரசேகருக்குக் கைகொடுக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



## மீண்டும் கவுண்

மூன்றாண்டு இடைவெளிக்குப் பிறகு நகைச்சுவை மன்னன் கவுண்டமணி மீண்டும் நடிக்கத் திரும்பி இருக்கும் படம் ‘வாய்மை’ இந்தப் படத்தை ஏ.செந்தில்குமார் இயக்குகிறார். நாயகனாக சாந்தனுவும், நாயகியாக பானுவும் நடிக்கின்றனர். படத்தில் கவுண்டமணி இதய அறுவை சிகிச்சை நிபுணராக வருகிறார். இதற்காக 35 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கும் அவர் கிட்டதட்ட 20 நாட்களுக்கு மேலாக நடித்து வருகிறார்.

படத்தில் கொமெடிக்கென்று தனி ‘டிராக்’ எதுவும் இல்லை என்பதால் கவுண்டமணி கதையுடன் இணைந்துவரும் காதாபாத்திரமாகவே நடிக்கிறார்.



## முத்தக் காட்சியில் நடிக்க மாட்டாராம்

## தமன்னா!



தற்போது தெலுங்கில் பிஸியாக நடித்துக் கொண்டிருக்கும் தமன்னா, அஜித் நடிக்கும் புதிய படத்தின் மூலம் மீண்டும் தமிழ் திரையுலகிற்கு வருகிறார். இது குறித்து மும்பையில் அளித்த பேட்டியில் தமன்னா; “என் படங்களைக் குடும்பத்தோடு பார்க்க வருவதால் முத்தக் காட்சி உள்ளிட்ட தேவையற்ற காட்சிகளில் நடிக்க மாட்டேன். குடும்பத்தினருடன் இணைந்து படம் பார்ப்பது போன்ற கதைகளையே தேர்வு செய்து நடிக்கிறேன். முத்தக்காட்சிகளில் நடிப்பதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறேன். தமிழ், தெலுங்கில் இதுவரை அது போன்று நடிக்கவில்லை” என்கிறார்.

தமன்னா தற்போது இந்திப் படங்களில் நடிப்பதால் அங்கு முத்தக்காட்சிகளில் நடிக்க வேண்டிய கட்டாயம் இருக்கும் என்கின்றனர். ஆனால், எந்தக் கட்டாயத்துக்கும் தான் வளைய மாட்டேன். இந்திப் படங்களிலும் முத்தக்காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்கிறார் அவர்!

## அஜித் நடிக்கும் புதி

அஜித் - ‘சிறுத்தை’’இயக்குநர் ச
கூட்டணி விரைவில் புதிய படம் ஒன்
இணைய உள்ளது. இந்தப் படத்தி
அஜித்துக்கு ஜோடியாகத் தமன்னா
நடிக்கிறார். தேவி சிறீபிரசாத்
இசையமைக்கிறார்.

தற்போது இந்தப் படத்தில் ‘அவ
தமிழரசி’ படத்தில் நாயகி வேடம் ஏ
நடித்த நந்தகி ஒப்பந்தம் செய்யப்பட்
படத்தில் அவர் முக்கிய கதாபாத்திர
வருகிறார். இதனால் தமன்னாவுக்கு
நந்தகிக்கும் இடையே கடும் போட்டி
ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது.

விஷ்ணுவர்த்தன் இயக்கும் ‘வ
படத்தில் நடித்துக் கொண்டிருக்கும்
இந்தப் படத்துக்குப் பிறகு சிவாவுட
இணைகிறார் என்பது குறிப்பிடத்தக்

## தூ



## மகன் நடிக்கும் படம்




முதல் படத்திற்கு பிறகு நடிப்பதில் இருந்து விலகி இருந்த ரத்தேஸ் தற்போது மீண்டும் நடிக்க வருகிறார். படத்திற்கு 'வெற்றி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதனை அறிமுக இயக்குநர் பார்த்திபன்.சி இயக்குகிறார். நாயகியாக அருந்ததி நடிக்கிறார். ஸ்றீசாய் இசையமைக்கிறார்.

படம் குறித்து ரத்தேஸ் மனோ கூறும்போது, "படத்தின் முதல்பாதியில் 420 ஆகவும் இரண்டாம் பாதியில் ஐடி கம்பெனியில் பணிபுரிபவனாகவும் வருகிறேன்... 420 ஆக இருந்த நான் பல போராட்டங்களுக்குப் பிறகு எப்படி ஐடி கம்பெனியில் வேலைக்குச் சேருகிறேன் என்பது தான் கதை... மிகச்சரியாக படப்பிடிப்பு ஆரம்பிக்கும் ஒரு மாதத்திற்கு முன் பைக் விபத்தில் அடிபட்டு ஒரு மாதம் படுத்தபடுக்கையாகக் கிடந்த என்னை ஏமாற்றாமல் உன்னால் முடியும் நீங்கதான் நடிக்கிறீங்க.... என்று ஊக்கப்படுத்தி நடிக்க வைத்த தயாரிப்பாளர், இயக்குநர் பார்த்திபன் ஆகியோருக்கு நன்றி.." என்றார்.

ஐடி கம்பெனியின் முதலாளியின் மகளாகப் பூஜா என்கிற கதாபாத்திரத்தில் - கதாநாயகியாக நடித்திருக்கிறார் அருந்ததி.

## ண்டமணி!





## திய படத்தில் நந்தகி!

நர் சிவா
ஒன்றில்
த்தில்
ானா

அவள் பெயர்
ம் ஏற்று
ப்பட்டுள்ளார்.
த்திரத்தில்
வுக்கும்,
ாட்டி
து.
'வலை''
கும் அஜித்
ாவுடன்
த்தக்கது.

## தனுஷ் நயன்தாரா குத்தாட்டம்!



தனுஷ் தயாரிக்கும் படத்திற்காக நயன்தாரா ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டுள்ளார். ரஜினியுடன் 'சிவாஜி', விஜய்யுடன் 'சிவகாசி' படங்களில் கெஸ்ட் ரோல் ஏற்று ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டிருந்தார் நயன்தாரா. டொப் ஹீரோயின் பட்டியலில் இடம் பிடித்ததும் கெஸ்ட் ரோல்களைத் தவிர்த்தார். இந்நிலையில் தனுஷ் தயாரிக்கும் 'எதிர்நீச்சல்' படத்துக்காக அவருடன் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட்டிருக்கிறார் நயன்தாரா. தனுஷ் முதன்முறையாகத் தயாரிக்கும் இப்படத்தில் சிவகார்த்திகேயன், பிரியா ஆனந்த் நடிக்கின்றனர்.

இப்படத்துக்காக ஒரு குத்துப்பாடல் படமாக்கப்பட்டது. 'சத்தியமா நீ எனக்கு தேவையில்ல' என்ற பாடலுக்கு அனிரூத் இசை அமைத்தார்.

இதற்காகத் தேசிய நெடுஞ்சாலையில் இருக்கும்ஹோட்டல்போன்று செட் அமைக்கப்பட்டது. தனுஷ், நயன்தாரா இருவரும் இந்தப் பாடலுக்கு நடனம் ஆடினார்கள். 3 நாள் படப்பிடிப்பு நடந்தது. நயன்தாராவைக் குத்துபாடலுக்கு எப்படியும் சம்மதிக்க வைக்கும் பொறுப்பை தயாரிப்பாளர் தனுஷ் ஏற்றுக்கொண்டார்.




2008 செப்டம்பர் 23ம் திகதி வெளியான பரபரப்புச் செய்தி படமாக உருவாகி யுள்ளது. மலையாள 'டிராபிக்' திரைக்கதையை எடுத்துக்கொண்டு, தமிழில் பிரமாண்டமும், பிரமிப்பு மாகப் படம் வெளிவந் துள்ளது செய்தியும் கதையும் அனைவரும் அறிந்தது தான்.ஒருவிபத்தில்மூளைச்சாவு அடைந்த ஹிதேந்திரன் என்ற இளைஞனின் இதயத்தை 11 நிமிடத்தில், 14 கி.மீட்டர் கடந்து எடுத்துச் சென்று, மரணவாயிலில் நின்று போராடிய சிறுமி அபிரா மிக்குப் பொருத்திய நிஜமான, அனைவரது இதயத் தையும் உலுக்கி எடுத்த சம்பவத்தை மையமாக வைத்து, கொஞ்சம் கற்பனையைக் கலந்து உருவாக்கி இருக் கிறார்கள்.

ஜெயப்பிரகாஷ், லட்சுமி ராமகிருஷ்ணன் மகன் சச்சின். டி.வி நிருபராக சாதிக்க வேண்டும் என்பது கனவு. முதல்நாளே முன்னணி நடிகர் பிரகாஷ்ராஜை பேட்டி எடுக்கும் வாய்ப்பு. நண்பனுடன் பைக்கில் செல்லும் போது விபத்துக்குள்ளாகி, தலையில் பலத்த அடிபட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகிறார். பிரகாஷ்ராஜ், ராதிகாவின் மகள் இதயக் கோளாறு காரணமாக வேலூரிலுள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெறு கிறாள். மூளைச்சாவு அடைந்த சச்சினின் இதயத்தை சென்னையில் இருந்து வேலூருக்கு எடுத்துச் சென்று பொருத்தினால், சிறுமி உயிர் பிழைப்பாள் என்பது மருத்துவர்களின் கணிப்பு.

சென்னை மருத்துவமனையில் இருந்து வேலூ ருக்கு 170 கி.மீட்டர். அதை ஒன்றரை மணி நேரத்தில் கடக்க வேண்டும். நெரிசலான போக்குவரத்து, தேசிய நெடுஞ்சாலையில் சீறும் வாகனங்கள். இதைத்தாண்டி சவாலை எதிர்கொள்கிறது, பொலிஸ் கமிஷனர் சரத்குமார் தலைமையிலான டீம். டிராபிக் கான்ஸ்டபிள் சேரன் வாகனத்தை ஓட்ட, சச்சினின் நண்பன் மிதுனும், டாக்டர் பிரசன்னாவும் உடன் செல்ல, அந்த சவால் பயணம் எப்படி நடக்கிறது என்பது பரபரப்பான திரைக்கதை. இடையில் வருகின்ற சில எதிர்பாராத இடையூறுகள், அதை சமாளித்து இலக்கை அடையும்வரை, திக்... திக் நிமிடங்களாகக் கடப்பது மீதிக் கதை. ஒரு வரி நிஜக்கதையை, இரண்டு மணி நேர திரைக்கதையாக மாற்றிய விதத்தில் மிரட்டுகிறார்கள்.

டிராபிக் கான்ஸ்டபிள் சேரனின் வாழ்க்கை அழுத்தமானது. தனது வாழ்க்கையில் ஏற்பட்ட கறை களைத் துடைப்பதற்கான முயற்சியில், சென்டிமெண்ட் ஏரியாவை சொந்தமாக்குகிறார். "யாரோ ஒரு உயிரைக் காபாற்றுவதற்காக, என் மகனை கொன்னு டாதீங்க" என்று உருகும் ஜெயப்பிரகாஷ், லட்சுமி ராமகிருஷ்ணன் தம்பதியர் கலங்க வைக்கின்றனர். சச்சினின் காதலியாக வரும் பார்வதியின் அழகும், நடிப்பும் பிரமிக்க வைக்கிறது. மின்னல் போல் வந்து மறையும் சச்சின், மனதில் ஆழமாகப் பதிகிறார்.


புகழ் போதையிலும், பணத்திலும் மிதக்கும் முன்னணி நடிகராக பிரகாஷ்ராஜ். மகளின் பாசத் தையே பரபரப்புச் செய்தியாக்கும் தந்திரம், யதார்த்தம் புரியாமல் தன் செல்வாக்கால் எதையும் சாதித்து விடலாம் என்ற இறுமாப்பு என பிரமாதப்படுத்துகிறார். அவரை இழுத்துப் பிடித்துக் கடிவாளம் போடும் ராதிகா வின் கேரக்டர் பவர்புல். "நாளைக்கு நீங்க மார்க்கெட் இல்லாம வீட்ல இருக்கும்போது, உங்க பக்கத்துல இருக்குறது நானும், உங்க மகளும் மட்டும்தான் என்று நெற்றிப்பொட்டில் அடித்து உட்கார வைக்கிறார். பொறி பறக்கும் சண்டை, படபடக்கும் துப்பாக்கி, மாடிப் படியில் ஏறி இறங்கும் ஸ்டைல், பஞ்ச் டயலாக் இல்லா மல், மிடுக்கான பொலிஸ் அதிகாரியாக, அலுவல கத்துக்கு உள்ளேயே தன்னை நிலைநிறுத்திக் கொள் கிறார் சரத்குமார்.

வில்லன் இல்லாமல், சூழ்நிலைகளையே வில்ல னாக்கி, பரபரப்பான அக்ஷன் படத்தை உண்மைக்கு நெருக்கமாகக் கொடுத்துள்ளார் இயக்குநர் ஹீத் காதர். இதயத்தை எடுத்துச் செல்ல ஒரு டீம் சின்சியராக வேலை செய்ததைப் போல், இப்படத்தை எடுத்துச் செல்ல அவரது தலைமையில் இசையமைப்பாளர் மெஜோ ஜோசப், ஒளிப்பதிவாளர் ஹிஹநாத் ஜே.ஜலால், வசனகர்த்தா அஜயன் பாலா, எடிட்டர் மகேஷ்நாராயண், ஸ்டண்ட் இயக்குநர் மிராக்கிள் மைக்கேல் என, ஒரு பட்டாளமே கடினமாக உழைத் துள்ளது. சிறப்புத் தோற்றத்தில் வரும் சூர்யா சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் சத்தானது.

சரத்குமாரிடம் அமைச்சர் விஜயகுமார், "இந்த காரியத்தை செய்ய முடியாதுன்னு சொன்னீங்கன்னா, எல்லா நாளும் போல இன்னைக்கும் ஒருநாளா கடந்து போகும். முடியும்னு சொன்னா, இந்த நாள் சரித்திரமாகும் என்பார். இப்படத்தைப் பார்க்கத் தவறினால், எல்லா படமும் போல இதுவும் ஒரு படமாகக் கடந்து போகும். சின்னச்சின்னக் குறைகளை தவிர்த்துவிட்டுப் பார்த்தால், நல்ல படங்களில் இதுவும் ஒன்றாக நிச்சயம் இருக்கும்.

# பம்பல் பரமசிவம்





# அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்....

மனுசர் படுகிற பாட்டிற்குள்ள புத்தாண்டு வேறயா? என்று நீங்கள் முணு முணுப்பது கேட்கிறது. கொண்டாட்டம் என்று வந்துவிட்டால் சிலருக்குத் திண்டாட்டம் தான். விஜய புது வருடம் வெற்றியைக் கொண்டு வரும் என நம்புவோம்.

புத்தாண்டுக்கென வீட்டை ஒதுக்கி, துப்புரவு செய்யேக்கை கொஞ்சப் பேப்பர்களின்ர பக்கம் என்ர மனுசியிட்டைச் சிக்கி விட்டுது பாருங்கோ. அதுவும் சுடர் ஒளிப் பத்திரிகையின்ர நடுப்பக்கங்கள். நடுவில சில பக்கங்களைக் காணோம் எண்டு தேடுற என்ர வீட்டுக்காரிக்கு, அந்த நடுப் பக்கங்களை நான் பக்குவமாக என்ர பைலுகளோடை வைச்சிருந்தது, பிரச்சினையாய்ப் போச்சுது. ஒரு பேப்பரில காஜல், நிசா நடிகைகள் சகோதரிகள், போதாக் குறைக்கு ஹன்சிகா. அதோடு அனுஸ்கா, பிரியாமணி, நந்திதா, சமந்தா, மஹிமா என்று எல்லாரும் கலர் கலரா...! எல்லா சரிகமபதநிசாவும், வலு கவனமாக மடிச்சு பைல் பண்ணி நான் வைச்சிருந்தது காரணமாகத்தான்.

பேப்பரை இரவல் வாங்கிக் கொண்டு போய் வாசிச்சிட்டு திரும்பித் தரயிக்கை சில பேர் இந்தப் பக்கங்களை எடுத்துப்போட்டுத் தருகுதுகள். அதால நான் பேப்பர் வாங்கிக் கொண்டு போன உடனை அந்தப் பக்கங்களை வலு பக்குவமாக எடுத்து வைக்கிறது உண்மைதான்.

முந்தின ஆக்கள் சில பேர் வையந்திமாலா, சாவித்திரி, சரோஜாதேவி, பானுமதி எண்டு படங்களைச் சேர்த்து வைச்சிருக்கிறது உண்டு. அப்ப எங்க இப்பிடிக் கலர்ப் படங்கள்....? எல்லாம் கறுப்பு வெள்ளைதான்! ஆனாலும், நல்ல லட்சணமான படங்கள் பிறகு குஷ்பு, திரிசா. எண்டு, அடுத்த ஜெனரேசன் படங்கள்.....படிக்கிற காலத்தில பாடப்புத்தகங்களுக்கை இருந்து, வீட்டில பெற்றோரிட்டையும், வகுப்பில ஆசிரியர்களிட்டையும் அடி, உதை, ஏச்சு வாங்குவது என்பது, இந்த சினிமா வந்த பின்னர், காலங்காலமாக நடக்கிற விசயம் தான்.

ஆனால், என்ர விசயத்தில, இது, இந்த வயதில சினிமாக்காரியளின்ர படங்களை வைச்சிருந்தது ஒரு பிரளயமாகப் போயிட்டுது.... அது எங்கடை புது வருசக் கொண்டாட்டத்தையும் கொஞ்சம் பாதிச்சுப் போட்டுது எண்டுறதும் உண்மைதான்.

அது சரி இந்த வயதில உதுகள் எல்லாம் தேவையோ எண்டு வாசகர்களாகிய நீங்களும் கேட்கிறது ஞாயம்தான். என்ர பக்கமும் ஞாயம் இருக்குது எண்டதை உங்களிட்டைச் சொல்லலாம். ஆனால், வீட்டை சொல்ல ஏலாது. என்ர போதாக் காலம் யாரிட்டைச் சொல்லி அழுகிறதெண்டே தெரியயேல்லை.


உங்களுக்குச் சொன்னால் என்ன? நான் என்ர கருத்துக்களை 'சுடர் ஒளி' ஊடாக, உங்களோடை பரிமாற வெளிக்கிட்டு ஒரு வருசம் முடிஞ்சு போச்சுது. இந்த ஒரு வருசமும் வெளிவருகிற எனது கருத்து எழுத்துக்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட ஆசை.. அதனால, இந்த எழுத்துக்ளைக் கொண்ட பக்கங்களைச் சேகரிக்கத் தொடங்கினன். சேகரிச்சு அவற்றை பக்குவப்படுத்தி வைக்கிறதில என்ன தப்பு? உங்களிட்டை எண்ட படியால் இதனை உசாராகக் கேட்கிறன். வீட்டில எல்லாம் இந்த உசார் எடுபடாது.....

உண்மையில நான் சேகரிச்சு வைச்சிருக்கிற கட்டிங்ஸ் எல்லாம், 'பம்பல் பரமசிவம்' பக்கங்கள் தான். அது எல்லாம், நடுப்பக்கத்தின்ர பின் பக்கத்தில அச்சடிச்சு வாறது என்ர கஸ்ட காலம் தான். முன்பக்கம் ஹன்சிகாவையும், பிரியாமணியையும் பார்த்த என்ர மனுசி, அந்தப் பேப்பர் பக்கங்களின்ர பின்பக்கம் 'பம்பல் பரமசிவம்' படத்தோடை இருப்பதை ஏன்தான் காண மறுக்கின்றாரோ? இதையெல்லாம் விளக்க வெளிக்கிட்டால், நிலமை இன்னும் விபரீதமாகப் போய் விடும். 'பம்பல் பரமசிவம்' நான்தான் என்று வீட்டில சொல்ல வெளிக்கிட்டால், அதால வாற பக்க விளைவு, இதை விட மோசமாக இருக்கும் எண்டதால, நான் சேர்த்து வைச்சிருக்கிற கட்டிங்ஸ் எல்லாம் சினிமா நடிகைகளுக்காகத்தான் எண்டு சொல்லி, ஏற்றுக்கொண்டு, ஏச்சு வாங்கிக் கொண்டு, ம்... இன்னும் ஏதோ இருக்கிறன்.

இப்பிடித்தான் பலபேரும் சில விடயங்களில், ஒவ்வொன்றிற்கும் இன்னுமொரு பக்கம் இருக்கிறதெண்டதைப் பார்க்காமல் முடிவெடுத்து, சங்கடங்களில மாட்டிக் கொள்ளுறது. 'லைற் றீடிங்கிற்கு' என்று எழுத வெளிக்கிட்டு இப்படி எல்லாம் தத்துவம் பேச வெளிக்கிட்டால் மற்ற எழுத்தாளர்களுக்கும், பரமசிவம் பக்கத்திற்கும் வேறுபாடில்லாமற் போய்விடும் என்பதனால் இத்துடன் இத்தத்துவார்த்த வார்த்தைகளை நிறுத்திக் கொண்டு, என் சுமைகளை நானே தாங்கிக் கொள்கின்றேன். என்றாலும் என் அன்பு வாசகர்கள் என் இன்ப துன்பங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்பதால் சில வரிகளை இதற்கென எடுத்துக் கொண்டேன்.

***

# யானைக்கு வந்த திருமண ஆசை!



மன்னரின் யானையொன்று அண்டை அயல் நகரங்களுக்குச் சென்று பயிர்களை அழித்தும், மக்களில் பலரை நசுக்கிப் படுகாயப்படுத்தியும் அடிக்கடி பெருந்தொந்தரவு கொடுத்துக் கொண் டிருந்தது. இதுபற்றி பாதிக்கப்பட்ட சிலர் மன்னரிடம் முறையிட்ட போது மன்னர் அதனைப் பெரிய விடயமாகக் கருதவில்லை. தன்னுடைய யானை மீது வீண் புகார்கள் கூறுவதாகச் சிலரைக் கடிந்தும் கொண்டார். அதனால் யானையின் அட்டகாசம் பற்றி மேற் கொண்டு முறையிட யாருக்கும் துணிச்சல் வரவில்லை.

அவர்கள் முல்லாவைச் சந்தித்து மன்னரின் யானையால் தங்களுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி எடுத்துக்கூறி மன்னரிடம் சொல்லி ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். முல்லா தம்மிடம் வந்த வர்களை நோக்கி "நீங்கள் எல்லாம் ஒன்று திரண்டு அந்த யானையைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப்போட்டு விடுங்கள்" என்றார்.

"ஐய்யய்யோ மன்னரின் யானையைக் கட்டிப் போட்டு மீள முடியுமா? மன்னர் கடுமையான தண்டனை விதிப்பார்" என்று அச்சத்துடன் கூறினர் ஊர் மக்கள். "நீங்கள் நான் சொன்னவாறு செய்யுங்கள். மன்னரிடமிருந்து யாராவது அங்கு வந்து கேட்டால் முல்லாதான் யானையைக் கட்டிப் போடச் சொன்னதாகக் கூறி விடுங்கள்" என்று முல்லா கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூடி மிகவும் சிரமப்பட்டு யானை யைப் பிடித்து ஒரு பெரிய மரத்தில் கட்டிப் போட்டு விட்டனர். செய்தி அறிந்த மன்னர் முல்லாவுக்கு ஆள் அனுப்பித தம்மை வந்து சந்திக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். முல்லா அரண்மனை சென்று மன்னரை வணங்கினார்.

"என்ன முல்லா என்னுடைய யானையைக் கட்டிப் போட்டீராமே? உமக்கு அவ்வளவு துணிச்சல் எங்கிருந்து வந்தது?" என்று கோபத்துடன் கேட்டார். முல்லா பணிவுடன் மன்னரை நோக்கி "மன்னர் பெருமானே தங்களது யானை எங்கள் ஊர்ப்பக்கம் வந்து தனக்கு ஒரு பெண்ணைப் பார்த்துத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்டு அட்டகாசம் செய்ய ஆரம்பித்து விட்டது. மன்னருடைய யானையின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டியது குடிமக்களாகிய எங்கள் கடமையல்லவா! அதனால் தங்கள் யானைக்காக ஒரு பெண் யானையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். பெண் யானை கிடைப்பதற்குள் யானை கோபித்துக் கொண்டு ஏதாவது தாறுமாறான நடவடிக்கையில் ஈடுபட்டு விடக்கூடாதே என்பதற்காகத்தான் அதைக் கட்டி வைத்திருக்கிறோம்" என்றார்.


"என்ன? யானையாவது தனக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று கேட்பதாவது! யாரிடம் விளையாடுகிறாய்?" என்று மன்னர் கோபத்துடன் கேட்டார்.

"மன்னர் பெருமான் அவர்களே தயவு செய்து சிரமம் கருதாது ஒரு தடவை எங்கள் ஊருக்கு வந்து தங்கள் யானையையே விசாரித்துப் பாருங்கள். நான் ஏதாவது பொய் சொல்லியிருந்தால் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்" என்று முல்லா கூறினார். மன்னர் தமது பரிவாரங்களுடன் முல்லாவை அழைத்துக் கொண்டு முல்லா சொன்ன பகுதிக்குச் சென்றார். வழி நெடுகிலும் விளைநிலங்களுக்கும், பழமரங்களுக்கும் ஏற்பட்டிருந்த கடுமையான சேதத்தை, அழிவைக் கண்டு அதிர்ச்சியுற்றார். அந்தப் பேரழிவுக்கு தனது யானைதான் காரணம் என்பதையும் உணர்ந்தார். தன்னை அந்தப் பகுதிகளுக்கு வரச் செய்வதற்காக முல்லா கையாண்ட தந்திரத்தையும் புரிந்து கொண்டார்.

மன்னர் உடனே தனது அதிகாரிகளை அழைத்து யானையினால் யார் யார் அதிகமான சேதத்துக்கு உள்ளாகியிருக்கிறார்களோ அவர்களுக்குத் தாராளமான நட்ட ஈடு வழங்க உத்தரவிட்டார் பிறகு யானையைக் கொண்டு சென்று அரண்மனையில் கட்டிப் போடுமாறும் உத்தரவிட்டார். முல்லாவுக்கு ஊர் மக்கள் நன்றி சொல்லி அவரை வாழ்த்தினார்கள்.

## தலைமுடியைத் தானமாக வழங்கிய சிறுவன்





புற்று நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு செயற்கை முடி(விக்) தயாரிப்பதற்காக லண்டனைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் தனது மூன்றாண்டு தலைமுடியைத் தானமாக வழங்கியுள்ளார். புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தலைமுடி வெகு சீக்கிரத்தில் கொட்டிவிடும். இவர்களுக்கு செயற்கை முடி தயாரிப்பதற்காக தலைமுடி தானமாக வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் 3 வயது சிறுவன் ஒருவன் தான் சிறுவயதிலிருந்து ஆசையாக வளர்த்து வந்த நீண்ட கூந்தலைப் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தானமாக வழங்கியுள்ளான்.

## தலைகீழ் மடிக்கணனி.... படுத்துக் கொண்டே பிரவுசிங்



படுத்துக் கொண்டே லப்டொப் பார்க்கும் வகையிலான மினி ஸ்டாண்டை ஜப்பான் நிறுவனம் உருவாக்கி இருக்கிறது. கணனி, மடிக் கணனி, பாம்டொப், டேப்லட், அகன்றதிரை ஸ்மார்ட்போன் என மனிதர்களின் இணைபிரியா நண்பர்கள் பட்டியல் அதிகமாகிக் கொண்டே போகிறது.

பெரும்பாலானோர் நேரத்தை இதுபோன்ற ஒளிர்திரைகள் முன்னாலேயே செலவிடுகிறார்கள் மாலை நேரத்தை டெஸ்க்டொப் கணனி முன்பு செலவிடுபவர்கள், பின்பு மடிக்கணனியைக் கையில் எடுக்கிறார்கள்.

கண் அயரும் நேரம் வரை அது கையில் இருக்கிறது. இன்டர்நெட் பார்க்க தூக்கம் தொந்தரவாக இருக்கிறதே என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இவர்களைக் கருத்தில் கொண்டு லப்டொப் ஸ்டாண்டை ஜப்பான் நிறுவனம் வடிவமைத்திருக்கிறது.

இரண்டு கால்கள் கொண்ட டேபிள் லேம்ப் போல இருக்கிறது. தலையணைக்கு இரு பக்கமும் பொருத்தி, அதில் லப்டொப்பை தலைகீழாகத் தொங்கவிட வேண்டும். கண் சொக்கித் தூக்கம் வரும் வரை பிரவுசிங் செய்துகொண்டே இருக்கலாம்.

## இந்தப் படத்தைப் பார்க்கும்பொழுது மனசுக்கு நெகிழ்ச்சியா இருக்கு...



சின்னச் சின்ன சண்டைக்கெல்லாம் விவாகரத்துக் கேட்கும் சில கணவன் மனைவிகளுக்கிடையே இந்த அம்மா வாழும் கடவுளாகத் தெரிகிறாராம்... உண்மையான அன்பு எதையும் எதிர்பார்க்காது...!

## பகலில் வாதாடும் வக்கீல், இரவில் பாடும் பறவை



பகலில் வழக்கறிஞர், இரவில் பொப் பாடகி என இரு தொழில்களிலும் ஜொலித்து வருகிறார் போவி ஜோனி என்ற ஆஸ்திரேலியப் பெண். சினிமா, நாடகங்களில் ஒருவரே மாறுபட்ட வேடங்களில் தோன்றி அசத்துவதை பார்த்திருக்கிறோம்.

இவர் தனது கூந்தல் அலங்காரத்தை நேரத்திற்கேற்ப மாற்றிக் கொள்வதால் இவரை வாடிக்கையாளர்கள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ள முடியாது.



இதுபற்றி ஜோனி கூறுகையில், "சிறுவயது முதலே எனக்கு இசை மீது ஆர்வம் உண்டு. ஆனால், நான் பட்டம் பெற்று நல்ல வேலைக்கு செல்ல வேண்டுமெனப் பெற்றோர் விரும்பினார்கள். எனவே, இரு விருப்பத்துக்கும் ஏற்றவாறு எனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு விட்டேன்" என்கிறார்.

## உள்ளங்கையில் ஓவியம்!



## முதலைத் தோலில் தயாரான ரீ-சேர்ட்: ரூ.50 லட்சம்.



அமெரிக்காவின் ஹாம்ஸ் நிறுவனம் முதலைத் தோலினால் ரீ-சேர்ட் தயாரித்துள்ளது. இது 100 சதவீதம் சுத்தமான முதலைத் தோலினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டை நியூயோர்க்கில் உள்ள மாடிசன் அவென்யூவில் உள்ள வணிக வளாகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டது. அதை ஏராளமானவர்கள் ஆர்வமுடன் பார்த்துச் சென்றனர்.

அதற்குக் காரணம் என்ன தெரியுமா? முதலைத் தோலினால் தயாரிக்கப்பட்ட அந்த ஒரு ரீ-சேர்ட்டின் விலை ரூ.50 லட்சம் ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நியூயோர்க் நகரில் விற்பனைக்கு வைக்கப்பட்ட ரீ-சேர்ட்டுகளில் இதற்குத்தான் மிக அதிக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# எதிர்பார்ப்பும் மகிழ்ச்சியும்

பெண்கள் அனைவருமே தனக்கு வருபவர், இவ்வாறு இருக்க வேண்டும் என்று ஒரு சிலவற்றை பட்டியலிட்டு மனதில் வைத்திருப்பார்கள். அத்தகைய எதிர்பார்ப்பு உள்ளது போல் கிடைத்து விட்டால், அதைவிட அதிர்ஸ்டசாலி யாரும் இருக்க முடியாது என்றெல்லாம் தோன்றும். அதிலும் திருமணம் என்று வந்துவிட்டால், எதிர்பார்ப்புகள் கண்டிப்பாக இருக்கும். பொதுவாகப் பெண்கள் மனதிலும் இருக்கும் எதிர்பார்ப்புகள் என்னவென்று பார்க்கலாம்.

அனைவரது மனதில் இருக்கும் எதிர்பார்ப்புகளில் முக்கியமானது காதல் தான். தனக்கு வருபவர் தன் மீது சொல்ல முடியாத அளவிலும், என்றும் மறக்க முடியாத அளவிலும் காதல் செய்ய வேண்டும். மேலும் அத்தகைய காதலை அழகான வழியில் வெளிப்படுத்தி, இருவருக்குள் இருக்கும் உறவை நன்கு வலுபடுத்த வேண்டும் என்ற ஆசை பெண்களுக்கு அதிகமாகவே இருக்கும்.

நல்ல புரிதல் இருந்து விட்டால், வாழ்க்கையில் பிரச்சினை இருக்காது. எனவே, துணையாக வருபவர், தன்னை, தன் ஆசை, விருப்பம் போன்றவற்றை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். தனது உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எல்லாப் பெண்களுக்குமே இருக்கும்.

நல்ல ஆரோக்கியமான உறவில், கணவன் மனைவி ஒருவர் மீது ஒருவர் நல்ல அக்கறையுடன் இருக்க வேண்டும் என்ற ஆசையானது இருக்கும். இந்த உணர்வு அனைவருக்கும் பொதுவாக இருப்பவையே. இத்தகைய அக்கறையைத் தமக்கு வரும் துணை, நம்மீது வைத்திருந்தால், வாழ்வில் எத்தகைய கஸ்டம் வந்தாலும், தம்மை பார்த்துக்கொள்ள ஒருவர் உள்ளார் என்ற எண்ணத்தில் மன உறுதியுடன் செயல்பட்டு நன்கு முன்னேற முடியும்.



உறவுகளில் மிகவும் முக்கியமான வைகளில் ஒன்று தான் நம்பிக்கை. ஒருவர் மீது நம்பிக்கை இருந்தால், வாழ்நாள் முழுவதும் சந்தோஷம் நிலைக்கும். அதுவே கொஞ்சம் குறைந்தாலும், அவை வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும். எனவே, அனை வரும் தனக்கு வரும் துணை தம் மீது முதலில் நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டு மென்று நினைப்பார்கள்.

ஒவ்வொருவருமே தன் துணைவரிடம் ஒருவித மரியாதையை எதிர்பார்ப்பார்கள். அதிலும் அத் தகைய மரியாதையானது, தனக்கு வரும் துணை ஏதாவது ஒரு முடிவு எடுக்க வேண்டுமெனில் அதற்குத் தன்னையும் மதித்து, கலந்தாலோசித்து பின் எடுக்க வேண்டும் என்பது தான்.

கணவன் மனைவியாக இருந்தாலும், அதில் ஒரு நட்பு இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால், அது தான் என்ற அகங்காரம் மற்றும் அடிக்கடி ஏற்படும் பெரும் மோதல்களைத் தவிர்க்க உதவியாக இருக்கும். மேலும், யாராக இருந்தாலும், தனது கஸ்டம், சந்தோஷம் போன்றவற்றை நண்பர்களிடம் தான் பகிர்ந்து கொள்வோம். தனக்கு வாழ்க்கைத் துணையாக வருபவரைப் பற்றிய எத்தனை எதிர்பார்ப்புகள் இருந்தாலும், இதனைப் புரிந்து கொண்டு, செயல்பட்டால், வாழ்க்கையானது சந்தோஷமாக இருப்பதோடு, ஆரோக்கியமானதாகவும் இருக்கும்.

## அளவுக்கதிகமான பருத் தொல்லைக்கு...

ஒரு கொத்து வேப்பிலையை எடுத்து, வெயிலில் காய வைத்து பொடி செய்து, காற்றுப் புகாத போத்தலில் போட்டு மூடி வைக்கவும். இதில், ஒரு தேக்கரண்டி எடுத்து, முல்தானி மிட்டி (இதனை




மருந்துக் கடைகளில் வாங்கலாம்) ஒரு தேக்கரண்டி தயிர் கலந்து, வாரம் இருமுறை அல்லது மூன்று முறை உபயோகிக்கவும். இதை, அரை மணி நேரம் காயவிட்டு, பிறகு விரல்களை ஈரப்படுத்தி, லேசாகத் தேய்த்து, குளிர்ந்த தண்ணீரில் முகம் கழுவவும். தீராத பருத் தொல்லை குணமாகும்.

ஒரு தேக்கரண்டி கோதுமை மாவை, தண்ணீரில் குழைத்து, முகத்தில் தடவி, ஈரமான விரல்களால் தேய்த்து கழுவி னாலும் பருக்கள் குறையும். கோதுமைத் தவிடு ஒரு தேக் கரண்டி, சந்தனப் பவுடர் ஒரு தேக்கரண்டி, சிறிது பன்னீர் கலந்து, முகத்தில் தடவிக் காய்ந்ததும் எடுத்து விடவும்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம், ஐஸ் கட்டிகளால் முகத்தைத் தேய்க்கவும். இது, சருமத்திலுள்ள அதிகப் படியான எண்ணெய்ப் பசையை அகற்றும்.


பருத்தொல்லைக்கு பொடுகும் ஒரு முக்கிய காரணம். கூந்தலை வெது வெதுப்பான எண்ணெயால் மசாஜ் செய்து, தயிர் உபயோகித்துக் குளித்து வந்தால், பொடுகு நீங்கும்.

## கைகள் பளபளக்க...



கைகளில் ஏதேனும் ஒரு கிறீம் அல்லது பாலாடையைப் பூசி, மசாஜ் செய்யுங்கள். பின், கைகளை நீராவி படும்படி சிறிது நேரம் வைத்திருங்கள். துடைத்துவிட்டு, கைகளை மெல்லிய துணியால் பத்து நிமிடம் மூடி வையுங்கள். தொடர்ந்து இப்படிச் செய்தால், உங்கள் கைகள் பட்டுப் போலாகி விடும். சிறிதளவு பாலாடையை எடுத்து, ஒவ்வொரு நகத்தின் மேலும் வைக்கவும். அதன் மீது எலுமிச்சம் பழத்தைப் பாதியாக நறுக்கி வைத்து மசாஜ் செய்யுங்கள். நகங்கள் பளபளக்கும்.

## உருளைக்கிழங்கு, மிளகு வறுவல்



**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு - 4 (நடுத்தர அளவு),
வெங்காயம் - 1
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
தனியாத்தூள் - 2 அல்லது 3 தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1/4 தேக்கரண்டி
மிளகு (கொரகொரப்பாக பொடித்தது) - 1 தேக்கரண்டி
சீரகம் - 1/2 தேக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிதளவு
எண்ணை - 2 மேசைக்கரண்டி
உப்பு - தேவைக்கேற்றவாறு

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேக வைத்து, தோலை உரித்து விட்டு, சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

ஒரு வாணலியில் எண்ணைய் விட்டு, காய்ந்ததும் சீரகம், கறிவேப்பிலையைச் சேர்த்து, சீரகம் பொரிந்ததும் வெங்காயத்தைச் சேர்த்து வதக்கவும். பின்னர் அதில் உருளைக்கிழங்கைப் போட்டு சற்று வதக்கவும். அதன் பின் அதில் மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள் தூள், உப்புச் சேர்த்து நன்றாகப் பிரட்டி விடவும். கடைசியில் மிளகுத்தூளைத் தூவி, மீண்டும் நன்றாகக் கிளறி விடவும். அடுப்பை சிறு தீயில் வைத்து, உருளைக்கிழங்கை அடிக்கடி திருப்பி விட்டு 5 முதல் 10 நிமிடங்கள் வரை அல்லது கிழங்கு பொன்னிறமாகும் வரை வைத்திருந்து எடுக்கவும்.

# உடல் நலம்

**T. பிரியா, கிளிநொச்சி.**

**கேள்வி:**

வயது 32, பெண். முகத்தை வெண்மையாக்க பயன்படுத்தும் பூச்சு மருந்துகளில் பாதகமான பொருட்கள் உண்டென்பது உண்மையா?

**பதில்:** இது இன்று ஒரு முக்கியமான பிரச்சினையாகும். வெண்மைத் தோற்றத்தைப் பெறப் பலரும் முயல்கின்றனர். பெண்கள் மட்டுமே முற்காலத்தில் இதில் அக்கறை கொண்டிருந்தனர். இன்று ஆண்களுமே கூட கண்ணாடிக்கு முன்னால் மணிக்கணக்கில் நிற்பதைக் காண்கிறோம். அவ்வாறே மூலை



டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

முடுக்கு எங்கும் பெண்கள் அலங்கரிப்பு நிலையங்கள் முளைத்திருக்கின்றன. முகத்தை வெண்மையாக்குவது Bleaching செய்வது ஒரு தொழிலாகவே மாறிவிட்டது. ஆனால், பயன்படுத்தப்படுவது ஆங்கில மருந்துகளே ஆகும். சில மூலிகை வகைக் கிறீம்கள் மட்டும் அரச அனுமதியுடன் இறக்குமதி விநியோகம் செய்யப்படுகின்றன. ஆனால், எல்லோருக்கும் தெரிந்த விடயமானது மூலிகை வகை கிறீம்கள் மிகமிக மெதுவாகவே பலன் தரத் தொடங்குகின்றன. மூலிகை மருந்து என்ற பெயரில் ஆங்கில மருந்துகளை பூச்சு மருந்துகளாக டியூப்களில் அடைத்து விற்கும் மோசடி கூட நடக்கிறது. ஆங்கில மருந்துகளில் சில விரைந்து வெண்மையாக்கும் தன்மை கொண்டவை. ஆனால், இவை மிக ஆபத்தானவையாகவும் இருக்கக் கூடும். உதாரணமாக MELARA என்ற ஒரு வகைக் கிறீம் சட்டவிரோதமாகப் புழக்கத்தில் உள்ளது. இதில் Mometasone என்ற ஸ்டீரொய்ட் வகை மருந்து உள்ளது. சாதாரணமாக கிறீம் என்ற பூச்சு மருந்துவகை பாவிப்பதாயின் மாதக் கணக்கில் பாவிக்க வேண்டும் என்பதை யாவரும் அறிவர், இவ்வாறு மாதக் கணக்கில் Mometasone போன்ற ஸ்டீரொய்ட் மருந்துகள் பாவிப்பது உகந்ததல்ல. முகத்தில் சுருக்கம் விழுதல் நாளடைவில் கருமையடைதல் முதலிய பிரச்சினைகளும் ஏற்படலாம். ஸ்டீரொய்ட் வகை மருந்துகளில் மாத்திரையாக விற்கப்படும் பிரெட்னிசோலின் மிகப் பிரபலமானது. இது மிகச் சில நோய்களில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பாவிக்கப்படும். அதுவும் உரிய மருத்துவ ஆலோசனை, மருத்துவ கண்காணிப்பு என்பனவற்றின் கீழ்தான் பயன்படுத்தப்பட்டு பின் கைவிடப்படும். பிரெட்னிசோலின் வகை மருந்துகளை உடலின் நிறை அதிகரிக்கவும் சில போலி மருத்துவர்கள் மருந்தகங்களில் (Pharmacy) விற்பனை செய்பவர்கள் முதலானோர் வழங்குகின்றனர். இந்த மருந்தை மாதக் கணக்கில் குடித்தால் முகம் உப்பி உடல் நிறையும் அதிகரிக்கும். ஆனால், மருந்தை நிறுத்தியதும் உடல் நிறையும் குறைந்துவிடும். மேலும் இந்த மாத்திரையை வைத்திய ஆலோசனை இன்றி உட்கொண்டால் பிற்காலத்தில் நீரிழிவு, எலும்பு தேயும் Osteoporosis, Gastritis போன்ற பல பக்க விளைவுகள் உண்டாகும். மாத்திரையின் பக்கவிளைவுகளை விட ஸ்டீரொய்ட் வகை பூச்சு மருந்துகள் (Cream) பக்கவிளைவு குறைந்தவையே என்றாலும் அவற்றிலும் தோலில் பயங்கரமான பக்கவிளைவுகள் ஏற்படலாம். சில சமயம் தோல் புற்றுநோய் கூட உண்டாகும். மேலே கூறிய Cream வகைகளில் உள்ள Mometasohe ஆனது Prednisolone போலவே ஸ்டீரொய்ட் வகையைச் சார்ந்ததாகும்.

ஆனால், மேற்கூறிய பூச்சு மருந்துகள் இலங்கையில் அலங்கரிப்பு நிலையங்கள் பலவற்றில் கண்மூடித்தனமாகப் பயன்படுத்தப்படுகின்றன. சில சலூன் அலங்கரிப்பாளர்கள் இவ்வாறான கிறீம்களை நூற்றுக்கணக்கில் வாங்கிச் செல்வதை நான் கூட அவதானித்துள்ளேன். இது மிகவும் ஆபத்தான ஒரு நிலையாகும். இலங்கையில் இவ்வாறான அலங்கரிப்பு நிலையங்களை கண்காணிக்கச் சரியான சட்ட மூலங்கள் இல்லை.

ஆங்கில மருந்துகளைப் பற்றிக் கற்றவர்கள், ஆங்கில மருத்துவர்களும் தகுதி வாய்ந்த மருந்தாளர்களும் (Pharmacists) மட்டுமே. இவர்கள் தவிர்ந்த எவரும் இவற்றை விற்க அல்லது பயன்படுத்தப் பரிந்துரைக்க முடியாது. இப்படியிருக்க ஆங்கில மருந்தான Mometasone என்ற ஸ்டீரொய்ட் (Steroid) வகை மருந்தை பற்றிக் கற்காத, அதன் பக்கவிளைவுகளைப் பற்றித் தெரியாத அலங்கரிப்பு நிலைய உரிமையாளர் இதை பயன்படுத்துவது சரியல்ல. மருத்துவரின் மருந்துச் சிட்டையின்றி மருந்தகங்களில் இதை மருந்தாளர்கள் விற்பதும் அனுமதிக்கப்பட்ட விடயமல்ல. இவ்வாறு கூறுவதால் வெண்மைத் தோற்றம் பெறவழியே இல்லை என்று அர்த்தமில்லை. ஆங்கில மருத்துவத்தில் பாதுகாப்பாகப் பயன்படுத்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் உள்ளன.

வாசகர்களே!

உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு, டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**உடல் நலம்,**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

# மனச்சோர்வுக்கு சிகிச்சை அளிக்கும் போது...



மனதில் ஏற்படும் ஏதேனும் ஒரு கவலை அல்லது பிரச்சினை, மனதைப் பாதித்து, அதுவே மனச்சோர்வு எனும் மனநோயாக மாறுகிறது. மனச்சோர்வு நோய்க்கு நிச்சயமாகச் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம். மனச்சோர்வுக்கு சிகிச்சை அளிக்கும் முறைகள் பல வகைப்படுகின்றன. அதில் மனச்சோர்வடைந்தவரிடம் பேசி அவருக்குள்ள பிரச்சினை கண்டறியப்பட்டு அதற்குத் தீர்வு காண்பதாகும்.

ஆனால், சில மருத்துவமனைகளில் உள்ள மனநல நிபுணர்கள், முதலில், பாதிக்கப்பட்டவரையும், அவரது குடும்பத்தாரையும் சந்தித்துப் பேச விரும்புவார்கள். இதன் மூலம் பிரச்சினை எந்த இடத்தில் இருக்கிறது என்பதை அவர்கள் உணர வாய்ப்பு ஏற்படும். இந்தச் சிகிச்சையின் போது, நீங்கள் இவ்வாறு நடந்து கொள்வதுதான் அவரது மனச் சோர்வுக்குக் காரணம் என்று கூறினால், அது உங்களைக் குறை கூறுவதாக எடுத்துக் கொள்ளாமல், அவருக்குள்ள பிரச்சினையைக் கண்டறிந்து, அதற்குத் தீர்வு காண நீங்கள் உதவப் போகிறீர்கள் என்று உணருங்கள்.

மேலும், குடும்ப உறுப்பினர்களைச் சந்தித்துப் பேசச் சில சமயம் மருத்துவர்கள் விரும்புவார்கள். அதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டியது மிகவும் அவசியம். சிகிச்சை துவங்கி சில காலம் காத்திருக்க வேண்டியது அவசியம். ஏனெனில், ஒவ்வொருவரிடமும் பேசி, மனச்சோர்வுக்கான காரணத்தைக் கண்டறிந்து, அதுதான் பிரச்சினையா, அது மட்டும்தான் பிரச்சினையா என்பதை உறுதி செய்து கொள்ள மனநல மருத்துவர்களுக்குச் சிறிது காலம் பிடிக்கலாம். அதுவரை அவர்களது முயற்சிக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டியது குடும்பத்தினரின் முக்கிய கடமையாகும்.

சில சமயம், மனச்சோர்வு அடைந்தவர் மாணவராகவோ, ஊழியராகவோ இருக்கலாம், அவர் சார்ந்திருக்கும் நிறுவனத்திலும் அவரைப் பற்றிய அறிக்கை கேட்கப்படுகிறது. இது அவரது மனச் சோர்வுக்கான சிகிச்சையை விரைந்து செய்ய வழி ஏற்படுத்தும்.

ஒரு காய்ச்சலுக்காக மருத்துவமனை சென்றால், மருந்து, மாத்திரை கொடுப்பார்கள். அதைச் சாப்பிட்டதும் காய்ச்சல் சரியாகிவிடும். ஆனால், மனச்சோர்வுக்கு அவ்வாறு மருந்து, மாத்திரைகளைக் கொடுத்து சரி செய்ய முடியாது. எனவே, அவரது ஆழ்மனதில் பதிந்துள்ள ஒரு பிரச்சினையை வெளியில் கொண்டு வந்து, அதனைச் சரி செய்து, அவரது மனதில் உள்ள சோர்வை நீக்குவதற்கு சில காலம் பிடிக்கலாம். அதுவரை குடும்பத்தினர் முழு ஒத்துழைப்புக் கொடுத்து சிகிச்சையைத் தொடர வழி வகுக்க வேண்டும். மேலும், மனச்சோர்வு ஏற்பட்டவருக்கு நமது ஆதரவையும், அன்பையும் காட்ட வேண்டும்.

சில சமயங்களில் பாதிக்கப்பட்டவர், தொடர்ந்து சிகிச்சைக்கு வர விரும்புவதில்லை. அதற்காகக் கோபத்தையோ, தாக்குதலையோ கூட வெளிப்படுத்தலாம். எனினும், குடும்பத்தார், அவருக்குப் பல வழிகளில் விளக்கி, சிகிச்சையைத் தொடர வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

மனச்சோர்வு ஏற்படக் காரணமாக சில விடயங்கள் நடந்திருப்பதை நீங்கள் அறிந்திருந்தாலோ, அதில் உங்களுக்குத் தொடர்பிருந்தாலோ அதனை மருத்துவரிடம் மறைக்காமல் தெரிவிக்க வேண்டும். ஏனெனில், அது எளிதான தீர்வுக்கு வழி வகுக்கும். எனவே, மனச்சோர்வுக்கு உடனடியாகச் சிகிச்சை எடுத்து அதனைக் குணப்படுத்த வேண்டியது அவசியம். தவறின், அதுவே மனநலப் பிரச்சினையாக உருவெடுக்க வாய்ப்பு உள்ளது.

# மூட்டுவலி தீர...



மூட்டுவலி இருந்தால், தேங்காய் எண்ணெய் மற்றும் எலுமிச்சைச் சாறு ஆகியவற்றை சரிவிகிதத்தில் எடுத்து கொதிக்க வைக்கவும். வலி உள்ள இடத்தில் தடவி, நன்கு தேய்த்தால், வலி உடனே மறைந்து விடும்.

# மௌன மனவெளிகள்

68

நா.யோகேந்திரநாதன்



வெள்ளிக்கிழமை பாடசாலை முடிந்ததுமே கமலி விடுதிக்குப் போய்ப் பயணப்பையை எடுத்துக் கொண்டு பேருந்து நிலையம் நோக்கிப் புறப்பட்டாள். அவளுடன் அச்சுவேலியைச் சேர்ந்த இரு மாணவிகளும் இணைந்துகொண்டனர்.

அவர்கள் பஸ்நிலையம் வந்த போது பருத்தித்துறை பஸ் புறப்படத் தயாராக இருந்தது. அவள் எதிர்பார்த்தபடி சொர்ணத்தை அங்கு காணவில்லை. விதானையார் சொர்ணத்துக்குத் துணையாக அவளுடன் கூடி வரும்படி கமலியிடம் கண்டிப்பாகச் சொல்லியிருந்தார். மற்ற இரு மாணவிகளும் கமலியை அழைத்த போதும் அவள் ஏறவில்லை. பஸ் புறப்பட்டு விட்டதால் அடுத்த பஸ்ஸில் போகலாம் என்ற நினைப்புடன் பஸ் நிலையத்தில் நின்றிருந்தாள்.

அவள்சொர்ணத்தின்வருகையைஎதிர்பார்த்துக் கஸ்தூரியார் வீதியை நோக்கியபடி நின்றிருந்த போது, சொர்ணம் பலாலி பஸ்ஸில் வந்து இறங்கினாள். அவளின் அருகே சென்று மகிழ்ச்சியுடன் அவளின் கையைப்பிடித்த கமலி "பிள்ளை நீங்கள் நடந்து வருவியள் என்று பார்த்துக் கொண்டு நின்றேன்" என்றாள். "வேற பிள்ளைகளும் பஸ்ஸில் வந்தினம் கூட்டிக்கொண்டு வந்தனான்" என்றாள் சொர்ணம். அவர்கள் பஸ்ஸில் போய் ஏறவும் அது புறப்படவும் சரியாக இருந்தது. அரச ஊழியர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவ மாணவியர்கள் என பஸ் நிரம்பி வழிந்தது. நடத்துநர் "முன்னுக்குப் போங்கோ" எனக் கத்திக்கொண்டிருந்தார். அவர்கள் மேல்க் கம்பியைப் பிடித்துத் தொங் கியவாறே நின்றுதான் பயணிக்கவேண்டி யிருந்தது. சொர்ணத்துக்கு அன்று தான் பஸ்ஸில் முதல்ப் பயண அனுபவம். பஸ் பிரேக் பிடிக்கும் போது முன்பக்கம் சரிவதும், புறப்படும் போது பின்பக்கம் சாய்வதுமாகப் பெரும் அவதிப்பட்டாள். பஸ்ஸின் அமைவு களுக்கேற்ப முன்னுக்கும் பின்னுக்கும் தள்ளப்படும் போது அவளுக்குத் தோள்மூட்டுக் கழன்று விடும் போல இருந்தது. அவளின் சிரமத்தைப்புரிந்து கொண்ட கமலி மெல்ல ஒரு கையால் அவளை அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பு சொர்ணத்துக்கு ஒரு வித கூச்சத்தை ஏற்படுத்திய போதிலும், அது பஸ்ஸின் குலுக்கலுக்குள் பெரும் ஆறுதலாக இருந்தது. கமலியுடன் கூட வந்த இரு மாணவிகளும் இறங்கி விடவே அந்த இடத்தில் இருவரும் அமர்ந்துகொண்டனர்.

சிவஞானம் அந்த பஸ்ஸை எதிர்பார்த்து சந்திக்கு வந்திருந்த போதிலும் அதை வெளிக் காட்டாமல் வாசிகசாலையில் போய்ப் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். எல்லாப் பத்திரிகைகளும் தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிராகத் தமிழரசுக் கட்சி நடத்தும் ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்திருந்தன. அச்செய்திகள் தன்னையும் உணர்ச்சிவசப்படுத்துவதை அவன் உணரத் தவறவில்லை.

'அல்பியன்' பஸ்ஸின் உறுமல் தூரத்தில் வரும் பொழுதே அவன் காதில் விழுந்துவிட்டது. பத்திரிகையை மூடி அதன் மேல் அதற்குரிய மரக்கட்டை 'வெயிட்டை' வைத்துவிட்டு அவன் வெளியே வந்தான்.

ஆலடிச்சந்தியில் பஸ் நின்றதும் முதலில் மாணிக்கவாத்தியார் தான் இறங்கினார். மேலும் இருவர் இறங்கிய பின்பு முதலில் கமலியும் பின்பு சொர்ணமும் இறங்கினர். அவர்கள் இறங்கும் போதே கமலி சிவஞானத்தைக் கண்டு விட்டாள். ஒரு வாரத்தின் பின்பு அவனைக்காணும் போது ஒரு மனக் கிளர்ச்சி ஏற்படுவதை அவளால் உணர முடிந்தது. சிவஞானம் அவர்களின் அருகில் வந்தான்.

கமலி, "வருவியள் எண்டு நினைச்சன். அது மாதிரி வந்திட்டியள்" என்றாள். ஒரு மெல்லிய புன்னகையுடன். அந்த வார்த்தைகள் அவனின் மனதைக் குளிரவைத்தன. "உண்மையாய் நினைச் சனீங்களோ" என அவன் வியப்புடன் கேட்டான்.

"ஏன் நினைக்கக் கூடாதே?"

"அப்படியில்லை சும்மாதான் கேட்டன்"

"சரி போட்டு வாறம் நேரமிருந்தால் காலமை வீட்டை வாங்கோ" என்று விட்டு இருவரும் புறப்பட்டனர். "பொழுதுபடப்போகுது... கூட்டிக்கொண்டு போய்விடு கிறியளே" எனக் கமலி கேட்பாள் என்ற சிவஞானத்தின் எதிர்பார்ப்பு நிறைவேறாத நிலையில் அவன் அவர்கள் இருவரும் போவதையே பார்த்துக் கொண்டு நின்றான்.

சொர்ணமும், கமலியும் அருகருகாக நடந்து வரும் போது அது ஒரு தனித்துவமான அழகா கத்தான் தென்பட்டது. அந்தக்காட்சி சிவஞானத்திற்கு தந்திக் கம்பியில் அருகருகாக அமர்ந்திருக்கும் இரு வெண்புறாக்களையே நினைவூட்டியது.

பளிச்சிடும் வெண்மையான சட்டை, வெள்ளைச் சப்பாத்து, அதே நிற மேஸ், நீண்டு வளர்ந்த கூந்தல் இரண்டாகப் பின்னப்பட்டு கறுத்த ரிப்பனால் கட்டப்பட்ட அழகு என எல்லாமே அவர்களிடம் இதுவரை காணாத ஒரு வனப்பை வெளிப்படுத்தின. சொர்ணம் கறுத்தப் பொட்டு வைத்திருந்தாள். கமலியின் பொட்டில்லா நெற்றிகூட சுருண்டு புரண்ட ஒரு சிறு மயிர்க்கற்றையால் அழகூட்டப்பட்டிருந்தது.

அவர்கள் இருவரும் அன்னியோன்னியமாக ஒருவருடன் ஒருவர் கதைத்துக் கொண்ட போதிலும் அவர்களின் அழகுகள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக் கொண்டுதானிருந்தன.

சூத்திரக்கிணற்றடியில் ஆயிரம் கன்று புகையிலையைப் பச்சைக் குத்தகையாத விலை பேசித் தீர்த்துவிட்டு காசிப்பிள்ளையும், நரிமுத்தரும் அந்த வீதியால் காரில் வந்துகொண்டிருந்தனர்.

சிங்கனின் இறப்பின் பின்பு காசிக்குக் குருச்சந்திர யோகம் அடிக்க ஆரம்பித்துவிட்டது. சிங்கன் செத்த பின்பு அல்வாய், தும்பளை வியாபாரிகள் வராமலே விட்டுவிட்டனர். கோண்டாவில், உரும்பிராய், வியாபாரிகள், உணர்த்திப் பாடம்போட்டு வைக்கும் புகையிலையைத்தான் விரும்பி எடுப்பார்கள். அதிலும் தங்கள் சுற்றாடல்களில் உள்ள புகையிலையெல்லாம் கட்டி ஏற்றி முடித்த பின்பு தான் வடமராட்சிப் பக்கம் எட்டிப்பார்ப்பார்கள். வட்டிக்குக் கடன் வாங்கித் தோட்டம் செய்யும் விவசாயிகள் இவ்வளவு காலம் பொறுப்பது சாத்தியமில்லை. எனவே அவர்கள் காசிப்பிள்ளைக்கே கேட்ட விலைக்குக் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

ஆனால், சிவஞானமும், சிங்கனின் தகப்பன் சிதம்பரியும் வேறு ஆலடிவெட்டையைச் சேர்ந்த மூவரும் காலம் தாழ்த்தியென்றாலும் கோண்டாவில் வியாபாரிகளுக்கே கொடுத்து வந்தனர்.

ஒரு வளைவால் திரும் பியபோது காசி, சொர்ணமும் கமலியும் அருகருகாக நடந்து வருவதைக்கண்டு விட்டார். உடனடியாகக் காரை 'பிறேக்' போட்டு நிறுத்தி விட்டார்.

சொர்ணத்துடன் சரி சமமாகக் கமலி நடந்து வந்ததும், அவர்கள் மகிழ்ச்சியுடன் சிரித்துக் கதைத்ததும் அவரைக் கோபத்தின் உச்சிக்கே கொண்டுபோய்விட்டன.

"சனியன்கள்" என்று விட்டு பல்லை நெருமினார் காசி. நரிமுத்தர் திடுக்கிட்டுப்போய் "என்ன முதலாளி" என்று கேட்டார். "விதானையாரின்ரை சாதியென்ன? கொலுசென்ன? அது பெத்தது பார் அவளோடை தோளிலை கைபோடாத குறையாய் வருகுது?" அப்போது தான் முத்தருக்குக் காசியின் கோபம் ஏன் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவருக்கும் கூட அந்தக் காட்சி எரிச்சலை ஊட்டியது. அவர் தனக்கேயுரித்தான நயவஞ்சகக் குணத்துடன் சொன்னார். "முதலாளி உது விதானைக்குத்தான் பிறந்துதோ, இல்லாட்டில் அங்கை பனை சீவப் போறவனுக்குத்தான் பிறந்துதோ ஆருக்குத் தெரியும்" என்றார். நரிமுத்தருக்கு வாய் கூசாமல் இப்படியான கேவலமான கதைகளைக் கட்டிவிடுவதில் ஒரு தனி ஆற்றல் உண்டு. ஒரு பெரும் பொய்யை அவிழ்த்து விட்டு, ஒரு பெரு மூச்சுடன்.

"எல்லாம் அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்" என சொல்லிக் கொண்டே போய்விடுவார். அது வளர்ந்து கை வைத்து, கால் வைத்து, விஸ்வரூபம் எடுத்து பெரும் தீமைகளையும் செய்துவிடும். அதன் வீச்சில் பிறந்த இடமும் கண்டுபிடிக்கப்படாமலே போய்விடும்.

"இருக்கும்! இருக்கும்" என்ற காசி "இவள் ஒரு கீழ் சாதிக்காரனோட ஓடினால் தான் விதானை பாடம் படிப்பன் நான் செய்யிற எல்லா வேலையையும் அவன் தானே மணியாறன்மூலையார் பக்கம் நிண்டு தோற்க வைக்கிறவன்" முத்தர் கீழ் சொண்டை முன் நீட்டி பக்கவாட்டில் தலையை ஆட்டியவாறே "ம்.. ஹும் நடக்காது" என்றார்.

"ஏன்...."

"இவளுகள் இரகசியமாய் வைச்சிருப்பாளுகள் ஒழிய வெளிப்டையாய் ஓட மாட்டாகள்."

"வைச்சிருக்கிறாளோ... இல்லையோ! அப்படிக் கதைகட்ட வேணும். விதானை அதைக் கேட்டுக் குடும்பத்தோடை மருந்து குடிச்சுக் குடிச்சுச் சாக வேணும்."

"செய்யலாம் அவசரப்படாதையுங்கோ நேரம் பார்த்து அடிப்பம்" காசி அந்த வார்த் தைகளில் திருப்தியடைந்திருக்க வேண்டும். காரை 'ஸ்டாட்' செய்தார். அது சீறிக் கொண்டு பாய்ந்தது. காருக்குள் நடந்தவை பற்றி எதுவும் தெரியாமலே கமலியும், சொர்ணமும் சிரித்துக் கதைத்தவாறே நடந்துகொண்டிருந்தனர்.

அன்று முழுவதுமே இளையவனுக்குப் பொழுது மிகவும் மெதுவாக நகர்வது போலவே தோன்றியது. எப்படியும் சொர்ணம் ஐந்து மணிக்குப் பிறகு தான் வருவாள் என்பதை நன்கு தெரிந்திருந்ததால் அன்று சீவலுக்குப் பிந்தியே வந்தான்.

இளையவன்விதானையார் வீட்டுமுற்றத்திற்கு வந்த போது அவனின் கண்கள் அவனை யறியமலே எங்கும் சொர்ணத்தை தேடத் தொடங்கின. அவள் எங்குமே காணப்படவில்லை.

அவனைக் கண்டதும் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்த சீதேவிப்பாட்டி "எங்கயடா...! இவள் பெட்டையை இன்னும் காணயில்லை. பொழுதும் படப்போகுது, விதானையும் அவளைப் போய் கூட்டிவருவமென்றில்லை, ஊர்த் தொளாவாரம் பார்க்கப் போட்டான்" என அங்கலாய்த்தாள்.

"போய்ப் பார்த்துக் கூட்டி வாடா" எனக் கிழவி சொல்லும் என அவன் எதிர்பார்த்தான். கிழவி படலைக்குள் போய் நின்று தெருவை எட்டிப் பார்த்தாளே ஒழிய அவனிடம் அப்படி எதுவுமே சொல்லவில்லை.

"நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டேயணை?" என்று கேட்கவும் அவனுக்குத் துணிவு வரவில்லை.

"அவள் பொன்னுக் குட்டியன்ரை பெட்டையோடை தானே வருவள். அவள் தேப்பனை மாதிரித் துணிஞ்சவள்" எனக்கூறி கிழவி தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டாள்.

இளையவன் சீவலுக்குப் போகவெனத் திரும்பிய நேரத்தில் "பெத்தாச்சி" என்ற சொர்ணத்தின் குரல் கேட்டு அப்படியே நின்று விட்டான்.

"வந்திட்டியே! நான் நேராத கோயில் இல்லை" என்றவாறே கிழவி அவளின் அருகில் சென்றாள்.

சொர்ணத்தின் கண்கள் அவளின் பூக்கன்றுகள் பக்கம் திரும்பின. "ஆரணை தண்ணி ஊத்திக் கிடக்குது" எனக் கேட்டாள் அவள்.

"இளையவன் தான்... என்னைக் கொண்டு அள்ளுவிச்சு ஒவ்வொரு கண்டாய் ஊத்தினவன்" என்றாள் பாட்டி.

"நான் இல்லாட்டியும் என்ரை வேலையெல்லாம் பார்ப்பாய்... என்ன?" என இளையவனைப் பார்த்துக் கேட்டாள் சொர்ணம்.

"ஓ.. கட்டாயம்" என்றான் இளையவன் புன்ன கையுடன்.

"சரி சரி நீ போய் சீவிப் போட்டு வாவன், நான் உடுப்பை மாத்திப்போட்டு வாறன்." என்ற வாறே உள்ளே போகக் காலெடுத்த சொர்ணத்தை "நில் பிள்ளை" எனத் தடுத்தாள் பாட்டி.

"ஏனணை?"

"உந்த பஸ் வழிய கண்ட சாதி, நிண்ட சாதி யெல்லாம் பயணம் செய்யுறது. எவன் ஆரெண்டு தெரியுமே? போய்க் குளிச்சிட்டு வீட்டுக்குள்ள போ..., வா.. நான் மூன்று வாளி ஊத்திவிடுறன்" என்றார். இளையவன் யாரோ ஆயிரம் சம்மட்டிகளால் ஒரே நேரத்தில் அடித்தது போன்று அதிர்ந்து போனான். எதுவுமே பேசாது பனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

(தொடரும்)

# முஸ்லிம்கள் தனித்து நின்றால் பலமில்லை!

**நிலாம்டீன்**
*அட்டாளைச்சேனை*

இந்தியாவின் காஷ்மீரில் முஸ்லிம்கள் படும் அவலம் பெருமளவு இலங்கைக்குள் வருவதில்லை. காரணம் காஷ்மீர்காரரும் நாமும் மொழியால் வேறுபட்டவர்கள் ஆனால், வட.கிழக்கில் தமிழர்கள் பட்ட, பட்டுக் கொண்டிருக்கின்ற அதே பிரச்சினை தான் காஷ்மீர் பிரச்சினையும். கடத்தல், கைது, கற்பழிப்பு, சித்திரவதை, பொய்யான வழக்குப் பதிவு இப்படியாக வடகிழக்குத் தமிழ் மக்களின் அதே துன்பத்தைத்தான் காஷ்மீர் முஸ்லிம்கள் நாளாந்தம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கில் நடந்தது போன்று காஷ்மீரில் கொத்தணி, பொஸ்பரஸ் குண்டுகள் மட்டும் தான் போடவில்லை. கொத்துக் கொத்தாக மக்கள் இன்னும் மடியவில்லை. அந்த ஒன்றுதான் இன்னும் காஷ்மீரில் நடக்கவில்லை. இலங்கையில் இருக்கின்ற அதே பயங்கரவாதச் சட்டம்தான் காஷ்மீரிலும் உள்ளது. இலங்கை இராணுவம் இரும்புக்கரம் கொண்டு, தமிழ் மக்கள் அடக்கி ஆளப்படுவது போன்றுதான் இந்திய இராணுவம் காஷ்மீர் முஸ்லிம்களை நசுக்கி வருகின்றது.

காஷ்மீர், பாலஸ்தீனம் போன்ற விடுதலையை முஸ்லிம்கள் ஆதரிப்பது போன்று தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை இலங்கையின் முழு முஸ்லிம்களும் ஆதரிக்க வேண்டும். கடந்த ஆண்டு ஜெனீவாவுக்கு தமிழ் மக்களுக்கு எதிராகச் சென்ற 'ஜம்மியத்துல் உலமா சபை' அதன் பாவத்தைக் கழுவ வேண்டும். தமிழ் மக்கள் தோல்வி கண்டால் இந்த நாட்டில் முஸ்லிம்கள் ஜடங்களாகத் தான் நடமாட வேண்டும்.

இலங்கையின் போர்க்குற்றம், மனித உரிமை மீறல் தொடர்பான விசாரணைகள் சர்வதேச, சுயாதீனக் குழுவினால் நடாத்தப்பட வேண்டும். இதற்கு இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஒட்டுமொத்தக் குரல் கொடுக்க வேண்டும். தமிழர்கள் தோற்றுவிடக் கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். தமிழர்களின் வெற்றியில் தான் முஸ்லிம்களின் உரிமைகள் மறைந்து காணப்படுகின்றன. இந்த உண்மையை நாம் எமது பல ஆய்வுகளில் பதிவு செய்துள்ளோம்.

முஸ்லிம்களும் தங்களது பிரச்சினைகளைச் சுமந்து கொண்டு ஜெனீவா செல்ல வேண்டிய காலம் வெகுதூரத்தில் இல்லை. அனேகமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் முஸ்லிம்கள் ஜெனீவாவுக்கு உரிமை வேண்டி படையெடுக்கலாம். மனித உரிமை என்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல, முஸ்லிம்களுக்கும் தான். தமிழர் உரிமைப் போராட்டம் என்பது தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம்களுக்கும்தான். எதிர்காலம் முஸ்லிம்களுக்கும் இந்த நாட்டில் வாழ முடியாத நிலையை உருவாகும். மியன்மார் போன்று இலங்கையிலும் ஒரு நிலமையை உருவாக்க திரைமறைவில் திட்டமிடப்படுவதாகவும் நாங்கள் கடந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்பு பல ஆய்வுகளில் எழுதியிருந்தோம்.

தாய்நாடு, தாய் நாட்டுப்பற்று என்றெல்லாம் கும்மாளம் அடித்து மஹிந்த சகோதரர்களுக்கு ஆதரவாக பல்லாக்குத் தூக்கியவர்களின் நிலை இன்று என்னவாயிற்று? சிங்கள மொழி மூலக் 'குர்ஆனை' கையில் வைத்துக் கொண்டு மிகவும் கீழ் மட்டத்தில் மிகவும் கேவலமாக பொதுப்பல சேனா திட்டித் தீர்த்துள்ளதே. உலமா சபைத் தணித்து கைவிடப்பட்டுவிட்டது. எந்தவொரு முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஜம்மியத்துல் உலமா சபைக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவுமில்லை, கைகொடுக்கவுமில்லை. ஆனால், இப்போது ஒரு அம்பாறை மாவட்ட அரசியல்வாதி மட்டும் முதலைக் கண்ணீர் வடித்து ஊடக அறிக்கை விடுகின்றார். இந்த அறிக்கையை அவர் பாராளுமன்றத்தில் விட்டிருக்கலாம் பேசியிருக்கலாம் அப்போது அதை நாம் பாராட்டி இருப்போம்.

நீர் மட்டும் என்ன மேதாவித்தனம் என்று என்மீது பலர் போர் தொடுக்கலாம். உண்மைகளும் யதார்த்தங்களும் அதுதான். தமிழ் மக்களின் தேசிய உரிமைப் போராட்டம் என்ற கேடயத்திற்குள்தான் முஸ்லிம்கள் மறைந்தும், தமிழர் விடுதலைப் போராட்டம் என்ற குடைக்குள் முஸ்லிம்கள் ஒதுங்கியும் அல்லது ஒளிந்தும்தான் கடந்த 60 ஆண்டுகளாக வாழ்ந்துள்ளார்கள். இப்போது தமிழர்களின் கேடயம் விலக்கப்பட்டதும் சிங்கள இனவாதிகளுக்கு முஸ்லிம்கள் முகம் தெரிந்துவிட்டது,

சகோதர இனப்படு கொலையை, இனஅழிப்பை, இனச்சுத்திகரிப்பை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. ஏற்றுக் கொள்ளவும் கூடாது. நேற்று தமிழ் மக்களுக்கு, நாளை முஸ்லிம் மக்களுக்கு என்பதை நாம் உணர வேண்டும் முஸ்லிம் இன அழிப்புக்கான நடவடிக்கைகளில் பொதுப்பலசேனா இறங்கியுள்ளதா என்ற சந்தேகம் வலுவடைந்து வருகின்றது.

இன்று பொதுப்பலசேனா நாடு முழுவதும் விதைக்கின்ற முஸ்லிம்களுக்கு எதிரான நச்சு விதை, அறுவடை செய்யும் காலம் வெகுதூரத்திலில்லை. என்னதான் நாங்கள் பேசித் தீர்ப்போம், சமாதானம் அமைதி கருதி விட்டுக் கொடுத்தோம் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் சொன்னாலும், ஜம்மியத்துல் உலமா சபை சொன்னாலும் பொதுப்பல சேனாவின் இந்த நச்சு விதைப்புகள் இந்த நாட்டில் முஸ்லிம் இளம் சமூதாயத்திற்கே மிகவும் ஆபத்தான முன்னெடுப்புத்தான். மிகவும் மோசமான துவேஷத் தீயை முஸ்லிம்கள் மீது பொதுப்பல சேனா விதைத்து வருகின்றது. நவீன வலைப் பின்னல்களான பேஸ்புக், ரிவிட்டர், இணையத்தளம், ஈமெயில் மூலமாக மிகவும் வேகமாக முஸ்லிம்கள் மீது இனவாதத் தீயை மூட்டிவருகின்றார்கள். இந்தத் தீ நாடு முழுவதும் எரியக் கூடிய மிகவும் ஆபத்தான நிலைதான் உள்ளது. இது மற்றுமொரு முஸ்லிம் இன அழிப்புக்கான வித்துக்கள் என்பதில் சந்தேகமில்லை.

வடகிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் மிகவும் அதிகமாகப் பாதிக்கக் கூடிய நிலைதான் உள்ளது. அவர்கள் அஞ்சி நடுங்கி வாழ்கின்றார்கள்.

முஸ்லிம்களின் வர்த்தகத்தின் மீதும், முஸ்லிம்கள் மத்தியில் வளர்ந்து வரும் கல்வியின் மீதும் சிங்களத்திற்கு பொறாமை ஏற்பட்டுவிட்டது. இந்தப் பொறாமையின் உச்ச கட்டமாக வலிந்து வம்புக்கு முஸ்லிம்களை இழுக்கின்றார்கள். பொறுமையின் உச்சக் கட்டத்தில் முஸ்லிம்கள் உள்ளார்கள். இந்தப் பொறுமை எல்லை தாண்டும் போது நாம் எல்லோரும் எது நடக்கக் கூடாது என்று அஞ்சுகின்றோமோ அது நடந்து விடும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. சிங்களக் காடையர்களால் ஆவலோடு எதிர்பார்க்கப்படும் சம்பவங்கள் அரங்கேறலாம்.

ஹலாலை விட ஹபாயா என்ற விடயம் மிகவும் சுலபமாக இனமோதலாக மாறக் கூடிய நிலைதான் உள்ளது. ஏனெனில் வீதிகளில், பஸ் வண்டிகளில் ஹபாயாவை பிடித்து இழுக்கின்ற போது பாரிய விளைவுகள் ஏற்பட்டு விடும். இப்போது கொழும்பு வைத்தியசாலையில் டாக்டர் ஒருவரின் ஹபாயாவை நோயாளி ஒருவர் பிடித்து இழுத்த சம்பவம், கண்டியில் 3 பெண்களை பிடித்து இழுத்த சம்பவம், மன்னம்பிட்டியில் ஓட்டமாவடி தபால் ஊழியர் ஒருவரின் ஹபாயாவை வீதியில் வைத்து இழுத்த சம்பவம் என்று ஒரு இன அடக்கு முறைக்கு முஸ்லிம்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

பொதுப்பல சேனாவின் இந்த நையாண்டிச் சேஷ்ட்டைகள் முடிந்துவிடக் கூடியதல்ல தொடர் கதையாக ஒவ்வொரு விடயமாக தொடரத்தான் போகின்றது. பொதுபல சேனா என்ற அரசின் ஆயுதமற்ற படைக்கு பின்னால் நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பு படையும் அரசாங்கமும் உள்ளது. இதைத் தெளிவாக மங்கள சமரவீர எம்பி தெரிவித்திருந்தார்.



ஹபாயாவை விடமாட்டோம் என்று சில சில்லறை முஸ்லிம்கள் வாய்ச்சவால் சொல்வது போன்றல்ல. நாம் தனித்து நின்று எதையும் சாதிக்க மாட்டோம். தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டால் மட்டும்தான் அந்தப் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்த முடியும் என்று நாங்கள் ஏற்கனவே எழுதிவிட்டோம். சர்வதேசத்தில் பலம் பெற்றுள்ள தமிழ் சமூகத்துடன் இணைந்து எமது உரிமைகளை வென்றெடுக்க முடியுமே தவிர சிங்கள இனவாதிகளிடம் பயந்து அஞ்சி, நடுங்கி முஸ்லிம் இனம் கேவலமாக முடியாது.

யார் தடுத்தாலும், தடுக்கா விட்டாலும் நியூட்டனின் விதி போன்று சில நடக்கக் கூடாத சம்பவங்கள் நடக்கும் வாய்ப்புத்தான் அதிகமாகவுள்ளது. ஹலாலுக்குப் பிந்திய முஸ்லிம்களின் பின்னடைவு என்பது மிகவும் மோசமானது.

ஜெனீவாவில் அரசு வெற்றி என்பதுக்கு அப்பால் தமிழரின் தற்போதைய முன்னெடுப்புக்களும், இலங்கையின் போர்க் குற்றமும் தோல்வி கண்டு இலங்கை வெற்றியடையுமானால் முஸ்லிம்களின் நிலமை இன்னும் மோசமடையும்.

எனவே, அடுத்த ஆண்டு ஜெனீவாவை நோக்கி நாட்டின் சகல முஸ்லிம்களும் மறைமுகமாவது தங்களது முழுப் பங்களிப்பை செய்வதற்கு முன் வரவேண்டும். இதற்காக முஸ்லிம் அமைப்பு ஒன்று இலங்கையில் அல்லது வெளிநாட்டில் இயங்கி இணையதளங்கள், ஈமெயில், பேஸ்புக் மூலமாக இலங்கையின் மனித உரிமை மீறல்களை உரிய இடங்களில் தெரியப்படுத்த வேண்டும். ஜெனீவா தீர்மானம் என்ற வெற்றி தமிழர்களுக்கான வெற்றி என்பதற்கு அப்பால் இந்த நாட்டு முஸ்லிம்களின் இருப்பிடம், மத உரிமை, மத அந்தஸ்து எல்லாமே புதைந்து காணப்படுகின்றது.

வடகிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற முஸ்லிம்கள் தமிழ் மக்களை தீண்டத் தகாதவர்கள் என்று நோக்காமல் நேசக்கரம் நீட்டி ஒன்றுபடுவோம். சிலரின் போக்கிரித்தனமான வாய்ச் சவால்களையும், அரசியல் பிழைப்புக்களையும் புறந்தள்ளி விட்டு;, தமிழ் தேசியத்துடன் முஸ்லிம் தேசியம் என்றுமே சேர முடியாது என்ற பம்மாத்துக்களை ஓரங்கட்டி, சர்வதேசத்தில் பலம் பெற்றுள்ள தமிழ் மக்களுடன் ஒன்று சேர்ந்து எமது உரிமைகளை வென்றெடுக்க வேண்டும்.

இந்த திக்கில்தான் கடந்த 8 மாதங்களாக நாங்கள் எழுதி வருகின்றோம். மீண்டும் உறுதியாகப் பதிவு செய்கின்றோம். முஸ்லிம்களின் பிரச்சினைகள் சர்வதேச மயப்படுத்த வேண்டுமானால் சர்வதேசத்தில் பலம் பெற்றுள்ள தமிழ் மக்களுடன் இணைந்து செல்வதில்தான் முழுமையான வெற்றியுள்ளது. குண்டாஞ் சட்டிக்குள் குதிரையோட்டி அரசியல் வியாபாரப் பிழைப்பு நடாத்தும் முஸ்லிம் அரசியல்வாதிகளால் எதுவுமே நடக்காது என்பதை எதிர்வு கூறலாகச் சொல்கின்றோம். மற்றும் தற்போதைய காங்கிரஸ் ஆட்சியில் ஈழத் தமிழர்களுக்கு எந்தவொரு விமோசனமும் கிடைக்க மாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் பதிவு செய்கின்றோம்.

***

# ஆன்மீக பார்வையில் தமிழல் போராட்டம்

**சித்தன்**

இந்தத் தலைப்பு ஆச்சரியத்தை ஏற்படுத்தக்கூடும். ஆழமான ஆன்மிகத்தை உணர்ந்தவர்களுக்கு இது புதிய விடயமல்ல. ஒவ்வொரு உயிரின் படைப்பிற்கும் ஒரு காரணம் உண்டு. இது இந்து மதத்தின் ஆழமான நம்பிக்கையாகும். ஒவ்வொரு சிறு அசைவும் இறைவனின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ற வகையில் அல்லது எதிரான வகையில் இடம்பெறுகின்றது. அவனின்றி எதுவுமில்லை - இது ஆன்றோர் கருத்து.

இவ்விடத்தில், இன்னுமொரு கருத்தைப் பார்த்தல் அவசியம் என்று நினைக்கின்றேன். ஒரு மனிதன் அல்லது ஒரு இனம் செய்யும் பிழைகளுக்குத் தண்டனையைத் தரும் தெய்வமாக, பாதிக்கப்பட்டவனின் தெய்வ வடிவம் அல்லது தெய்வம் இருப்பதில்லை. பாதிப்பை ஏற்படுத்தும் மனிதனின் தெய்வம் அல்லது தெய்வ வடிவம் தான், பாதிப்பை ஏற்படுத்தியவனுக்குத் தண்டனை வழங்குகின்றது. இக்கருத்தை மிகவும் தெளிவாக நாம் மனதில் இருத்திக் கொண்டால், வாழ்க்கையின் பல யதார்த்தங்களை முற்கூட்டி உணர்ந்தவர்களாக, நாம் வாழ முடியும். ஆன்மீகவழி அனைத்துப் பிரச்சினைகளின் ஆரம்பத்தின் தன்மை, எதிர்கால முடிவை, எமக்குச் சுட்டிக் காட்டி, பிரச்சினையின் சுழலிருந்தும், எம்மைக் காப்பாற்றும்.

சுமார் ஏழரை இலட்சம் வருடங்களுக்கு முன்னதாக இந்து மக்களின் முழு முதல்க் கடவுளான சிவபெருமானின் திருமண நிகழ்வின் போது பூமி பாரம் தாளாது, ஒரு பக்கமாக சாய்ந்து கொண்டது. பூமியானது தனது சுழல் அச்சிலிருந்து விடுபட்டுச் செல்லும் நிலை ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்வதற்காக, முனிவர்களின் மா முனியான வஷிஸ்டரை சிவபெருமான் அழைத்து, பொதிகை மலை (தமிழ் நாடு) செல்லுமாறு பணித்தார். பணியின் தன்மை உணர்ந்த வஷிஸ்டர், "எம்பெருமானே, நான் தனியாகச் சென்று இதனைச் செய்ய முடியுமா?" எனத் தயக்கத்துடன் கேட்டார். இதற்குப் பதிலளித்த சிவபெருமான், "இதை உனக்குத் தருகிறேன். பூமியின் பாரத்தை சரி செய்ய, இது உதவும்." என்று தமிழ் மொழியை கையில் கொடுக்க தமிழ் மொழி பூமியை வந்தடைந்தது. (சித்தர்களின் இரகசிய குறிப்பு).

உலகத்தின் மூலக் கடவுளான சிவனிடமிருந்து வந்தமையால், இம்மொழி தெய்வீகமானது. இதனால் தான், "கல் தோன்றா, மண் தோன்றா, காலத்து மூத்த தமிழ்" என, தமிழ் மொழி அழைக்கப்படுகின்றது. இம்மொழி உருவான காலப் பகுதியை, இன்று வரை யாராலும் கூற முடியாது. ஆதியும் அந்தமும் இல்லாதது. ஆரம்பமும் முடிவும் இல்லாதது. அழிவில்லாதது. அழிக்க முடியாதது. இது தான் தமிழ் மொழியின் உறுதியான ஆரம்பமாகும்.

ஒரு மனிதனின் பரிணாம வளர்ச்சியானது, ஒவ்வொரு 20,000 வருடங்களுக்கு, ஒரு முறை நடைபெறுகின்றது. அவ்வாறாயின் தமிழனுடைய பரிணாம வளர்ச்சியானது, 38 தடவைகள் நடைபெற்றுள்ளன. இதன் கருத்து என்னவென்றால், உலகின் மூத்த இனமும், இன்று வாழ்ந்து கொண்டு இருக்கும் இனங்களில் தமிழ் இனம் முக்கியமானது.

உலகத்தில் செம்மொழி அந்தஸ்து பெற்ற மொழியாக, தமிழ் திகழ்கின்றது. இது பல மொழிகளின் தாய் மொழியாகும். கர்நாடகம், தெலுங்கு, மலையாளம் என பல மொழிகளுக்கு நேரடித் தாய் மொழியாகவும், சிங்களத்தின் எழுத்துக் கட்டமைப்பிற்கு, நேரடித் தாயாகவும் உள்ளது. மூலத்தெய்வத்தினால் தரப்பட்ட தமிழ் மொழியைப் பேசும், தமிழர்களும் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அப்படியாயின், "ஏன் தமிழர்களுக்கு இவ்வளவு கொடுமைகள் நடைபெற்றன?" என்ற கேள்வி எழுகின்றதல்லவா? இதற்கான பதிலை ஓரிரு வார்த்தைகளில்க் கூறி விட முடியாது. ஏனெனில், கடவுள் பற்றிய நம்பிக்கை இல்லாதவர்களையும் நான் கூறும் ஆன்மிகப் பார்வையின் ஊடான விளக்கம், தன்னுள் ஏற்றுக் கொள்ளும் என நம்புகின்றேன்.

ஒரு இறை தண்டனையாகவே, தமிழ் மக்களின் மீது, இந்த சோகம் திணிக்கப்பட்டது. எப்பொழுதும் குழப்படி செய்யும் பிள்ளையை விட, குழப்படி செய்யாத பிள்ளை பிழை விடும் போது, அதிக கோபத்துடன் கூடிய கவலையை ஆசிரியர் அல்லது பெற்றோர் அடைகின்றனர். அது போன்ற இறைவனின் விருப்பத்திற்குரிய தமிழர்கள், தம்மை மறந்து கோழைகள் போல் வாழ்ந்தமை, சுயநலமாக இருந்தமை, இதற்குக் காரணமாகும். மற்ற உயிர்களை அரவணைத்துச் சென்று, கருணை காட்டாமல், பிறர் படும் துன்பங்களை வரவேற்று இரசித்து, கடவுளை அவமதித்தமையால், இந்த அவலங்களுக்கு உட்பட்டார்கள். எவ்வாறு, யூத மக்கள் தமது ஆண்டவரால் சபிக்கப்பட்டு 2000 வருடங்களாக நாடற்று அலைந்து திரிந்து வாழ்ந்தார்களோ? அதேபோன்று, தமிழர்கள் "மனச்சாட்சி" என்ற இறைவனைத் தூரத்தி விட்டு 'சைத்தான்' என்ற கெடுமதியை மனதில் இருத்தியதன் விளைவாகும். இப்படியாக ஏராளமான கருத்துக்களை கூறலாம். இனி விடயத்திற்கு வருவோம்.

இலங்கையின் சுதந்திரத்தின் போது தமிழர் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள், சிங்களத் தலைவர்களுடனான தனிப்பட்ட நட்பிற்காக, ஒன்றுபட்ட இலங்கையினுள் வாழ்வதாக ஆங்கிலேயர்களிடம் கூறியபோது தமிழர்கள் ஏதும் பேசவில்லை. சுயநலத்தில் வாழும் சாதி வெறி பிடித்து, நெறி பிறழ்ந்த தமிழனுக்கு, எதிர்கால ஆபத்து என்பது புரியவில்லை. அதனால், இன்று இறை சாபத்திற்கு உட்பட நேர்ந்தது. இலங்கை அரசியலில் முதலாவது பாரிய தமிழின ஆக்கிரமிப்பை, சிங்களக் குடியேற்றங்களை ஆரம்பித்து வைத்த டி.எஸ்.சேனநாயக்காவை தோற்கடித்தார் பண்டாரநாயக்கா. இது இறை தண்டனை. சிங்களம் மாத்திரம் தனிச் சட்டமாக கொண்டு வந்தார். அப்பாவித் தமிழர்களின் முதுகில் சிறீலங்கா என்ற சொல்லின் முதல் சிங்கள எழுத்தான சிறீயை ஆணியால் எழுதினார்கள். இனவாதத்தின் தந்தையைப் புதிய இனவாதம் ஒழிக்க, புதிய இனவாதத்தைப் புத்தரின் தூதனாக வந்த புத்த துறவி, துப்பாக்கி மூலமாக முடித்து வைத்தார். இது இறை தண்டனை. அடுத்த தமிழர் ஒடுக்குமுறையானது. சிறிமாவோ பண்டாரநாயக்கா மூலமாக ஏற்பட்டது. தமிழனின் மூளையை முடக்கி விட கல்வித் தரப்படுத்தல் சட்டம் உருவானது. இதனை உருவாக்கியதன் விளைவு, 1977 இல் இன்னுமொரு பேரினவாத தலைவனின் வருகை மூலமாக இதே சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இது இறை தண்டனை. உப்புத் திண்டவன் தண்ணீர் குடித்தேயாக வேண்டும்.



தன்னிகரில்லாத அதிகார சக்திகளை உருவாக்கிக் கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தனா, தமிழர்கள் கொடுமை தாங்காது வெளிநாடுகளுக்கு ஓடிய போது கொக்கரித்தார். ஆனால், அதே தமிழர்கள் இங்கு போராட்டத்தை வளர்த்து, இன்றுவரை இலங்கைக்குத் தலைவலியாக உள்ளார்கள். இது இறை தண்டனை. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும். தமிழரின் போராட்டத்தை அழிக்க இந்தியாவைப் பயன்படுத்த முனைந்து மூக்குடைபட்டதுடன், அதில் ஈடுபட்ட இராஜீவ்வின் சாவுக்கும் வழிவகுத்தார் ஜே.ஆர். இது இறை தண்டனை தான். தமிழருக்கு எதிராகப் பாவித்த ஆதிக்கச் சட்டங்கள், தனது சொந்த இனமான சிங்களத்திற்கு எதிராகப் பாவிக்கப்பட்டதை ஜே.வி.பி பிரச்சினையின் போது தனது வாழ்நாளில் பார்க்க நேரிட்டது. இது இறை தண்டனை. எந்தச் சட்டங்களுக்கு பூரண ஆதரவு வழங்கி தமிழர்களை அழிப்பதை வேடிக்கை பார்த்தாரோ? அதே சட்டங்களால் இப்போது நசுக்கப்பட்டுள்ளார். ரணில் விக்கிரமசிங்க. பிறர் வீடு பற்றியெரிய வேடிக்கை பார்த்தவன் தனது வீடு பற்றியெரியும் போது அழுதபடி வேடிக்கை பார்ப்பான். மலை நாட்டு தமிழனின் குடியுரிமை பறிக்கப்பட்ட போது ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்த் தலைமைகளை தமிழர்கள் தட்டிக் கேட்காததன் விளைவு, சாபமாக தமிழர்கள் மீது இன்று வந்தது. இது இறை தண்டனை.

தமிழர் போராட்டத்தை சாட்சிகளற்ற நிலையில் நசுக்கி விட்டதாக நினைத்துக் கொண்டிருந்தார்ளோ? அவர்களுக்குத் தமது தரப்பினரால் எடுக்கப்பட்ட போட்டோ ஆதாரங்கள் மூலமாக, இறைவன் ஆப்பு வைத்ததை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது தான் ஜெனீவாத் தீர்மானம். தர்மத்தின் வாழ்வு தனை சூது கவ்வும் மறுபடியும் தர்மம் வெல்லும்.

இஸ்ரேலியர்கள் ஏனைய மக்களை அடிமைப்படுத்தி, கொடுமைப்படுத்திய காரணத்தால், தமது இறைவனின் சாபத்திற்கு உட்பட்டு, பிற இனங்களால் அடக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்டார்கள். நாடிழந்து உலகம் பூராகவும் ஓடித் திரிந்தார்கள். இது இறை தண்டனை. 2000 வருடங்கள் நாடோடிகளாக அலைந்து 60 இலட்சம் யூத மக்கள் நாஜிகளால் தான் நாடு ஒன்றினை அமைத்துக் கொண்டார்கள். கொல்லப்பட்ட பின்னர் சேர்பியர்கள் தமது அக்கிரமான இன அழிப்பு வேலைகளை சுதந்திரமாகச் செய்த போது புகைப்பட ஆதாரங்கள் மூலமாக உலகம் அனைத்தையும் கண்டது. கற்பனை செய்ய முடியாத வகையில் சேர்பியாவிலிருந்து பொஸ்னியா பிரிக்கப்பட்டு தனி நாடு உருவானது. இறந்துபோன ஆன்மாக்களின் ஆக்ரோசத்தின் முன்னால் எதுவும் நிற்க முடியாது இது இறை சித்து

இவ்வாறான நிலையைத் தற்போது தமிழர்கள் எதிர் கொள்கின்றார்கள். மனசாட்சியைக் கொன்ற மனிதன் சைத்தானின் வடிவம். ஆகையால், தமிழர்களின் எதிர்காலம் எவ்வாறு அமையும்? என்று கவலைப்படும் மனிதர்களுக்கு, இந்தக் கவலை தேவையில்லை. ஏனெனில் தமிழர்களின் பிரச்சினையானது, தற்போது இறைவனின் கைக்கு சென்று விட்டது. இறை தீர்ப்பிற்கான காலமிது. அமைதியாக நடப்பவைகளை பார்த்துக் கொண்டிருந்தால் போதும். தமிழரை கொடுமைப் படுத்தியவர்கள் மீது இறை சாபம் இறங்கும் காலமிது. மனித முயற்சிக்கு அப்பால் நடைபெறும் இறை செயற்பாடுகளை, சாதாரண மனிதர்களால் விளங்கிக் கொள்ள முடியாது. விடயங்களை விளங்கிக் கொள்ளக் கடினமாக இருக்கக் கூடும். சைத்தானின் ஆக்கிரமிப்பில் இருப்பவர்களுக்கு, அனைத்தும் தமக்கு சாதகமாக இருப்பது போன்று தோன்றும். தெய்வ சித்து புரியாது. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.

கருணாநிதி ஆட்சி கவிழ்ந்ததும், அதே கருணாநிதி மத்திய அரசிலிருந்து விலகியமையும், இனிவரும் காலங்களில் காங்கிரஸ் ஆட்சி கவிழப்போவதும், தமிழரின் மீது அவர்கள் நடாத்திய அரசியல் பகடையின் விளைவு. இது இறை தண்டனை. தெய்வத் தமிழையும், தமிழர்களையும் யாரும் அழித்ததாக வரலாறு இல்லை. நம்பிக்கையற்ற மாயத் தோற்றங்கள் ஏற்படக்கூடும். அவை உண்மை நிலையல்ல இறைவனின் திருவிளையாடல்களில் இவை அடக்கம். நடைபெற்றவை, நன்றாக நடந்தன: நடைபெறுவனவும் நன்றே நடைபெறுகின்றன. நடைபெறப்போவதும் நன்றே நடைபெறும்.

***

பொதுசன அபிப்பிராயம் ஊடக சுதந்திரம் பற்றி ஜனநாயக வாதிகள் பீற்றிக் கொள்கின்ற போதிலும் பொதுசன அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் விதைக்கும் ஊடகங்களையும் அவற்றிற்கு காரணமான ஊடகவியலாளர்களையும் அதிகாரபீடம் சட்டரீதியாக அணுகுவதேயில்லை. குறிப்பாக ஜனநாயக முகத்திரை போர்த்திருக்கும் சர்வதிகாரவாதிகளையும், அடக்கு முறையாளர்களையும் இனங்கண்டு அவர்களின் போலி முகத்திரைகளை கிழிக்கும் ஊடகவியலாளர்களையும், அரசாங்க ஆட்சி முறைகளை விமர்சனம் செய்து அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தும் மாற்றுக்கருத்தாளர்களையும் அதிகாரபீடம் ஒரு போதும் அனுமதிப்பதேயில்லை துப்பாக்கிகளையும், ஆயுதங்களையும் குண்டர் குழுக்களையும், சட்டவிரோத ஆயுதக் குழுக்களையும், இனந்தெரியாதவர்களையும் பயன்படுத்தி அவர்களின் உயிரை குடிப்பதையும், குருதியை உறிஞ்சுவதையும் அடக்குமுறையாளர்கள் தம் வழமையாக கொண்டிருக்கின்றனர். இதற்கு வரலாற்றில் பல சான்றாதாரங்கள் நிறைந்திருக்கின்றன. இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல வெளிப்படுத்தும் சம்பவங்கள் அண்மைக் காலமாக வெளிப்படுத்தி வருகின்றன. இலங்கையில் ஊடக சுதந்திரம் நூறுவீதம் உள்ளது என இலங்கை அரசு அடிக்கடி தம்பட்டம் அடித்து கொள்கின்ற போதிலும் நடப்பவை அனைத்தும் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற கதையாகவே இருக்கின்றது. இந்த சாசுவாத உண்மையை பட்ட வர்த்தனமாக, ஆணித்தரமாக நிரூபித்திருக்கிறது உதயன் பத்திரிகையின் கிளிநொச்சி அலுவலகம் மீதான காடைத்தனமான தாக்குதல்.


அன்று காலை 3.30 மணியளவில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பகுதிகளுக்கான 'உதயன்' மற்றும் 'சுடர்ஒளி' வாரஇதழ் கட்டுகளை சுமந்தவாறு பயணித்திருக்கிறது. உதயன் பத்திரிகை நிறுவனத்திற்கு சொந்தமான 'படி'ரக வாகனம். ஆனையிறவு சோதனை பதிவு அலுவலகத்தை தாண்டியவுடனேயே ஆபத்து இவ்வாகனத்தைப் பின் தொடரத் தொடங்கியதாகக் கூறப்படுகிறது. பதிவு அலுவலகத்திற்கு அருகில் தயாராக நின்ற 'டிஸ்கவர்' ரக மோட்டார் சைக்கிள் ஒன்று இவ்வாகனத்தை பின் தொடங்கியதாக சாரதி தெரிவித்திருக்கிறார். இதேவேளை வழமையாக வன்னிப் பகுதிகளுக்கான பத்திரிகை விநியோக நடவடிக்கைகள் மோட்டார் சைக்கிள்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் கடந்த சில நாட்களாக நிலவிய அச்சுறுத்தலான சூழ்நிலை அன்றைய நாள் 'படி'ரக வாகனம் மூலம் விநியோக நடவடிக்கைகள் இடம்பெற வேண்டிய நிலையை நிர்ப்பந்தித்திருந்தது.


இந்நிலையில் சுமார் ஒருமணிநேர பயணத்தின் பின்னர், அதிகாலை 4.30 மணியை அண்மித்த பொழுதில் கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் அமைந்திருந்த உதயன் கிளிநொச்சிக் கிளை அலுவலகத்தை அடைந்தது. வாகனம் அங்கு கிளிநொச்சி அலுவலகத்திற்கான பார்சல் பிரித்தெடுக்கப்பட்டு கிளிநொச்சியின் ஏனைய பகுதிகளுக்கும் உருத்திரபுரம், துணுக்காய் போன்ற பகுதிகளுக்கும் விநியோகத்தை மேற்கொள்ள தயார்படுத்தப்பட்டது. பத்திரிகை கட்டுகள் ஊழியர்களால் வாகனத்தில் ஏற்றப்பட்டு வாகனம் புறப்படத் தயார் நிலைக்கு கொண்டு வரப்பட்டது. வாகனத்தில் ஏற்றி இறக்கும் பணிகள் பூர்த்தியானவுடன் கிளை அலுவலகத்திற்கான கதவும் ஊழியர்களால் சாத்தப்பட்டு அலுவலகத்திற்குள் அன்றைய வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. குறித்த அலுவலகத்திற்கு வெளியில் நின்ற வாகனத்தில் அதன் சாரதி ஏறி அமர்ந்த பின் மற்றைய விநியோக பணியாளரும் ஏறத் தயாரான போதே காடையர் கூட்டம் விநியோக ஊழியர்கள் மீது வெறியுடன் பாய்ந்தது. சற்றும் எதிர்பார்க்காத நிலையில் அலுவலகத்திற்கு அண்மையில் இருந்த பற்றைக்குள்ளும் அருகில் இருந்த பாழடைந்த கட்டிடங்களுக்குள்ளும் இருந்து பாய்ந்தது அக்கும்பல். அங்கிருந்த ஊழியர்கள் சிலரின் தகவலின் படி ஒருவர் முகத்தை கட்டியிருந்ததாகவும் ஏனையவர்கள் உரு மறைப்பு செய்யாதவர்களாகவும், கையில் விக்கெட்டுகள் பொல்லுகளை தாங்கியிருந்த நிலையில் காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வெளிவந்தவர்கள் சிங்களத்தில் தூசண வார்த்தைகளை கூறித் திட்டித் தீர்த்தபடி முதலில் வெளியான பகுதிக்குள் தாக்குதலை தொடங்கினர். அலுவலகத்திற்கு வெளியில் நின்ற படிரக வாகனத்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கிய பின் வாகனத்தின் அமர்ந்திருந்த ஊழியர்களை தாக்கத் தொடங்கினர். தாக்குதலில் இருந்து தம்மை சுதாகரித்து கொண்ட சாரதியும் விநியோக ஊழியரும் வாகனத்தை கைவிட்டு தாக்குதலில் இருந்து தப்பிக்க ஏ9 பிரதான வீதியில் யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் வீதியால் ஓடத் தொடங்கினர். அவர்கள் வேகமாக ஓடவே, அவர்களைத் துரத்துவதை கைவிட்ட காடையர் கும்பல் சாத்தப்பட்டிருந்த உதயன் கிளிநொச்சி பகுதிக்கான கிளை காரியாலய கதவை அடித்தும் உதைத்தும் திறந்தனர்.

# தொடர்ந்து தாக்கப்படும் ஊடக சுதந்திரம்!







அலுவலகத்திற்குள் பணியில் இருந்த காரியாலய ஊழியரான பிரதீபன் மீது சரமாரியாக தாக்கத் தொடங்கினர். கிறிக்கெட் விளையாடுவதற்கு பயன்படுத்தப்படும் விக்கெட் கட்டைகள், கம்பிகள் கொண்டு அவர் மீது பலமான தாக்குதல் நடாத்தப்பட்டது. தாக்குதலை அடுத்து தன்னை சுதாகரித்து கொண்ட பிரதீபன் அலுவலகத்தின் பின் பக்கமாக ஓடி தாக்குதலில் இருந்து தன் உயிரைப் பாதுகாத்து கொண்டார். இந்நிலையில் பிரதீபனை கைவிட்ட காடையர் கூட்டம் ஏனைய பணியாளர்கள் மீது தமது பார்வையைத் திருப்பியது.

கடமையை முடித்து, களைப்பின் மிகுதியில் அலுவலக பகுதியில் உறக்கத்தில் இருந்தார். அலுவலக நிலைய முகாமையாளர் பொன்ராசா என்ற வயோதிப ஊழியர். அவரை நெருங்கிய தாக்குதலாளிகள் கேட்டுக் கேள்வியின்றி அவர் மீது தமது கொலைவெறி தாக்குதலை நடாத்தினர். வயோதிபர் என கூட பாராது தமக்குள் புதைந்திருந்த அரக்கத்தனத்தை, காடைத்தனத்தை வெளிக்காட்டியது அக்கும்பல். அவர் மீதான தாக்குதலை அடுத்து அலுவலகத்தில் இருந்த கணணிகள், போட்டோ பிரதி செய்யும் இயந்திரங்கள், தொழில்நுட்ப சாதனங்கள், தொலைதொடர்பு சாதனங்கள், அலுவலகத்திற்கு வெளியில் நின்ற வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை அடித்து நொருக்கினர். பின் சில நிமிடநேர அடாவடித்தன தாக்குதலின் பின் கொலைவெறி சற்று அடங்கிய பின் அலுவலக பகுதிகளுக்குள் இருந்து பின்வாங்கித் தப்பிச் சென்றது அக்கும்பல். தப்பிச் செல்லும் போது அலுவலகத்திற்கான தொலைபேசி தொடர்புக்கான வயரையும் துண்டித்து விட்டே தப்பிச் சென்றதாக கூறப்படுகிறது. யாழ். அலுவலகத்தில் தகவல் கிடைத்ததும் யாழ். அலுவலகத்திலிருந்து விரைந்த ஏனைய பணியாளர்கள் காயமடைந்திருந்த நிலையில் இருந்து நான்கு பணியாளர்களையும் மீட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இதேவேளை, இத்தாக்குதல் இடம் பெறுவதற்கு சில நாட்களுக்கு முன் கிளிநொச்சியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்திற்குள் புகுந்து காடைத்தனமான தாக்குதல் நடாத்தப்பட்டிருந்தது. இத்தாக்குதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மயிரிழையில் தப்பியிருந்தனர். இந்நிலையில் தாக்குதலில் ஈடுபட்டார் என கூறி ஒருவரைப் பிடித்து பொது மக்கள் பொலிசாரிடம் ஒப்படைத்த போது அவர் தம்முடன் வந்த பொலிஸ் புலனாய்வாளர் எனகூறி பொலிசார் அவரை விடுவித்திருந்தனர். இந்நிலையில் துப்பாக்கிகளை தாங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் பொலிஸ் அதிகாரிகள் நிற்கும் போதே தாக்குதலாளிகளை பிடிக்க வக்கற்று 'பேய்க்கு பேன் பார்த்துக் கொண்டிருந்த' பொலிஸ் தரப்பு கிளிநொச்சியில் உள்ள உதயன் அலுவலகம் மீதான தாக்குதலாளிகளை எவ்வாறு கைது செய்யப் போகின்றது என்ற சந்தேகம் இன்று எழுகின்றது.

இதேவேளை தாக்குதல் இடம் பெற்ற சூழலும் முக்கியத்துவப்படுத்த வேண்டிய விடயமாக மாறியிருக்கின்றது. அதாவது வட மாகாண சபைத் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெற உள்ளதாக அரச அதிகார பீடம் அறிவித்த கையோடே உதயன் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தியிருகின்றது. அத்துடன் ஜெனீவா மாநாட்டில் ஊடக சுதந்திரம் நிலை நாட்டப்படும் சட்ட விரோத ஆயுதக் குழுக்கள் இனங் காணப்பட்டு அழிக்கப்படும் என்ற உத்தரவாதங்கள் வழங்கப்பட்டு சில வாரம் கழிவதற்கு இடையில் கிளிநொச்சியில் ஊடக நிறுவனம் மீது காடைத்தனமாம் கட்டவிழ்ந்து விடப்பட்டிருக்கின்றது. இலங்கையில் ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாக உள்ளது என இலங்கையின் நீதியமைச்சரே கூறும் அளவிற்கு ஊடகங்கள் மீதான வரையறையற்ற வன்முறைகள் ஏவிவிடப்படுகின்றன.

எனவே, தன்னை ஜனநாயக விற்பன்னர்கள் என படம் காட்டிக் கொண்டிருக்கும் ஆளும் தரப்பினர் இதற்கு என்ன சொல்லப்போகின்றனர்? விசாரணைக்குழுக்க்ள் அமைப்பு, தாக்குதலாளிகள் இனங்காணப்படுகின்றனர், புலன் விசாரணைகள் நடாத்தப்படுகின்றன, எனக் கூறி வழமையாக நடாத்தப்படும் 'இருட்டுக்குள் கறுப்பு புனையை தேடும்' படலமா இச்சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட இருக்கிறது?

# அழகிரியை பிரித்தெடுக்க காங்கிரசும் அ.தி.முகவும் முயற்சி?







**– அபிஜித் –**

மத்தியிலுள்ள காங்கிஸ் அரசிலிருந்து தி.மு.க வெளியேறினாலும் ஒரே ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக விளங்கிய அழகிரி தயங்கித் தயங்கிச் சென்றே பிரதமரிடம் தனியாக தாமதமாக ராஜினாமாவை கையளித்துள்ளார். அதன் பின் நடந்த தி.மு.க உயர் மட்டக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவில்லை. முதல் நாள் இரவு வரை சென்னையில் இருந்து விட்டு கூட்டம் நடைபெறும் அன்று காலை ஜகா வாங்கிக் கொண்டு மதுரைக்கு, அதுவும் காரில் புறப்பட்டுச் சென்று விட்டார். காங்கிரசிடமிருந்து பிரிந்ததை ஸ்டாலின் ஆதாரவாளர்கள் பட்டாசு வெடித்துக் கொண்டாடிய போதும் அவ்வாறு அமர்க்களம் எதுவுமின்றி அழகிரி ஆதரவாளர்கள் அடக்கியே வாசித்துள்ளனர். ஏற்கனவே கடந்த ஆண்டு சட்ட சபைத் தேர்தல் சமயத்தில் காங்கிரசுடன் உறவு முறிந்தது என கலைஞர் அறிவித்த பிறகும் கூட அழகிரி தரப்பு சோனியாவை சமாதானம் செய்து காங்கிரஸ் கேட்ட 63 தொகுதிகளையும் தந்து சமரசம் செய்திருந்தது நினைவிருக்கலாம். ராசா, பாலு போன்ற தி.மு.க அமைச்சர்கள் ஊழல் குற்றச்சாட்டில் பதவி விலகிய பிறகும் கூட அழகிரி மட்டும் தனியொரு தி.மு.க மத்திய அமைச்சராக வலம் வந்திருந்தார். இப்போது தான் அவரது உளத்துறை பற்றி சிறுசிறு ஊழல் புகார்கள் வரத் தொடங்கியுள்ளன. மற்ற தி.மு.க அமைச்சர்கள் மீது பலகாலம் முன்பே ஊழல் புகார் வந்து சிறையும் சென்றமை குறிப்பிடத் தக்கது.

இது தவிர தென் மாவட்டங்களை மையமாக வைத்தே அழகிரியின் அரசியல் கட்டப்பட்டது. தென் மாவட்டங்களில் தான் காங்கிரசின் செல்வாக்கும் அதிகம். இதனால் அழகிரிக்கும் காங்கிரசுக்கும் இடையில் ஒரு விசேட பிணைப்பு இருப்பதில் ஆச்சரியமில்லை. ஒரு வேளை தி.மு.க இரண்டாக உடைந்ததால் அதில் ஸ்டாலின் அணிதான் பலமான அணியாகும். அழகிரி தரப்பு வெகுவாகப் போராடித்தான் தன்னை நிலைநாட்ட வேண்டியிருக்கும். எம்.ஜி.ஆர் இறப்பின் போது அ.தி.மு.க இரண்டாக உடைந்ததும் அதில் ஜெயலலிதா தரப்பின் கை ஓங்கியும், ஜானகி தரப்பு பலம் குன்றியும் இருந்தது. ஜானகி தரப்புக்கு சிவாஜி கணேசனின் சிறு ஆதரவு மட்டுமே கிடைத்தது. இதனால் ஜானகி தரப்பு முகவரியே இல்லாது அழிந்து போயிற்று அவ்வாறு அழகிரி தரப்பு சமீபத்தில் மற்றொரு பின்னடையும் கண்டது. ஸ்டாலினுடன் முறுகுப்பட்ட சேலம் மாவட்ட தி.மு.க புள்ளியான வீரபாண்டி ஆறுமுகம் ஊழல் புகாரில் சிறை சென்று பிணையில் வெளிவந்தபோதும் மாரடைப்பில் சென்ற ஆண்டு காலமானது அழகிரிக்கு முக்கிய இழப்பாக முடிந்தது. வீரபாண்டி ஆறுமுகத்தை சிறையில் சென்று சந்தித்து அனுதாபம் காட்டிய அழகிரியின் நடவடிக்கை தந்தை தம்பி ஸ்டாலின் இருதரப்பிலும் சந்தேகத்துடன் நோக்கப்பட்டது. ஸ்டாலினுடன் முறுகல் நிலையிலுள்ள எவரையாவது வலிந்து தன் பக்கம் இழுக்க அழகிரி முயன்றமை இவற்றிலிருந்து தெளிவானது.

இவ்வாறு அழகிரியும் ஸ்டாலினும் திரை மறைவில் ஆதரவை திரட்டி வந்த நிலையில் இன்று காங்கிரசுடன் உறவு முறிந்து அதன் தொடர்ச்சியாக அழகிரி-ஸ்டாலின் முறிவும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அச்சமயத்தில் நிச்சயமாக அழகிரிக்கு வெளிச் சக்திகளின் உதவி தேவைப்படும். 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்ற கதையாக ஜெயலலிதாவும் காங்கிரசும் அழகிரியை கைதூக்கிவிடத் தயாராகி வருவதையே சமீப நிகழ்வுகள் காட்டுகின்றன. மத்திய அரசிலிருந்து தி.மு.க விலகிய பின் தி.மு.கவின் 4 பிரதி அமைச்சர்களுக்குமான அமைச்சர் பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்ட போதும் மாநில அரசால் அழகிரிக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மட்டும் இதுவரை விலக்கிக் கொள்ளப் படவில்லை. அது போல காங்கிரசாரும் அழகிரியை அரவணைக்கும் விதமாகவே நடந்து வருகின்றனர். அவரும் பதிலுக்கு "இந்தப் பதவிக் காலத்தில் பல காங்கிரஸ் தலைவர்களுடன் பழகி நட்பு பூண்டுள்ளேன்" அது தொடரும் எனக் கூறியுள்ளார்.

எம்ஜிஆர் காலத்தில் 1973ல் தி.மு.கவில் பாரிய பிளவு ஏற்பட்டதன் பின்பு 1993ல் வைகோ விலகிய பின்பும் இது வரை தி.மு.க்வால் பாரிய பிளவேதும் ஏற்படவில்லை. வைகோவுடன் பிரிந்து சென்ற பெரும்பாலானோர் மீண்டும் தி.மு.கவுக்கே திரும்பிய வரலாறும் உள்ளது. இல. கணேசன், செஞ்சி இராமச்சந்திரன், பொன். முத்துராமலிங்கம், கண்ணப்பன் என வைகோவுடன் விலகிச் சென்ற பலர் இவ்வாறு மீண்டும் தாய்க் கழகமான தி.மு.கவுடன் இணைந்து விட்டனர். தி.மு.கவில் ஏற்பட்ட தீட்சண்யமான பிளவு எம்.ஜி.ஆர் உண்டாக்கிய பிளவே என்றாலும் கருணாநிதி குடும்பச் சண்டையினால் ஏற்படும் பிளவு என்பதால் இந்த அழகிரி-ஸ்டாலின பிளவு எம்.ஜி.ஆரின் பிளவு போல் முக்கியத்துவம் வாய்ந்த பிளவாகவே கருதப்படலாம்.

தி.மு.க தனது காலை வாரிவிட்டது எனக் கோபத்தில் கறுவிக் கொண்டிருக்கும் காங்கிரசும் வகையாகப் பழிதீர்க்க அழகிரியை அரவணைக்க தயாராகவே உள்ளது. தென்மாநிலங்களில் ஏற்கனவே சிறிது செல்வாக்குள்ள காங்கிரசுக்கு அழகிரியின் அடி தடி ஆள்பலம் உதவலாம். சென்னையில் ஸ்டாலின் வீட்டில் சி.பி.ஐ சோதனை நடத்திய பிறகு ஈஞ்சம்பாக்கத்திலுள்ள அழகிரி வீட்டிலும் கூட சோதனை நடந்தது. ஆனால், அதன் பிறகு செய்தியாளரிடம் பேசிய அழகிரி எந்தப் பரபரப்பும் இல்லாமல் இது வழமையான சோதனை தான்; காங்கிரஸ் மீது கோபிக்க ஏதுமில்லை என்று 'கூலாகக்' கூறிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, அடுத்த ஆண்டு லோக்சபா தேர்தலில் காங்கிரஸ்-தே.மு.தி.க-அழகிரி அணி எனக் கூட்டணி அமைக்கவும் காங்கிரசிடம் திட்டம் உள்ளதாம்.

இதற்கிடையில் காங்கிரஸ் கட்சிகள் தொடர்ந்து ஜெயலலிதாவிடம் ஒட்டிக் கொண்டிருந்தால் தேவையானபோது காங்கிரசிடம் மீண்டும் உறவுகொண்டு 10க்கும் குறைவான இடங்களை வைத்ததுபோல் வடேரா விவகாரம் முற்றி வருகிறது. ஆனால் மத்தியில் நரேந்திர மோடியை பி.ஜே.பி நிறுத்தப் போகிறது என்ற விடயம் காங்கிரசுக்கு சற்றே நிம்மதியைத் தந்துள்ளது எனலாம். கடந்த வாரம் பி.ஜே.பியின் உயர்மட்ட முடிவு எடுக்கும் அமைப்பின் மத்திய நாடாளுமன்ற குழுவுக்கு புதிய உறுப்பினராக மோடி நியமிக்கப்பட்டது, எதிர்பார்த்தபடியே அவர் பிரதமர் வேட்பாளர் என்ற ஊகங்களை உறுதி செய்யும் விதமான இருந்தது.

சத்திஷ்கர், மத்திய பிரதேசம், கர்நாடக, குஜராத் ஆகிய நான்கே நான்கு மாநிலங்களில் தான் பி.ஜே.பி ஆட்சி உள்ளது. அதில் கர்நாடகம் தவிர்ந்த ஏனைய மூன்றின் முதல்வர்களும் தொடர்ந்து 2 தடவைக்கு மேல் வென்று சாதனையடைந்து நற்பெயருடன் உள்ளனர். இப்படியிருக்க மோடிக்கு மட்டும் பதவி உயர்வு வழங்கியது விசேட அம்சமாகும். ஆனால் மோடி பிரதமர் வேட்பாளரானால் முஸ்லிம் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் காங்கிரசுக்கு கிடைக்கும் என்பதால் பி.ஜே.பியினரைவிட காங்கிரசுக்கே இந்த நியமனத்தால் புளகாங்கிதம் ஏற்பட்டுள்ளது. "அப்பாடா! மோடி வந்ததால் அதாவது நமக்கு ஒரு சிறு உதவியாக அமையும்" எனக் காங்கிரசார் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். மோடியின் உயர்ச்சி பி.ஜே.பிக்குள்ளும் குஜராத்திலும் தான் என்ற யதார்த்தம் ஏற்கக் கூடியது தான்.

> **அழகிரியும் ஸ்டாலினும் திரை மறைவில் ஆதரவை திரட்டி வந்த நிலையில் இன்று காங்கிரசுடன் உறவு முறிந்து அதன் தொடர்ச்சியாக அழகிரி-ஸ்டாலின் முறிவும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அச்சமயத்தில் நிச்சயமாக அழகிரிக்கு வெளிச் சக்திகளின் உதவி தேவைப்படும். 'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்ற கதையாக ஜெயலலிதாவும் காங்கிரசும் அழகிரியை கைதூக்கிவிடத் தயாராகி வருவதையே சமீப நிகழ்வுகள் காட்டுகின்றன.**

கட்டட நிர்மாணத் தொழிலில் அரச நிலங்களை குறைந்த விலையில் சலுகையாக பெற்றது பற்றிய ஊழல் குற்றச்சாட்டு மீண்டும் மேலெழுந்து கடந்த வாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதுமட்டுமன்றி காணிகள் சம்பந்தப்பட்ட அரச திணைக்களத்தில் இந்த ஊழலை வெளிப்படுத்திய அதிகாரி அசோக் கெம்ப்கா என்பவருக்கு இடமாற்றம் தரப்பட்டது இந்தச் சர்ச்சையை மேலும் பூதாகரமாக்கிவிட்டது என்கின்றனர் நோக்கர்கள். பிரியங்கா காந்தியின் கணவரது வியாபார நடவடிக்கைகள் காங்கிரஸ் கட்சிக்கு பெரும் சுமையாகவும், குந்தகமாகவும் அமையும் என்பது ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது தான். ஏகப்பட்ட ஊழல் குற்றச் சாட்டுகளில் சிக்கி தேர்தல் நேரத்தில் காங்கிரஸ் தவியாய் தவிக்கும் நேரத்தில் சமயம் பார்த்து காலை வாரப் போகிறது இந்தப் புதிய ஊழல் என்கின்றன டெல்லி வட்டாரங்கள். போபஸ் ஊழல் ராஜிவை தூக்கியடித்தது போல மரண அடியை ரொபட் வடோரவின் ஊழல் தரக் கூடும். தோல்விப் பயம் ஒருபுறம், கூட்டணிக் கட்சிகள் ஒவ் வொன்றாக வெளியேறுவது என இடியாப்பச் சிக்கலாகி, கட்சித் தலைமை இப்போது திணறிக் கொண்டிருக்கிறது.




# அடுத்தவரின் துன்பத்தில் இன்பம் காண்பது...

**அ. கனிமொழி, மானிப்பாய்.**



**கே :** இயற்கை அழகுள்ள பெண்களை விடவும், செயற்கை அழகுள்ள பெண்களை ஆண்கள் இரசிப்பது ஏன் பித்தரே?

**ப :** எல்லா ஆண்களும் நீங்கள் கூறியது போல் இல்லை. பலர் இயற்கை அழகையே இரசிக்கின் றார்கள். கோவிலுக்குச் செல்லும் பெண்களின் அழகை இரசிக்கும் அளவுக்குத் திருமண வீடு களுக்குச் செல்லும் பெண்களை இரசிக்க முடிவ தில்லை. காரணம் காலையில் குளித்துவிட்டு எளிமையான ஆடைகளை அணிந்து 'மேக் அப்' இல்லாமலே அதிகமான பெண்கள் கோவிலுக்குச் செல்வது வழக்கம். சில திருமண வீடுகளில் மண மகளை விடவும் அங்கு வரும் பெண்கள் அதீத 'மேக் அப்' பில் வருவதைக் கண்டிருக்கின்றேன். சில சமயம் சகிக்க முடிவதில்லை. சில பெண்கள் தங்களைச் செயற்கையாக அழகுபடுத்த வேண்டும் என்பதற்காக இயற்கையாகவுள்ள புருவங்களைக் கூட வழித்து விடுகின்றனர். வீட்டில் 'மேக் அப்' இன்றி அவர்களின் முகத்தைப் பார்க்கும் போது, சில சமயம் பயமாகக்கூட இருக்கும்.

**இ. புஷ்பராஜா, கரவெட்டி.**

**கே :** பாரதியார் சொன்ன புதுமைப்பெண் தற்காலப் பெண்களுக்குப் பொருந்துமா பித்தரே..?



**ப :** அறிவு, ஆற்றல் இவற்றைப் பெண்கள் மென்மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். வாழ்வில் நல்ல பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இவை ஆணுக்கு நிகராக பெண்கள் உலகில் நிமிர்ந்து நிற்க வழி வகுக்கும், தோற்றத்தில் ஆண்களைப் போல இருக்க வேண்டும் என்று நினைப்பதும், ஆண்கள் தவறு செய்யும்போது பெண்களும் செய்தால் என்ன...? என்று பேசுவதும் தவறானது. இதன் மூலமாகப் பெண்கள் புதுமை செய்ய முடியாது. வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொண்டு, தொழில்களுக்கும் சென்று, பிள்ளை களையும், கணவனையும் கவனித்து நடக்கும் பணியாற்றும் பெண் ஆண்களைவிட மேலான வளே. இவர்களே புதுமைப் பெண்கள். இதை விடவும் மேலதிகமாக புதுமைப் பெண்களாக இருக்க வேண்டியதில்லை என்றே நான் நினைக்கின்றேன்.

**வி. மாலினி, வவுனியா.**



**கே :** வீதியில் செல்லும் யுவதிகளின் தங்கச் சங்கிலியை அபகரிப்பவர் பற்றிக் கூறும் பித்தரே..?

**ப :** வீதியில் செல்லும் யுவதிகளின் தங்கச் சங்கிலிகள் மட்டுமல்ல, யுவதிகளே கடத்தப்படும் காலம் இது. குற்றவாளிகள் தாங்களாகத் திருந்தினாலே தவிர வேறு யாராலும் அவர்களைத் திருத்த முடியாது. ஆனால், மற்றவர்கள்தான் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும். சில பெண்கள் நடமாடும் நகைக் கடையாகவே தோற்றம் தருகிறார்கள். கோயில் திருவிழாக்களில் நகைகளை அபகரிக்கும் திருடர் குழுக்கள் தங்களின் கைவரிசைகளைக் காட்டினாலும் கூட, நகைகளை அணியாமல் கோயிலுக்குச் செல்வதென்பது ஒரு கௌரவக் குறைவு போன்றே சில பெண்கள் கருதுகின்றார்கள். இவ்வாறான வர்களே திருடர்களை ஊக்குவிக்கிறார்கள் என்றும் சொல்லலாம்.


**எஸ். குமரன், மல்லாவி.**



**கே :** அடுத்தவரின் துன்பத்தில் இன்பம் காண்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் பித்தரே..?

**ப :** அரசியல்வாதிகள் தொடக்கம் சாதாரணமானவர்கள் வரை பெரும்பாலானவர்கள் மற்றவர்களின் துன்பத்தில் இன்பம் காண்பவர்களாகவும், அதில் இலாபம் அடைபவர்களாகவும் காணப் படுகின்றனர். உண்மை அன்பைக் கூட பலவீனமாகக் கருதி அன்பு வைத்த மனதிற்கு துன்பத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சியடைபவர்களும் இருக்கின்றனர். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்றெண்ணுபவர்கள் உலகில் மிகக் குறைவானவர்களே. மற்றவர்களின் இன்பத்தில் தாங்களும் இன்பமடைதல், தங்களின் மகிழ்ச்சியை மற்றவர்க்கும் பரவச் செய்தல் போன்றவை மிக உயர்ந்த பண்பாளர்களுக்கு மட்டுமே உரியதாகும்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 568



அனுப்புபவர் பெயர் :.......................................................

விலாசம்:.......................................................

.......................................................

கையொப்பம்:.......................................................

### மேலிருந்து கீழ்

1. அர்ப்பணிப்பு
2. தர்க்கம் செய்தல்
3. பொறு
4. திருமணம்
5. நாற்காலி
7. மறைவில் தீட்டுவது
12. கண்களுக்கு மேலால் இருக்கும் மயிர் வரை
13. இராசிகளில் ஒன்று
14. கயிறு தயாரிப்பதற்கு உதவும் பொருள்
15. பெரிய மனிதன்
16. இலகுவான

### இடமிருந்து வலம்

1. மாணிக்கவாசகரின் பக்திப்பாடல் தொகுப்பு
6. உடலை நடுங்க வைக்கும் பயம்
7. மறை சூழ்ச்சி
9. விவசாயிகள் மத்தியில் வழக்கிலுள்ள ஒரு அளவீட்டு முறை
10. ஆன்மிக பயணம்
11. கால வேளை
12. கால் நடைகள் இதனைத் தின்னும்
13. எல்லாச் சமயங்களும் இது அருந்துவதைத் தடை செய்கின்றன.
15. மலை
17. வதனம்
18. காவற்காரன்
20. ஒரு மொழி
21. காணாமல் போதல்

## சொற்சிலம்பம் போட்டி இல. 568

சொற்சிலம்பம் 568 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 2013 ஆம் ஆண்டு மே 01ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டை யில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப் பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 566 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. அகதி, 2. பிரதிநிதி, 3. மடி, 4. யுவதி, 5. சடங்கு, 6. தாம், 10. நம், 12. தரிசனம், 13. ஆசை, 14. திரவியம், 15. அத்தமி, 16. தோடு, 18. ரம், 19. பாரிய, 21. கத,

**இடமிருந்து வலம்**

1. அபிமன்யு, 5. சதா, 7. கரடி, 8. வருடம், 9. திதி, 10. நதி, 11. நிதம், 13. ஆகுதி, 15. அதிரி, 16. தோசை, 17. சரடு, 19. பாவி, 20. தகனம், 22. அரிய, 23. மிதம், 24. காரியம்,

## போட்டி இல. 565 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** முரளிதரன் கவிதரன்,
தம்பிராய்,
பூநகரி.

**2ஆம் பரிசு** ஜே. ரஜனி,
இல. 36/35, கண்டி வீதி,
சுமேதகம, திருகோணமலை.

**3ஆம் பரிசு** திஸ்ஸ அரசம்மா,
கானடி வீதி, கலுதாவளை,
கலுவாஞ்சிக்குடி.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) இ. யாழவன்,**
அரசடிக்குளம் ஆசிரியர் விடுதி,
செட்டிக்குளம், வவுனியா.

**(2) T.K. அனீம்,**
V.C, வீதி,
வாழைச்சேனை-05.

**(3) த. பிரியங்கா,**
இல. 63, கற்குளி,
வவுனியா.

**(4) ஜனகா நிக்கலாஸ்,**
இல-01, D-10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

**(5) திருமதி ஜெ. முகுந்தாதேவி,**
இல. 93-2/5, பீட்டர்சன் வீதி,
கொழும்பு-06.

**(6) திருமதி எஸ். சந்திரிகா,**
இல. 27, தாமரைக்கேணி வீதி,
மட்டக்களப்பு.

**(7) ச. சண்முகவடிவேல்,**
இல. 43/31, முதலாம் குறுக்கு,
திசவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு.

**(8) க. சூரியகுமாரன்,**
இல. 136, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

**(9) செ. சுவர்ணலதா,**
கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.

**(10) சி. உலகேஸ்வரி,**
இல. 68/17, ஜெம்பட்டா வீதி,
கொழும்பு-13.



# விளையாட்டு

## பலோடெலியின் புதுக் காதலி



இத்தாலி கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் மரியோ பலோடெலி, 22. கடந்த யூரோ கோப்பைத் தொடரில் அரையிறுதி வரை அணியைக் கொண்டு சென்றார். சில மாதங்களுக்கு முன்தான், மான்செஸ்டர் சிட்டி கிளப் அணியிலிருந்து, மிலன் அணியில் இணைந்தார். இவருக்கு ஏற்கனவே ரபியல்லா பிகோ என்ற பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பு காரணமாக, ஒரு பெண் குழந்தை உள்ளது. தற்போது, பானி நெகுசா என்பவரைப் புதிதாகக் காதலித்து வருவதால் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து பலோடெலி கூறுகையில்; "நான் நெகுசாவைக் காதலிக்கிறேன். இவளுடன்தான் என் மீதியுள்ள நாட்களையும் கழிக்க வேண்டும். என்னுள் இருந்த திறமையைக் கண்டுபிடிக்க இவர்தான் உதவினார். இதற்காக, இவருக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். இவர்தான் நான் சிறப்பாக செயல்படுவதற்கு காரணம். ரபியல்லாவுடன் காதல் ஏற்பட்டு சர்ச்சை நடந்து அதிக நாட்கள் ஆகிவிட்டன. எனவே, அதைப்பற்றிப் பேச வேண்டாம்" என்றார்.

## சுழற்பந்து வீச்சாளர்கள் பெரிய அளவில் சாதிப்பார்கள் -ராயல் சாலஞ்சர்ஸ் அணியின் முரளி கார்த்திக் தெரிவிப்பு!


BCCL

ஆறாவது ஐ.பி.எல்., தொடர், நாட்டின் முக்கிய நகரங்களில் ஏப்., 3ம் திகதி முதல் மே 26 ம் திகதி வரை நடக்கிறது. இதுவரை நடந்துள்ள ஐ.பி.எல்., தொடரில் அமித் மிஸ்ரா, பியுஸ் சாவ்லா உள்ளிட்ட இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் அதிக விக்கெட் கைப்பற்றி உள்ளனர். இதேபோல இம்முறையும் சுழற்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் என பெங்களூர் ராயல் சாலஞ்சர்ஸ் அணியின் முரளி கார்த்திக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முரளி கார்த்திக் கூறியது: "மிடில்சக்ஸ் அணிக்காக முதன் முதலில் டுவெண்டி-டுவெண்டி போட்டியில் விளையாடினேன். சர்ரே அணிக்கு எதிரான முதல் போட்டியில் 4 ஓவர்கள் பந்துவீசி 39 ரன்கள் கொடுத்து ஒரு விக்கெட் கூட வீழ்த்த முடியவில்லை. அப்போது டுவெண்டி-டுவெண்டி போட்டிகள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமானது இல்லை என நினைத்தேன். ஆனால், தற்போது டுவெண்டி-டுவெண்டி போட்டிகளில் சுழலின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. கடந்த ஐ.பி.எல்., தொடரில், சுழலில் அசத்திய கல்கத்தா அணியின் சுனில் நரைன் 24 விக்கெட் கைப்பற்றி, தொடர் நாயகன் விருது வென்றார்.

ஒவ்வொரு அணியிலும் திறமையான இளம் இந்திய வீரர்கள் நிறைய இருப்பதால், விளையாடும் லெவன் அணியில் இடம் பிடிக்கப் போட்டி நிலவுகிறது. இது, ஆரோக்கியமான ஒன்று. ஐ.பி.எல்., தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் இளம் வீரர்கள், வரும் காலங்களில் தேசிய அணியில் இடம் பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தும் மேடையாக ஐ.பி.எல்., தொடர் திகழ்கிறது. இம்முறை பந்துவீச்சில் மட்டுமல்லாமல், பட்டிங்கிலும் சிறிது கவனம் செலுத்தி வருகிறேன். வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் துல்லியமாகப் பந்துவீசி அணியின் வெற்றிக்குக் கைகொடுக்கப் போராடுவேன்." இவ்வாறு முரளி கார்த்திக் கூறினார்.

## ஆறாவது ஐ.பி.எல். தொடக்கவிழா!

ஆறாவது ஐ.பி.எல்., தொடரின் தொடக்க விழா கடந்த 2ஆம் திகதி கல்கத்தா வண்ண மயமாக நடந்தது. இதில், பொலிவுட் நட்சத்திரங்கள் ஷாருக்கான், கத்ரினா கைப், தீபிகா படுகோனே உள்ளிட்டோர் ஆடிப் பாடி அசத்தினர்.



ஆறாவது ஐ.பி.எல்., டுவெண்டி-டுவெண்டி தொடர் (ஏப். 3- மே. 26) ஆரம்பமாகியுள்ளது. இதில், சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், டில்லி டேர்டெவில்ஸ் உட்பட 9 அணிகள் பங்கேற்கின்றன.





இதன் தொடக்கவிழா கல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் கோலாகலமாக நடந்தது. முதலில் மிகப் பெரிய சிவப்பு பட்டனை மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி அழுத்த, மறுபக்கம் குத்துவிளக்குகள் ஜொலிக்க, விழா அமர்க்களமாகத் துவங்கியது. தொடர்ந்து டிரம்சில் பறந்தவாறு கலைஞர்கள் சாகசம் நிகழ்த்த, சீனப் பெண்கள் மெகா முரசு அடித்து முழக்கம் எழுப்ப, அரங்கில் ஐ.பி.எல்., கோப்பையுடன் அழகிய பெண் ஒருவர் பலூனில் தலைகீழாகப் பறந்து வந்தார். பின் கடந்த முறை சாம்பியன் பட்டம் வென்ற கல்கத்தா அணி கப்டன் காம்பிர் வசம் கோப்பையை அந்தப் பெண் வழங்கினார். அப்போது 9 அணிகளும் 9 கிரகங்கள் போல காட்சி அளிக்கும் வகையில் பலூன்கள் இடம்பெற்றிருந்தன.




அடுத்து பொலிவுட் நடிகை தீபிகா படுகோனே அசத்தலாக நடனமாடினார். தொடர்ந்து ராணி போல் பவனி வந்த கத்ரினா கைப் 'ஷீலா கா ஜவானி' என்ற பிரபல பாடலுக்கு கவர்ச்சி உடையில் நடனமாடி ரசிகர்களைக் கிறங்கடித்தார். கல்கத்தா அணி உரிமையாளரும் நடிகருமான ஷாருக்கானும் அசத்தலாக ஆடி ரசிகர்களை மகிழ்வித்தார். பிரபல பாடகி உஷா உதுப், அமெரிக்காவை சேர்ந்த ராப் பாடகர் பிட் புல் ஆகியோர் ரம்மியமாகப் பாடி உற்சாகம் அளித்தனர். கண்கவர் வாண வேடிக்கையுடன் தொடக்க விழா இனிதே நிறைவு பெற்றது.

விளையாட்டு


புதிய வருடத்தின் புதிய ஆரம்பம்
மிஹின் லங்காவில் பயணியுங்கள்
குயில் கூவும் சங்கீதம், நறுமணம் நிறைந்த பலகாரங்களின் சுவை,
உணர்வுபூர்வமான நம்பிக்கை ஆகியவற்றுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.
இனிய தமிழ் — சிங்கள புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
011 200 22 55
www.mihinlanka.com


செலான் தங்க நகை அடகு சேவை
கை நிறையப் பணம்
மனம் நிறையப் பரிசு
அத்தோடு 2% வட்டி அனுகூலம்
நீங்கள் பெறும் முற்பணத்தொகைக்கு ஏற்ப பரிசுகள் நிச்சயம்
* இச்சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
* நிபந்தனைக்குட்பட்டது.
www.facebook.com/SeylanBank
அழையுங்கள்: 011 200 88 88
+94 11 2456789, +94 11 2456000
+94 11 2456456 info@seylan.lk www.eseylan.com
Brand Finance Rating "A" Fitch Rating:"A-(lka)" PQ 9
1988 - 2013
செலான் வங்கி


வாழ்க்கையின் ஜெயத்திற்கு ஜய ஸ்ரீ
மக்கள் வங்கியின்
ஜய ஸ்ரீ
மாபெரும் பரிசுப் போட்டி 2013
மாதாந்தச் சீட்டிழுப்பில்
x9 1வது பரிசு
100,000/- x 216 2வது பரிசு
10,000/- x 6210 3வது பரிசு
வருட இறுதி மாபெரும் சீட்டிழுப்பில்
x2 ரூ. 10 மில்லியன் பெறுமதியான ஆடம்பர இல்லங்கள் 02 அல்லது
www.peoplesbank.lk
மக்கள் வங்கி


SLT பரிசுகளோடு, தித்திக்கும் புத்தாண்டு
அனைத்து புறோட்பேண்ட் பக்கேஜ்களுக்கும்
மேலதிக பாவனையளவு 30GB வரை இலவசம்
(ஏப்ரல் 01 முதல் 30 வரை)
புதிய புறோட்பேண்ட் இணைப்புகளுக்கு மாதாந்தக் கட்டணத்தில்
100% வரை கழிவு
(முதல் இரு மாதங்கள்)
ஆரம்பக் கட்டணம் இல்லை
அனைத்து புதிய புறோட்பேண்ட் இணைப்புகளுடனும் 4 Port Wi-Fi ரவுட்டர்
விசேட விலை ரூ. 1,990/- க்கு
Thermo Mug ஒன்று இலவசம்
விரையுங்கள். அருகிலுள்ள SLT பிரதேச காரியாலயம் அல்லது டெலிஷொப்பிற்கு வாருங்கள். ஏப்ரல் 30 வரை மட்டுமே.
CITYLINK BROADBAND MEGALINE




இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால், 2013 ஏப்ரல் 10 ஆம் திகதி வெளியிடப்பட்டது.